விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 23 திங்கட்கிழமை (09.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 355

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# சர்வதேச பொறிமுறை மூலமே பொறுப்புக் கூற வைக்க முடியும்

## இலங்கை குறித்து பிரித்தானியா வலியுறுத்தல்



(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என பிரித்தானிய தொழிற்கட்சி மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

பிரித்தானிய தொழிற் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினரும், நிழல் வெளிவிவகார அமைச்சருமான டக்ளஸ் அலெக்ஸாண்டர் பிரித்தானிய தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்த போதே இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

பிரித்தானிய தொழிற் கட்சிக்கான தமிழர் அமைப்பு உள்ளிட்ட பல தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்தச் சந்திப்பில், இலங்கை மற்றும் தமிழ் மக்களின் நிலை குறித்த பல்வேறு பரந்துபட்ட பிரச்சினைகள் தொடர்பில் டக்ளஸ் அலெக்ஸாண்டர் விவாதித்தார். இதன்போது இலங்கையில் இதுவரை காலமும் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும், தற்போது மேற்கொள்ளப் பட்டு வரும் நடவடிக்கைகளும் அங்கு இனப்படுகொலை ஒன்று திட்டமிடப் பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதையே எடுத்துக் காட்டுகிறது என்றும், ஐ.நா "பாதுகாக்கும் கடமை" என்ற தனது கோட்பாட்டினை இலங்கையின் மீது பிரயோகிக்க வேண்டும் என்றும் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில்

19-ம் பக்கம் பார்க்க

## மருதனார்மடத்தில் குண்டுகள் மீட்பு



யாழ். மருதனார் மடம் பகுதியிலுள்ள தோட்டக்காணி ஒன்றிலிருந்து குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உரப்பையில் இடப்பட்டிருந்த நிலையில் இந்தக்குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் குறித்த தோட்டக் காணியின் உரிமையாளர் சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. சம்பவ இடத்திற்கு விரைந்த விசேட இராணுவக் குழுவொன்று இக் குண்டுகளை மீட்டுள்ளனர். (ஏ)

## ஆயிரம் ஏக்கர் நிலம் மல்லாவியில் அபகரிப்பு

### நேரில் பார்வையிட்டார் ரவிகரன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மல்லாவியில் தென்னைப் பயிர்ச் செய்கை என்கிற பெயரில் சுமார் 1000 ஏக்கர் நிலம் அபகரிக்கப்படுவதாக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். குறித்த இடத்திற்கு பிரதேச மக்கள் பிரதிநிதிகளுடன் நேரில் சென்று பார்வையிட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மல்லாவி சிவன் கோயில முன்றலில் குறைகேள் மக்கள் சந்திப்பை நடத்திய துரைராசா ரவிகரன், அங்கு கோயில் நிர்வாகம், வர்த்தகர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக திரளான மக்களிடம் குறைகளை ஒவ்வொன்றாக கேட்டறிந்தார்., இதன்போது மக்கள் துணுக்காய்

19-ம் பக்கம் பார்க்க

## குடும்பக்கட்டுப்பாடு முறைகளை வடக்கில் ஊக்குவிக்க அவசியம் இல்லை

### வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் விளக்கம்



(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில்வேரவில், கிராஞ்சி மற்றும் வலைப்பாடு ஆகிய கிராமங்களில் முறையான சுகாதார வழி காட்டலின் பின்னர், தாய்மார் சுயவிருப்பத்தின் பேரில்கருத்தடையை ஏற்றுக கொண்டாலும், அவர்கள் நிதானமாகச் சிந்தித்து முடிவெடுப்பதற்குரிய கால அவகாசம் வழங்கப்படாமையே இந்த விடயத்தில் குற்ற உணர்வு மற்றும் சமூக நெருக்கீடு ஏற்படக் காரணமாகியுள்ளது என வடமாகாண சுகாதார அமைச்சு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

மேலும், "போருக்குப் பினனரான இந்தக் காலப் பகுதியில், போரினால் உயிரிழப்புக்களைச் சந்தித்துள்ள வடபகுதி மக்கள் மத்தியில் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை ஊக்குவிப்பதற்கான அவசியமோ அவசரமோ தற்போது இல்லை" என்று கருதுவதாக வடமாகாண சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கம் கூறியுள்ளார்.

வேரவில், கிராஞ்சி மற்றும் வலைப்பாடு ஆகிய கிராமங்களில் சுகாதாரத்துறை அதிகாரிகளினால் பெண்களுக்கு கருத்தடை கட்டாயமாக வழங்கப்பட்டிருந்ததாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன.

அதனையடுத்து வடமாகாண சுகாதார அமைச்சு, விசேட விசாரணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை நடத்தியிருந்தது. இந்தக் குழுவின் அறிக்கை வடமாகாண சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கத்தினால்

20-ம் பக்கம் பார்க்க

## கிணற்றினுள் விழுந்த குழந்தை உயிரிழப்பு

அச்சுவேலி வடக்குப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை 03 வயதுடைய பெண் குழந்தையொன்று கிணற்றினுள் தவறி விழுந்து உயிரிழந்துள்ளது.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சிவானந்தன் தர்மினி (வயது 03) என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இந்தக் குழந்தையின் தாய் சமையல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, இந்தக் குழந்தை கிணற்றடிக்குச் சென்று தவறி கிணற்றினுள்

20-ம் பக்கம் பார்க்க

## விசாரணையை எதிர்கொண்டுள்ள கென்ய ஜனாதிபதியை சந்திக்கிறார் மகிந்த

(கொழும்பு)



சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைகளை எதிர்நோக்கியுள்ள கென்ய ஜனாதிபதி உஹுறு கென்யாடாவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அழுத்தங்களுக்கு

20-ம் பக்கம் பார்க்க

## இந்து சமுத்திரத்தில் ஆயுதக் களஞ்சியம் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### இந்திய கடற்படைத் தளபதி தெரிவிப்பு

கடற்கொள்ளையர்களை அடக்கும் நோக்கம் என்று கூறி நாடு ஒன்றின் சட்ட எல்லைக்கு புறம்பாக இந்து சமுத்திரத்தில் மிதக்கும் ஆயுத களஞ்சியம் இயங்கி வருவது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் டி.கே. ஜோஷி தெரிவித்துள்ளார்.

டைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகையிடம் அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச கடல்சார் அமைப்பு (I.M.O), இந்த மிதக்கும் ஆயுத களஞ்சியம் தொடர்பில் பொருத்தமான கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால்

19-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை மீதான தீர்மானத்தை முறியடிக்க முடியாமல் போனது ஏன்

## கேள்வி எழுப்புகிறார்- பீரிஸ்

அமெரிக்காவுடனான உறவுகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் கொண்டு வரப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தை பல நாடுகள் ஆதரித்ததாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2009-ம் ஆண்டு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை முறியடிக்க முடிந்த இலங்கையால் 2012 மற்றும் 2013-ம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட இரண்டு தீர்மானங்களையும் தோற்கடிக்க முடியாமல் போனது ஏன் என்று சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், அமெரிக்காவுடனான உறவுகள் பாதிக்கப்பட்டுவிடும் என்பதற்காவே இலங்கை மீதான தீர்மானங்களை தாம் ஆதரிப்பதாக சில நாடுகள் எம்மிடம் கூறியுள்ளன.

2011-ம் ஆண்டில் இலங்கை மீது தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரப்போவதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் எம்மிடம் கூறியிருந்தார். ஆனால் அத்தீர்மானத்துக்கு போதிய ஆதரவு கிடைக்காததால் அவர்களால் அதனைச் செய்ய முடியவில்லை.

இந்நிலையில் இலங்கை மீது அமெரிக்கா தீர்மானத்தைக் கொண்டு வர நடவடிக்கைகளை மேற்கொண்ட போது, நிலைமை முற்றாகவே மாறி விட்டது என்று மேலும் தெரிவித்துள்ளார். (எ-4)

## இலங்கை மீனவர்கள் கைது இந்தியத் தூதருக்குக் கடிதம்

இலங்கை மீனவர்கள் அநீதியான முறையில் கைது செய்யப்படுவதை எதிர்த்து சிலாபம் ஆழ்கடல் மீன்பிடி சங்கம் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இந்தியா கடலோர காவற்படையினரால் இலங்கை மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு எதிரான எதிர்வரும் நாட்களில் கடும் நடவடிக்கைகளில் இறங்க போவதாக குறித்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவின் இந்த நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என சிலாபம் ஆழ்கடல் மீன்படி சங்கத்தின் தலைவர் சுஜித் சமந்த தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மட்டும் 50 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் 8 மீன்பிடி படகுகள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் கடந்த 13 நாட்களில் மட்டும் 98 மீனவர்கள் இந்திய கடலோர காவற்படையினரால் கைது செய்யப்பட்டனர். நேற்று முன்தினம் 13 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். (எ-2)


## பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தினம்

(பூந்தோட்டம்)

சர்வதேச மனித உரிமைகள் தினமாகிய டிசம்பர் 10 அன்றுவவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் வவுனியாவில் மனித உரிமைகள் தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

வவுனியா நகரசபை உள்ளக அரங்கில் டிசம்பர் 10 அன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மனித உரிமைக்காக குரல் கொடுப்பவர்களின் விசேட உரைகளும், மனித உரிமை சார்ந்த பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற இருப்பதோடு காணாமல் போன குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகளுக்கு 2014-ம் வருடத்துக்கு தேவையான கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் மனித உரிமைக்காக குரல் கொடுக்கும் சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், அரசு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கிராம மாதர் அபிவிருத்தி சங்கங்களினுடைய பிரதிநிதிகள், வர்த்தக பிரமுகர்கள், மாவட்டத்தின் உள்ள சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு அழைப்பு விடுத்துள்ளது. (எ-266)



நல்லூர் வடக்கு அருள்மிகு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற கஜமுக சங்காரத்தின் போது...

## அரசாங்கத்தின் மீது ஹெல உறுமய அதிருப்தி

அரசாங்கத்தின் கூட்டணி கட்சியான ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்துடன் அதிருப்தியில் இருப்பதாக தெரியவருகிறது.

கடந்த காலங்களில் இரண்டு தரப்புக்கும் இடையில் சிறிய முரண்பாடுகள் ஏற்பட்டன. கசினோ பிரச்சினை, மாகாண சபைகளின் அதிகாரங்கள் தொடர்பில் ஹெல உறுமய கொண்டிருந்த நிலைப்பாடுகளுக்கு அரசாங்கம் இணங்கவில்லை.

இதனிடையே வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதில் உள்ள சாதகமற்ற நிலைமைகள் தொடர்பில் ஹெல உறுமய கவனம் செலுத்தியிருந்தது.

மிஹின் லங்கா மற்றும் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டமை குறித்து அந்த கட்சி தனது அதிருப்தியை வெளியிட்டது.

இந்த நிலையில் ஜாதிக ஹெல உறுமய வரவு செலவுத் திட்டத்திற்கு செயற்பட தயாராகி வருவது பற்றிய பேச்சுக்கள் அடிபட்டன.

எனினும் இறுதியில் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க அந்த கட்சி முடிவு செய்துள்ளது. (எ-4)

## இலங்கை படையினருக்கு எதிராக ஜேர்மனியில் வழக்குத் தாக்கல்?

இலங்கை படையினர் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ரோமை மையமாகக் கொண்டு இயங்கி வரும் நிலையான மக்கள் நீதிமன்றத்தினால் இந்த விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வியட்நாம் யுத்த காலத்தில் இந்த நீதிமன்றம் நிறுவப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனியின் பேர்ன் நகரில் இந்த வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

சர்வதேச மனித உரிமை கூட்டமைப்பு மற்றும் இலங்கை சமாதானத்திற்கான அயர்லாந்து அமைப்பு ஆகியன இலங்கை அரச படையினருக்கு எதிராக குற்றம் சுமத்தியிருந்தன.

இந்த நீதிமன்றின் முதல் கட்ட விசாரணைகள் டப்ளினில் கடந்த 2010-ம் ஆண்டு நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை யுத்தத்திற்கு பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை யுத்தத்தில் குறித்த நாடுகளின் பங்களிப்பு குறித்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலியின் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று இலங்கை படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டமை தொடர்பில் நேற்று முன்தினம் ஜேர்மனியில் வழக்கு விசாரணை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த வழக்கிற்காக 11 நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு எதிரான இந்த வழக்கின் முறைப்பாட்டாளர் வட அயர்லாந்தின் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றை நடத்தும் யூட்லால் பெர்ணான்டோ என்பராவார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த வழக்கில் 10 பேர் சாட்சியமளிக்க உள்ளனர்.

வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 10-ம் திகதி வெளியிடப்படும்.

ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஈழத் தமிழர்களை இலங்கை படையினர் கொலை செய்ததாக குற்றம் சுமத்தி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும் இந்த நீதிமன்ற விசாரணைகள் மூலம் தீர்ப்புக்களை வழங்கினாலும் இதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கோ ஆட்சியாளர்களுக்கோ எத்தகைய தண்டனைகளையும் வழங்கும் அதிகாரம் இல்லை என்பதுடன் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று எத்தகைய அழுத்தத்தை கொடுக்க முடியுமோ அதனையே இந்த தீர்ப்பாயம் ஏற்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)


### சித்தா மருத்துவம்

வாதம், பாரிசவாதம், அழல்வாதம், சிறுநீர் அழற்சி, சூதகவலி, பாலியல் குறைபாடு, வெள்ளைபடுதல், அதி இரத்த அழுத்தம், நெஞ்சுக்குத்து, நரம்புத் தளர்ச்சி, உடல் மெலிவு, பருமன், சோறியாசிஸ், கிரந்தி, கரப்பன், குளோகோமா, இளநரை, பொடுகு, கண்நோய் சம்பந்தப்பட்ட நோயாளர்களை பார்வையிடுவதற்காக பேரறிஞர் சிறப்பு ஆலோசகர் டாக்டர் கே. பாலசுப்பிரமணியம் அவர்களை 10, 11, 12, 13/12/2013-ம் திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம். (4802)

சந்திப்பதற்கு தொலைபேசி
0777047371, 0757390195, 0771005971
Dr.K.சிவானந்தன்
ஆனந்தா வைத்திய நிலையம்
காவல்துறை அருகாமை
ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.



### காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் 1-ம் நாள் திருவிழா



ஆதியும்அந்தமும்
இல்லாதான்
ஆன்றோர் முதல் சான்றோர்
வரை ஆதரிக்கும்
ஆதிரையான்
அன்பர்களை நோக்கி
அடியெடுக்கும் மார்கழியில்
மௌனமாக இருந்து
ஊர்முழுவதும்
விழாக்கோலம் காணும்
உண்மை விழா இதுவாகும்
ஊர்மக்கள் உலகமக்கள்
உள்ளம் உவந்து
வாழ்த்துவோம்.
காரை S.கெங்காதரன் (c-5720)

அனுசரணை
கஜமுகன் ஹாட்வெயார்
147,149 Stantaly Road
Jaffna



### பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்
• பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே • மசாலா தோசை 120/- மட்டுமே
தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829 (சி-5713)



### கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்



தோற்றம் 1984 - 11 - 02 | மறைவு 2013 - 12 - 03

அமரர்
ஹேமலதா சிறிதரன்



தோற்றம் 1947 - 08 - 03 | மறைவு 2013 - 12 - 03

அமரர்
சறோஜினிதேவி சிறிதரன்

எமது கல்லூரி ஆசிரியை செல்வி உமையாள் சிறிதரன் அவர்களின் சகோதரி மற்றும் தாயார் ஆகியோரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களது ஆத்ம ஈடேற்றத்திற்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

...நெல்லியடி மத்திய கல்லூரி | கல்லூரிச் சமூகம் (C-5722)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பந்த பாசம்

போதிவனம் அமைதியாக இருந்தது. காற்று இலேசாக வீசிக் கொண்டிருந்தது.

இலைகள் மெதுவாக அசைந்து கொண்டிருந்தன. போதிசத்துவர் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவரைச் சந்திப்பதற்காக ஒரு நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒருவர் காத்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவர் மெதுவாக கண்ணை திறந்தார்.

இவன் உடனே அவரது காலில் விழுந்து வணங்கினான்.

"உனது பெயர் என்னப்பா?" என்று கேட்டார்.

"அபி நந்தன்" என்றான் அவன்.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"தேவா, நான் ஒரு ஏழை எனக்கு மனைவியும் மூன்று பிள்ளைகளும் உள்ளனர். பந்த பாசங்களில் மாட்டிக் கொண்டு நான் சித்திரவதைகளை அனுபவித்து விட்டேன். அது தான் உங்களிடம் வந்தேன். நீங்கள் தான் என்னைத் துறவியாக்க வேண்டும். ஞான மார்க்கத்தை காட்ட வேண்டும்" என்றான்.

போதிசத்துவர் சிறிது நேரம் யோசித்தார். பின்னர், "அபிநந்தா, இந்த மரங்களிலுள்ள இலைகளெல்லாம் ஏன் அசைகிறது தெரியுமா? காற்று வந்து மோதும் போது இப்படி ஆகிறது.

அது போலத்தான் பாசம் என்னும் காற்று வந்து மோதும் போது மனித இலைகள் இப்படித்தான் ஆடும். முதலில் உன்னுடைய மனதிலிருக்கும் பாசத்தை அறவே விட்டுவிட வேண்டும். அது உன்னால் முடியுமா?" என்று கேட்டார்.

"முடியும்" என்றான் அவன்.

"சரி, அப்படியானால் நீ இன்றிலிருந்து இந்த போதிவனத்திலேயே தங்கலாம்" என்று சொல்லிவிட்டார் போதிசத்து;வர்.

அபிநந்தன் அங்கேயே தங்கினான். சிறிது நாட்களில் அபிநந்தனுடன் ஒரு நாய்க்குட்டி வந்து ஒட்டிக் கொண்டது.

போதி சத்துவர் பார்த்தார்.

"என்னப்பா இது?" என்றார்.

"பிரபு இந்த நாய் எப்பொழுதும் என்னை விட்டுப் பிரிந்ததில்லை. இதை மட்டும் வைத்திருப்பதற்கு அனுமதி கொடுங்கள்" என்றான்.

போதிசத்துவர் சிரித்துக் கொண்டே போய்விட்டார். சிறிது நாட்களில் கழிந்து அந்த நாய்க்குட்டிக்குப் பக்கத்தில் ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான்.

"அபிநந்தா யார் இந்த சின்னப்பையன்?" என்று கேட்டார் இவர்.

"பிரபு இவன் என் மகன். இந்த நாயைப் பிரிந்து இவனால் இருக்க முடியவில்லை. அதனால் இவனை மட்டும்... என்று இழுத்தான். போதிசத்துவர் இப்பொழுதும் சிரித்துக் கொண்டே போய்விட்டார்.

சிறிது நாட்களில் ஒரு பெண் வந்து சேர்ந்தாள்.

"அபிநந்தா யார் இவள்?" என்று கேட்டார்.

"தேவா, இவள் எனது மனைவி மகனை விட்டுட்டு ஒரு விநாடியும் இருக்க முடியவில்லை. அதனால் தான் இவளையும்..." என்று இழுத்தான்.

போதிசத்துவர் சிரித்தார்.

2 பாத்திரங்களை எடுத்தார். ஒன்றில் நிறைய பண்டங்கள் இருந்தன. இன்னொரு பாத்திரம் காலியாக இருந்தது. பண்டங்கள் இருந்த பாத்திரத்தை தண்ணீரில் விட்டார். அது அப்படியே மூழ்கி அடியில் போய்விட்டது. காலிப் பாத்திரத்தை தண்ணீரில் விட்டார். அது மிதந்து கொண்டிருந்தது. போதிசத்துவர் சொன்னார்:

கனமான பாத்திரம் அமிழ்ந்து விட்டது. காலியான பாத்திரம் மிதக்கிறது. காலிப்பாத்திரம் இருக்கிறதல்லவா அது ஞானப் பத்திரம். கனமான பாத்திரம் என்பது பாசப்பாத்திரம்.

அபிநந்தா உதிர்ந்து போக விரும்பும் உரோமங்கள் உதிர்ந்து விடுகிறது. உதிர விரும்பாத உரோமங்கள் நரைத்து விடுகிறது. உதிர்ந்த முடி ஓடிப்போய் விடுகிறது. உதிராத தலைமுடி இருந்து கொண்டே கேலி பண்ணுகிறது. விலக்க முடியாத பந்தங்களும் அப்படிப்பட்டது தான். உன்னுடைய இதயம் பாசத்துக்காகவே படைக்கப்பட்டது. சித்திரவதை என்பது நீ அதற்கு கொடுத்தே தீர வேண்டிய விலை போய்வா" என்றார்.

அதனால், நான் துறவியாகப் போகிறேன். ஞானியாகப் போகிறேன் என்பதெல்லாம் சொல்வது சுலபம். ஆனால், செயற்படுத்துவது மிகவும் கஷ்டம்.

ஆசையை விட்டுவிடுவதற்கு மனிதன் பழகிக் கொள்ள வேண்டும். அதற்காகத் தான் சில புண்ணிய நதிகளில் போய் மூழ்கி நமக்கு பிடித்தமான எதையாவது விட்டுட்டு வரவேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். நம்மைப்போல ஒருத்தர் அந்த இடத்துக்குப் போனார். புண்ணிய நதிகளில் மூழ்கி நிஜமாகவே சில ஆசைகளையெல்லாம் விட்டுவிட வேண்டும் என்ற நோக்கில் தான் போனார். மூக்கைப்பிடித்துக் கொண்டு மூழ்கி எழுந்தார். வெறுங்கையுடன் வெளியில் வந்தார். பக்கத்திலிருந்த நண்பர் "இப்ப எப்படி இருக்கிறது" என்று கேட்டார்.

"மனம் நிறைந்து விட்டது. இனிமேல் அடிக்கடி வந்து இப்படி முழுக்குப்போடலாம் என்று தோன்றுகிறது' என்றார் இவர்.

"ஏன்?" என்று கேட்டார் நண்பர்.

"நான் தண்ணீரில் மூழ்கும் வரை எதையாவது விட்டுவிடலாம் என்ற ஆசையில் தான் போனேன். ஆனால் தண்ணீருக்கு அடியில் போய்ப் பார்த்தால் ஏற்கனவே யாரோ வீசியெறிந்த தங்க காப்பு ஒன்று தட்டுப்பட்டது. உடனே என்முடிவை மாற்றிக் கொண்டேன். சம்சாரத்துக்கு உதவுமே என்று சொல்லி அதை எடுத்து மடியில் செருகிக் கொண்டு வந்து விட்டேன்" என்றார்.

இவருடைய மனைவி மிகவும் கொடுத்து வைத்தவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அர்த்தமற்ற தெரிவுக்குழுவுக்கு யோசனை முன்வைக்க முடியுமா?

**சுரேஸ் எம்.பி.கேள்வி**

காலத்தை கடத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள அர்த்தமற்ற நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு யோசனைகளை முன் வைப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. எனவே நாம் அரசாங்கத்துடன் முக்கிய சில விடயங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டும்.

அதன் பின்னரே நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொள்வதா அல்லது யோசனைகளை முன் வைப்பதா என்ற முடிவுக்கு வரமுடியும் என தமிழ்த் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார.

இனப்பிரச்சினைக்கான தீர்வு காணும் முகமாக அரசாங்கம் பல்வேறு குழுக்களை அமைத்து பல கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தி அறிக்கைகளை தயாரித்து கடைசியில் அவற்றையெலலாம் குப்பைத் தொட்டியில் போட்டது.

இவ்வாறான நிலையில் நாம் எப்படி நாடாளுமன்ற தெரிவுக் குழுவை நம்புவது என அவர் கேள்வி எழுப்பினார.

இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டும் முகமாக அமைக்கப்பட்டுளள நாடாளுமன்ற தெரிவுக் குழுவில், தமிழ் கூட்டமைப்பு கலந்து கொள்ளாவிடினும யோசனைகளையாவது முன் வைக்கும் என நம்புவதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருநதார்.

அது தொடர்பில் சுரேஸ் எம்.பியிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கம் அமைத்துள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் நாம் கலந்துகொள்ள போவதில்லை என்று உறுதியாக கூறியிருநதோம்.

இவ்வாறான நிலையிலேயே அமைச்சர் தினேஷ் குணவர்தன இப்படி கூறியுள்ளார்.

உண்மையில் நாம் எமது ஆலோசனைகளை நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு அனுப்பிவைத்தால் அதனை அவரகள் ஒன்று கூடி நிராகரித்ததாக அறிவிப்பார்கள். எனவே அவ்வாறான ஒரு அர்த்தமற்ற வேலையை நாம் செய்ய தயாராக இல்லை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கமில்லாமல் வெறுமனே காலத்தை கடத்தி அவ்வப்போது ஏற்படும் அழுத்தங்களை சமாளிப்பதற்காக அரசாங்கம் அரங்கேற்றும் நாடகத்தில் நாம் கலந்துகொள்ள மாட்டோம்.

எனவே, காணிபொலிஸ அதிகாரங்கள் நிதி நிர்வாகம மற்றும் சட்ட ஒழுங்கு போன்ற விடயங்கள் தொடரபாக நாம் அரசுடன் பேச வேண்டும்.

அதன் பின்னர் அந்த உடன்பாட்டின் அடிப்படையிலான ஆலோசனைகளை நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் சமர்ப்பிக்க முடியும் என்றால அதனை செய்யலாம்.

அரசாங்கம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது சூழ்ச்சி வலையில் எம்மை சிக்க வைக்கவே பாரக்கிறது. அது எமக்கு நன்றாக தெரியும்.

எனவே இந்த அரசாங்கம் அவற்றையெல்லாம கைவிட்டு இதய சுத்தியோடு இனப்பிரச் சினைககான தீர்வு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# வன்முறைகளுக்கு எதிராக நீதி கோரும் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர்களினால் முன்னெடுக்கப்படும் "பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளுக்கான நீதி கோரும் பிரசாரம்" எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 7.30 மணிக்கு முகமாலைச் சந்தியிலிருந்து ஊர்வலத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரியில் யாழ்.அரச அதிபரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வரும் பிரசார ஊர்தி முகமாலை சந்தியில் வைத்து வரவேற்கப்பட்டு தொடர்ந்து ஏ 9 வீதி வழியாக ஊர்வலமாக யாழ்.நகரத்தை வந்தடையவுள்ளது.

இதன்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான சட்டம், உதவி பெறுவதற்கான தகவல் பரிமாற்றம், பெண்களினால் தயாரிக்கப்பட்ட கைப்பணிப் பொருட்கள், உணவுப் பொருட்களின் விற்பனையுடன் கூடிய கண்காட்சி, பொலிஸாரின் தகவல் நிலையம் மற்றும் அக்கரைப்பற்றில் ஆரம்பித்து பல மாவட்டங்களில் நடத்தப்பட்டுவரும் நிகழ்வுகளின் காட்சிப்படுத்தல் போன்றவை உள்ளடக்கவுள்ளன. (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 40 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 70-110 | 100-120 | 110 | 90 |
| பச்சைமிளகாய் | 50-80 | 70 | 80 | 80 |
| தக்காளி | 35 | 30 | 40 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 | 40 |
| கோவா | 20 | 20 | 30 | 50 |
| கரட் | 40 | 40 | 60 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 | 50 |
| புடோல் | 20 | 40 | 30 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 120-230 | 200 | 200-220 | 200 |
| பெரிய வெங்காயம் | 60-110 | 160 | 120 | 120 |
| பாகற்காய் | 80 | 80 | 40 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 20 | 40 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 40 | 60 |
| பயற்றங்காய் | 120-150 | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 60 | 90 | 60-80 | 80 |
| பீற்றூட் | — | 40 | 30 | 80 |
| கறிமிளகாய் | 110 | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 100-150 | 60 | — | 160 |
| போஞ்சி | 120 | 100 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 10-20 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 80-120 | 100 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 35 | 35-45 |
| இராசவள்ளி | 180-220 | 180 | — | 200 |

# இராசி பலன்

*09.12.2013*
*(கார்த்திகை 23, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு*
*சப்தமி பிற்பகல் 3.19 மணிவரை*
*சதயம் முன்னிரவு 8.06 மணிவரை*
*இராகுகாலம் 7.48-9.18 மணிவரை*
*சுபநேரம் 12.18-1.48 மணிவரை*
*திருவெம்பாவை பூஜை ஆரம்பம்*

**மேடம்** வருமானம் அதிகரிக்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பிறர் உதவியுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், வேலைச்சுமை கூடும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** கனவு பலிதமுண்டு, சொந்தபந்தங்களின் ஒத்துழைப்பால் உள்ளம் மகிழும் நாள், புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி** எதிரிகள் உதிரியாகும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், உடல் நலன் சீராகி உற்சாகமடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**துலாம்** சிவாயநம என்று சொல்லி சிறப்படைய வேண்டிய நாள், பிள்ளைகளால் பெருமையடைவீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** தெய்வானுகூலத்தால் சிறப்புகள் வந்து சேரும் நாள், உறவினர்கள் உங்களுக்கு பக்கபலமாக செயற்படுவார்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலை உயரும்.

**மகரம்** கல்யாண கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், காணாமற்போன பொருளொன்று, மீண்டும் கைக்கு கிடைக்கலாம், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், விரதம், வழிபாடுகளில் கவனம் செலுத்துவீர்கள்.

**மீனம்** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், தேவையற்ற மனஸ்தாபங்களும் ஏற்பட வாய்ப்புண்டு, சுப செலவுகள் கூடும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி பிரதேசத்தில் டெங்குநோய்த் தாக்கம்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு பெரும்பாலானோர் இலக்காகி யுள்ளதாக பிரதேச சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப்பிரதேசத்தில் ,குறுகிய காலப்பகுதியில் சுமார் முப்பதிற்கும் மேற்பட்டோர் டெங்கு நோய்த்தாக்கம் உள்ளவர்களாக இணங்காணப் பட்டுள்ளனர்.


இவர்களில் பத்திற்கும் மேற்பட்டவர்கள் புத்தளைக் கிராமத்தைச் சேர்ந்தவர்களென சுகாதாரத்திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

அத்தோடு டெங்கு நோய்த் தாக்கத்திற் குள்ளானவர்களாக இனங்காணப்பட்டவர்களில் அதிகமானோர் கொழு ம்பு பகுதிக்குச் சென்று அங்கு தங்கியிரு ந்து வந்தவர்கள் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே உயிர்கொல்லியான டெங்குநோயினை வராமல் தடுப்பதற்கு பொது மக்கள் விழிப் புடன் செயற்பட வேண்டுமென சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ-9-10)




யாழ்.செய்திகள்




# சர்வதேசத்தை ஏமாற்றவே இழப்பீட்டு கணக்கெடுப்பு

## அமெரிக்க பிரதிநிதிகளிடம் வடக்கு அமைச்சர்கள் சுட்டிக்காட்டு

முள்ளிவாய்க்கால் மண்ணில் மட்டும் எமது மக்கள் கொல்லப்படவில்லை.தாயகம் முழு வதிலும் எமது மக்கள் கொல்லப்பட்டார்கள்.

இவ்வாறு தமிழ்இனம் தொடர்ந்தும் அழிக் கப்பட்டு வருகின்றது. அவ் அழிவுகளையும் குறைத்து மதிப்பிட்டு அரசு சர்வதேசத்திற்கு காட்டி வருகின்றது.

சர்வதேச அழுத்தத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவும் இங்கு இனஅழிப்பு நடைபெற வில்லை என சர்வதேசத்தை ஏமாற்றுவதற் கும் தற்போது பேரழிவுக் கணக்கெடுப்பை அரசு மேற்கொள்கின்றது என நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த அமெ ரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிக ளிடம் வடக்கில் பல்வேறு தரப்பினரும் எடுத்து ரைத்துள்ளனர்.

முல்லைத்தீவு, திருகோணமலை என பல இடங்களுக்கு சென்ற அமெரிக்க அதி காரிகள் நேற்று முன்தினம் யாழ்.மாவட்டத்திற் கும் வருகை தந்தனர்.

இவ்வாறு யாழ்.மாவட்டத்திற்கு வருகைதந்த அமெரிக்க குழுவில், அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் வெளிவிவகார குழுவின் செனட்டர் டேமியன் முர்பே, அமெரிக்க இரா ஜாங்கத் திணைக்களத்தின் வோஷிங்டன் பிரதிநிதி மரியா ரெரியோ, இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் தலைமை அரசியல் அதிகாரி மைக்கல் ஹெராங்ஸ்ரன் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

இக்குழுவினர் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்கும் குறிப்பாக உயர் பாதுகாப்பு வலய எல்லைகளுக்கும் சென்றதோடு வடக்கு மாகாண சபையின் கல்வியமைச்சர் த.குரு குலராஜா, வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோரையும் சந்தித் திருந்ததோடு பல்வேறு இடத்து மக்களையும் சந்தித்திருந்தனர்.

இச்சந்திப்புக்களின் போதே அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரிகளிடம் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழர் வாழ்விடங்கள் அழித்தும் காணிகளை இராணுவம் அடாத்தாக பிடித்தும் வருகின்றது.

யுத்தம் முடிந்துள்ளபோதிலும் இன்னும் வடக்கில் அடக்குமுறைகள் மேலோங்கியே யுள்ளன.

தமிழர்கள் ஒன்றும் கூறமுடியாதவர்களா கவும் அநியாயத்திற்கு எதிராக குரல் கொடுக்க முடியாதவர்களாகவும் உள்ளனர்.

பேரழிவுக் கணக்கெடுப்பில் காணாமல் போனவர்களை உள்ளடக்காமல் வெளியுலகை ஏமாற்ற அரசு முயற்சிக்கின்றது.

அடுத்த வருடம் ஐ.நா.மனிதவுரிமைகள் சபைக்கு கணக்கு காட்டுவதற்கே இந்த பேரழிவு கணக்கெடுப்பை அரசு மேற்கொள்கின்றதே தவிர அவற்றால் எந்தப் பயனும் தமிழர்களுக்குக் கிடைக்காது.

ஆகையால் நாம் அரசின் அட்டூழியத்திற்கு எதிராக குரல் கொடுக்க முடியாதவர்களாகவே அடிமைப்பட்டும் இங்கு வாழ்கின்றோம்.

ஆகவே அமெரிக்காவால் கொண்டுவரப் படுகின்ற பிரேரணை தனியே போர்க்குற் றத்தை மட்டும் பிரதிபலிக்காமல் எம்மீது இடம் பெறுகின்ற அடக்குமுறைகள் தொடர்பிலும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி அப் பிரேரணை சமர்ப்பிக்கவேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இதேவேளை அமெரிக்க இராஜாங்க திணைக் களஅதிகாரிகள் யாழ்.வந்திருந்தபோது வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். வடக்குமாகாண ஆளுநர் மேஜர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கொழும்பில் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-4)

# நாகர் கோயில் வரை பேருந்து சேவையை வழங்குங்கள்

(தும்பளை)

இலங்கை போக்குவரத்துச் சபையின் 762 வழித்தட இலக்கப் பேருந்தின் காலை 7.30 மணி சேவையை நாகர் கோயில் பகு திக்கும் வழங்குமாறு அரச உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பேருந்து பருத்தித்துறையிலிருந்து காலை 7.30 மணிக்கு புறப்பட்டு நாகர் கோயில் பகுதிக்குச் சென்று வடமராட்சி கிழக்குப் கட்டைக் காடு வரை சேவையை வழங்க வந்தது.

ஆயினும், தற்போது பாடசாலைகள் மூன் றாம் தவணை விடுமுறை விட்டுள்ளதாக காரணம் காட்டி இப் பேருந்து சேவை நாகர் கோவில் பகுதியில் இடம்பெறவில்லை.

இதனால் அரச உத்தியோகத்தர்கள் பாதிக் கப்பட்டுள்ளனர்.

அத்தோடு நாகர்கோவில் பிரதேசத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டுமல்லாது அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பெற்றுக் கொள்கின்றனர் என சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனவே, 762 வழித்தட இலக்க பேருந்தின் காலை 7.30 மணிக்கான சேவையினை நாகர் கோவில் பகுதிவரைக்கும் வழங்குமாறு அரச உத்தியோகத்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-19)

# இணையத்தளம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் உத்தியோகபூர்வ இணையத்தளம் கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று பாட சாலை அதிபரினால் சம்பிரதாய பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இவ் இணையத்தளத்தை www.unioncollege.lk எனும் இணையத்தள முகவரி யூடாக பார்வையிடமுடியும். (அ-5)

# கலைவிழா

கைதடி நவபுரம் நவசக்தி முன்பள்ளியின் வருடாந்த கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நவபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் முன்பள்ளியின் முகா மைத்துவக் குழு தலைவி திருமதி அன்பழகன் மதனா தலைமையில் நடைபெறவுள்ளது.


இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் ஆரம்ப பிள்ளை அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் செல்வி ஜெயாதம்பையா கலந்து கொள்ளவுள்ளார்.

விசேட விருந்தினராக பண்டாரவளை கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப் பாளர் சிவசம்பு மதியழகன் கலந்து கொள்ள வுள்ளார். (அ-5-254)

# பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் சங் கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர் வாகத் தெரிவும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

சங்கத் தலைவர் எஸ்.ஜெயக்குமார் தலை மையில் நடைபெறும் இக்கூட்டத்தில் இவ் வருடம் கோண்டாவில் பிரதேசத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர் கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (அ-9-10)





சுன்னாகம் வட்ட லயன்ஸ் கழக தலைவரும் வலி .தெற்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன் எஸ். கரிகரனின் நிதி உதவியுடன் ஈவினை கிழக்கிலுள்ள வறுமைக் கோட்டின் வாழும் குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கலையரசி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வடமாகாண ஆளும் கட்சி உறுப்பினரான பா.கஜதீபன் கலந்து கொண்டிருந்தார். இந்நிகழ்வில் லயன் எஸ்.கரிகரன் மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணம் வழங்குவதையும் இவ்வாறு கற்றல் உபகரணங்களை பெற்றுக் கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- புன்னாலைக் கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துடன் இணைவாரா முன்னாள் இராணுவத் தளபதி?

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகாவை அரசாங்கத்துடன் இணைத்து கொள்வதற்கான முனைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமாக கடந்த சில நாட்களாக சில சுற்றுப் பேச்சுவார்த்தைகள் அரசாங்க தலைவர்களுக்கும் பொன்சேகாவுக்கு இடையில் நடைபெற்றுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சரத்பொன்சேகாவை அரசாங்கத்துடன் இணைக்கும் முயற்சி தோல்வியடைந்தால், அவரை அரசியல் ரீதியாக வலுப்படுத்தி ஏனைய எதிர்க்கட்சிகளுக்கு சவால் விடும் அளவில் அவரது கட்சியை வளர்த்தெடுப்பது தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாத இறுதிக்குள் இந்த நடவடிக்கைகளை நிறைவு செய்ய அரசாங்கம் எண்ணியுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

அத்துடன் மார்ச் மாதத்திற்கு முன்னதாக சரத் பொன்சேகாவின் குடியுரிமையை மீண்டும் அவருக்கு வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (அ-2)

# கிராமங்களின் பிரச்சினைகளுக்கு கிராமங்களிலேயே தீர்வுகாண வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கிராம புறங்களில் வாழ்ந்து வரும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண கிராமத்திற்குள்ளேயே தீர்வுகளைகாணும் முறையொன்று அவசியம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிபில பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் வறுமை நிலைமையை மேலும் குறைக்க வேண்டும். அரசாங்கம் கமத்தொழில் மற்றும் சம்பிரதாய உரிமைகள் தொடர்பில் கடும் நம்பிக்கைகளை கொண்டுள்ளது. நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள பாரிய அபிவிருத்தியின் பலாபலன்களை கிராமிய மக்களும் அனுபவித்து வருகின்றனர்.

நாட்டின் எதிர் கால சந்ததியினரை ஆரோக்கியமானவர்களாகவும் வலுவானவர்களாகவும் உருவாக்கி நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்ல சகலரும்நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார். (அ-2)


## கைவிடப்பட்ட வாகனங்களின் ஏல விற்பனை

கைவிடப்பட்டு பயன்படுத்த முடியாத மோட்டார் சைக்கிள்கள்

இடம்: மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
திகதி:-11.12.2013 புதன்கிழமை

வாகனங்களை 10.12.2013 ஆம் திகதி காலை 9.00மணியிலி ருந்து 3.00 மணிவரை பார்வையிடலாம். வாகனங்களை ஏலத்தில் எடுப்பதாயின் ஏலவிற்பனை தினத்தன்றே உடனடியாக பணத்தினை செலுத்தி அவற்றினை பொறுப்பேற்றல் வேண்டும்.

திருமதி.றூ.கேதீஸ்வரன்
பெறுகைக்குழுத்தலைவர்,

மாவட்டச் செயலாளர்,
மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

(சி/5685)



மக்கள் வங்கியின்

சிறிய மற்றும் நடுத்தர வியாபார நிலையம்
(Small and Medium Enterprise Centre)

திறப்பு விழா

தொழில் முயற்சியாளர்களுக்கு பிரத்தியேகமான நிதிசார்
துணைச் சேவைகளினை வழங்கும் நிலையம்
மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர்
திரு.T.A. ஆரியபால
(கூட்டுறவு அபிவிருத்தி வங்கியியல்)
அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது

காலம்:- 2013.12.09 (திங்கட்கிழமை)
நேரம்:- காலை 10.05 மணி
இடம்:- பிராந்திய தலைமைக் காரியாலயம்
மக்கள் வங்கி, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமையாளர்
SME நிலையம்
மக்கள் வங்கி, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5712)



## பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (புஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை
- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:-இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829

(சி/5683)



சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் அனுசரணையுடன்
மெண்டலின் சிவகுமாரின் லலித ஷேஸ்திரா

வழங்கும்

Saxovil Fusion Concert



சக்ஸபோன்- காஞ்சி காமகோடி ஆஸ்த்தான வித்துவானும்
பத்ம ஸ்ரீ கதிரிகோபாலநாத் அவர்களின் பிரிய சிஷ்யனும்
திரு. E.R.ஜனார்தன்
மெண்டலின்: திரு.E.R. ஜனார்தன் அவர்களின் முதல் சிஷ்யன்
திரு.வி.சிவகுமார சர்மா
வீணை:- ஸ்ரீமதி T. வீணா காயத்திரி
மிருதங்கம்:- திரு.N. ராமகிருஷ்ணன்
தவில்:- தவில் மேதை தட்சணாமூர்த்தியின் புதல்வன் பிரபல
தவில் வித்துவான் திரு.த.உதயசங்கர்
ட்ரம்ஸ்,
தபேலா:- திரு. M. மெஹர்ஸ்ரீ

அனுமதி இலவசம்



இடம் : நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபம்
காலம் : 10-12-2013 நேரம் : மாலை 4.00 - 7.00 மணி வரை



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>கி.பா: 49 .25 செவ் 12 ல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: A/L / இலிகிதர்<br>தொ.இ: B/262 | பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 19 .5 செவ் 7 ல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: HNDA / NGO<br>தொ.இ: G/333 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 9.75 உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: O/L / அரச ஒப்பந்தகாரர்<br>தொ.இ: B/301 | பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 36 .25 செவ் 12 ல்<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்: HNDA / கணக்காளர் (தனியார்)<br>தொ.இ: G/364 |
| பிறப்பு: 1975 இந்து (V)<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 30 செவ் 1 ல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: O/L / வியாபாரம், சுயதொழில்<br>தொ.இ: B/308 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 57 .75 உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: BSc Sciences / பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ: G/366 |
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 24 செவ் 8 ல்<br>தகைமை/தொழில்: O/L / சாரதி<br>தொ.இ: B/367 | பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 16 செவ் 4 ல் உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: BBA / நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ.இ: G/368 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசினோ சூதாட்டத்தால் இளையோருக்கு அழிவுதான்

## ரூவான் எம்.பி. தெரிவிப்பு

கசினோ சூதாட்டத்திற்கு எதிரானவர்கள் தேசத் துரோகிகள் என்றால், அதற்கு ஆதரவானவர்கள் எந்த தரப்பைச் சார்ந்தவர்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஸ்தாபிக்கப்படவுள்ள கசினோ சூதாட்டத்தை எதிர்ப்பவர்கள் தேசத்துரோகிகள் என அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன கூறியுள்ளார்.

எதிரானவர்களை தேசத்துரோகிகள் என அடையாளப்படுத்தும் அமைச்சர் நாட்டையும் மக்களை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் கசினோவுக்கு ஆதரவானர்களை எப்படி அழைப்பார் என்பதை அவர் நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

நாட்டின் விழுமியங்களையும் கலாசாரத்தையும் அழித்து மேற்கொள்ள திட்டமிட்டுள்ள கசினோ சூதாட்டத்தை எதிர்க்கட்சிகளும், மதத் தலைவர்களும், வெகுஜன அமைப்புகளும் எதிர்த்து வருகின்றன.

இப்படியான நிலைமையில் அரசாங்கம் கசினோ மன்னர் என வர்ணிக்கப்படும் ஜேம்ஸ் பாக்கரை நாட்டுக்கு அழைத்து மாநாடு ஒன்றில் உரையாற்றும் சந்தர்ப்பத்தை கொடுத்தது.

கசினோ என்பது போதைப் பொருள், விபசாரம் போன்ற சமூகத்தின் சீர்கேடுகளை ஏற்படுத்தும் வியாபாரங்களுடன் சம்பந்தப்பட்டது என்பதால் நாட்டின் யுவதிகள் விபசாரிகளாவும் இளைஞர்கள் போதைப் பித்தர்களாகவும் மாறுவதை தடுக்க முடியாது என்றார். (அ-2)

# அரசியல்வாதிகள் தமிழ் மக்களை நடத்தும்விதம் வேதனை தருகின்றது

## மனம் திறக்கிறார் சந்திரிகா

மறைந்த நெல்சன் மண்டேலாவுக்கு உலகெங்கிலுமிருந்து அரச தலைவர்கள், முன்னாள் அரச தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச பிரமுகர்களும் தங்களின் புகழஞ்சலிகளை செலுத்தி வருகின்றனர்.

அவரிடமிருந்து அரச தலைவர்கள் என்ன வகையான பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும் என்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழோசையிடம் தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இலங்கையின் தற்போதைய நிலைமையை பார்க்கும்போது, அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக சில அரசியல்வாதிகள் ஏனைய இனத்தைச் சேர்ந்த மக்களைக் கொல்லவும், தாக்கவும் எரிக்கவும் தயாராக இருக்கிறார்கள்.

தாங்கள் சிங்கள பௌத்த தேசத்துக்கு மட்டுமே பிரதிநிதிகள் என்று காட்டுவதற்காகவே மற்றைய சமயங்களை, இனங்களை, சமூகங்களை ஒடுக்கும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் சில அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

குறிப்பாக 1983ஆம் ஆண்டு இலங்கையில் ஒரு சில சிங்கள கடும்போக்கு வாதிகளால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நினைத்து நான் அரச தலைவராக தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோரியிருந்தேன்.

இவையெல்லாம் நான் அமரர் நெல்சன் மண்டேலாவிடம் நாம் கற்றுக்கொண்ட பாடங்கள் என்றே கூறலாம்.

நாட்டின் தற்போதைய நிலைமை மிக கவலையளிப்பதாக உள்ளது. நாட்டில் இன்றுள்ள சிங்கள மக்கள் அனைவரும் அப்படியில்லை. ஒரு சில சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு செய்யும் விதங்களை நினைக்க மிகவும் வேதனையாகவுள்ளது.

மண்டேலா துரதிர்ஷ்டவசமாக இலங்கைக்கு வரமுடியாவிட்டாலும் அவர் கற்றுத் தந்த பாடங்களை மறந்து சில கடும்போக்கு சிங்கள அரசியல்வாதிகள் மற்றைய இன மக்களை கொடுமைப்படுத்துகிறார்கள். இவையெல்லாம் மக்களிடம் வாக்குகளைப் பெறுவதற்காகவே சர்வதேச கூட்டங்களில் மணடேலாவுடன் அடிக்கடி அருகில் அமரும் சந்தர்ப்பம் கிடைத்ததை எணணி நெகிழ்வடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# அதிகாரங்களை இழக்க தயாராகின்றார் ரணில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிடமுள்ள அதிகாரங்களில் பெரும் பாலானவை அந்த கட்சியின் தலைமைத்துவச் சபையிடம் ஒப்படைக்கவுள்ளதாக தெரியவருகிறது.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய சம்மேளனத்தின் போது தலைமைத்துவ்ச் சபையிடம் ரணில விக்ரமசிங்க உத்தியோகபூர்வமாக கையளிக்கவுள்ளார்.

தலைமைத்துவத்தின் அதிகாரங்கள் எதனையும் தன்னிடம் வைத்திருக்கும் அவசியமில்லை.

இதனால் சகல அதிகாரங்களையும் தலைமைத்துவச் சபையிடம் ஒப்படைக்க போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் கட்சியின் தலைவருக்கான அதிகாரங்களை தலைமைத்துவ சபையிடம் ஒப்படைக்கும் யோசனை கட்சியின் சம்மேளனத்தில் முன்வைக்கப்படவுள்ளது. அத்துடன் கட்சியின் யாப்பை மீண்டும் திருத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் தெரிவித்தன.

தலைமைத்துவ சபைக்கு அதிகாரங்களை வழங்கினால் மட்டும் போதாது. அதனை சட்டரீதியாக வழங்க வேண்டும் என தலைமைத்துவ சபையின் உறுப் பினர் ஒருவர் கூறியுள்ளார். (அ-2)

# மண்டேலாவின் நிகழ்வில் பங்கேற்பார் ஜனாதிபதி

(கொழும்பு)

- தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் இறுதிச் சடங்கில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


நெல்சன் மண்டேலாவின் இறுதி நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி, அவர் பிறந்து வளர்ந்த மலைப்பகுதி கிராமமான கியூணு என்ற இடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்க வரலாறு காணாத வகையில் உலகத் தலைவர்கள் தென்னாபிரிக்காவுக்கு படையெடுக்கவுள்ளனர்.

இந்தநிலையில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிசும் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், வெளிவிவகார அமைச்சர் பீரிசும், நாளை செவ்வாய்க் கிழமை தொடக்கம், 14ஆம் திகதி வரை, கென்யாவுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ள முன்னரே முடிவு செய்திருந்தனர்.

கென்யாவில் இருந்து திரும்பும் வழியில் தென்னாபிரிக்கா சென்று நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)



யாழ்/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். ராஜேஸ்வரன், யாழ்.கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன் மற்றும் விருந்தினர்கள் மாணவி ஒருவரைக் கௌரவிப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# இனப்பிரச்சினையை தீர்ப்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது

## பிரதி சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்ப)

இலங்கையில் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் உறுதியாக உள்ளது. எனினும் அது இறக்குமதி செய்யப்பட்ட தீர்வாக இருக்கக்கூடாது என்பதில் அது கவனமாகவுள்ளது என்று பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த விடயத்தில் அயல்நாடு என்ற அடிப்படையில் இந்தியாவின் பங்கை ஏற்றுக் கொள்ள இலங்கை தயாராகவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந் நிலையில் இந்திய மத்திய அமைச்சர் பா.சிதம்பரம், இந்திய பிரதமர் மன்மோகன்சிங் யாழ்ப்பாணத்துக்கு செல்லவுள்ளதாக வெளியிட்ட தகவல் குறித்து கருத்துரைத்த சந்திம வீரக்கொடி, தாமும் ஒரு அரசியல்வாதி என்ற அடிப்படையில் சிதம்பரத்தின் கருத்தை பார்ப்பதாக குறிப்பிட்டார்.

எப்போதும் அரசியல்வாதிகள், ஏதாவது அரசியல் நோக்கத்தை முன்கொண்டே தமது கருத்துக்களை வெளியிடுவர் என்றும் அவர் கூறினார். (அ-2)

# தேசிய ஒருமைப்பாட்டு விருதுக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலஞ்ச உழல் ஒழிப்பு நடவடிக்கைகளில் திறம்பட செயற்பட்டதற்காக இவ்வாண்டிற்கான தேசிய ஒருமைப்பாட்டு விருதை அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரட்ணசிங்க பெற்றுக் கொள்ளவுள்ளார்.

இவ் விருது வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 3.45 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-2)

# இலங்கையின் பணக்காரராக தம்மிக்க பெரேரா தெரிவு

2013 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பணக்கார தரவரிசையில் தம்மிக்க பெரேரா என்பவர் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

நிதி நிறுவனம் ஒன்றின் உரிமையாளரான தம்மிக்க பெரேரா, தனிப்பட்ட சொத்தாக 538, மில்லியன் அமெரிக்க டொலர் அல்லது 70 பில்லியன் ரூபாய்களை கொண்டிருக்கிறார்.

இந்தப் பட்டியல் போபஸ் ஏசியாவினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சோஹ்லி கெப்டன் என்பவர் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளார். அவரின் சொத்துப் பெறுமதி 423 மில்லியன் டொலர்கள் அல்லது 55 பில்லியன் ரூபாய்களாகும்.

வங்கியாளர் ஹரி ஜெயவர்த்தன 307 மில்லியன் டொலர்களுடன் மூன்றாம் இடத்தில் உள்ளார்.

இதேவேளை, முதல்தர பணக்கார பெண்ணாக சோனியா வெய்ன்மென் தெரிவாகியுள்ளார்.

இவர் ஹரி ஜெயவர்த்தனவின் வர்த்தக பங்காளியாவார். இவரின் சொத்துப்பெறுமதி 76 மில்லியன் டொலர்களாகும். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# க.பொ.த.(சா/த) ஆண்டிறுதி மதிப்பீடு-2013

## விஞ்ஞானம் (பகுதி-II) விடைகள்

07.A 1. அதிக வெப்பநிலையைத் தாங்குவதற்கு

2.களிமுக்கோணி

3. a) நீலம் ⟶ வெள்ளை

b) கட்டி ⟶ தூள்

B. 1. யாதேனும் வெப்ப நிலையில் கரையக் கூடிய உயர் கரையத்தின் அளவு

2.சிறிதளவான செப்புசல்பேற்று எஞ்சிக் காணப்படுதல்

3.வெப்பநிலை அதிகரிக்கும் போது கரை திறன் அதிகரிக்கும்

C. 1.மதுசாரம் கலந்தவுடன் நீரில் செப்புசல்பேற்றின் கரைதிறன் குறைந்தது

2. செப்புசல்பேற்று நீரைவிட மதுசாரத்தில் கரைதிறன் அதிகமாகும்

3. a) இரும்பின் மீது செம்பு படிதல்

b) கரைசலின் செறிவு குறையும்/செம்பு அயன் அகற்றப்படும்

$CuSo_4$ (aq)+ Fe(S)

$FeSO_4$ (aq)+ Cu(S)

சமன்பாடு-01

சமப்படுத்தல்-01

D. 1.a) கனவளவு குறையும்

b) அமுக்கம் அதிகரிக்கும்

2. ஏனைய காரணிகள் மாறிலியாக உள்ளபோது குறித்த வாயுத் திணிவொன்றில் கனவளவு அமுக்கத்திற்கு நேர்கித சமனாகும். (போயிலின் விதி என்ற விடைக்கு புள்ளி வழங்கவும்)

3.$P_1V_1=P_2V_2$

$1000x50=2000xV_2$

$V_2=25cm^3$

4. வெப்பநிலை

(வளியின் திணிவு என்ற விடைக்கு புள்ளி வழங்கவும்)

08.A.1. கற்கரி தாழ்த்தியாக தொழிற்பாடும் வெப்பநிலையைப் பெற்றுக்கொள்ள

சுண்ணக்கல்- தாதுக்களில் உள்ள கழிவுகளை அகற்றுவதற்கு

2.ஏமரைற்று/மக்னரைற்று/லியோனைற்று

3.$2Fe_2O_3+3C \longrightarrow 4Fe+3CO_2$

4.குளிர்பான போத்தல் தயாரிப்பு/ செயற்கை மழை பெய்ய/ யூரிய உற்பத்திக்கு/ தீயணை கருவி வேறு சரியான விடைகளுக்கு

5. திரவ இரும்பு மூடப்படும். இதனால் இரும்புடன் வளி தொடுகையுருவது தடுக்கப்படும்.

6.அதில் காபன் காணப்படுதல்

B 1.C

2.A-இரும்பாணியின் கீழ்ப்பகுதி நீல நிறம்

B- இரும்பாணிக்கு அருகில் முழுமையான நீலநிறம்

3.Fe ⟶ $Fe^{+2}$ ஆக மாறும் $Fe^{+2}$/உடன் தாக்கமடைந்து நீல நிறத்தை தோற்றுவிக்கும்

4.தாக்கத் தொடரில் இரும்புக்கு மேலாகவுள்ள உலோகங்கள் அனோட்டாக தொழிற்படுவதால் இரும்பு பாதுகாக்கப்படுதல்

5.C

1. உலோகம் முழுமையாக கரைவதற்கு எடுக்கும் நேரம்/வாயுக்குமிழி வெளியேறும் வீதம்

2. A,B,C மூன்றும் ஒரே வெப்பநிலையில் இருப்பதற்கு

3.A>B>C அல்லது மக்னீசியம்>நாகம்> இரும்பு

09) A

01)முடி தாழி

02)அலை நீளம்

03) A) கழியூதாக்கதிர்

B)அலையில் செல்லும் திசைக்கு சமாந்தரமாக துணிக்கைகள் அதிரும் நெருக்கல் ஐதாக்களை உருவாக்கும்

04) ஒற்றுமை- சக்தியை ஊடுகடத்தும்

வேற்றுமை- மின்காந்த அலைக்கு ஊடகம் அவசியமில்லை. எனினும் பொறிமுறை அலைக்கு ஊடகம் அவசியம்.

05) A) வி மிகை ஒலியலை

B)கைத்தொலைபேசி- நுண்ணலைகள்

06)புவியலையின் போது தோன்றும் புவியதிர்வு அலை/சுனாமிஅலை

B) 01) A-ஊதா B)சிவப்பு

02) ஊதா நிறம் சிவப்பு நிறத்தை விட அதிக முறிவுக்குள்ளாகும்.

03)(ஒளிவிலகல் அடைதல்)

04)வெள்ளை

01) காந்தப் பாயத்தில் காணப்படவேண்டும்.

02) A.C.E.G

03) காந்த விசைக் கோடுகள் வெட்டப்படாமல் துளையினூடாகப் பயணிக்கும்

A) மின்னோட்டம் உயர்வாக காணப்படும்

B) திசை மாறிக் காணப்படும்.

10) A)

1.கையிலிருந்து வெப்பம் கதவின் கைப்பிடிக்கு பயணிக்கிறது

02) பலகை சிறந்த வெப்பக் கடத்திலியாகும். இதனால் கையிலிருந்து வெப்பத்தை கதவின் பலகை பெற்றுக்கொள்ளாது.

3.Q=mcoX10000

$Q=0.1x400x(35-30)kgXJkg^{-1}C^{-1}xC$

Q=200J

B1. அமுக்கம்= $\frac{\text{விசை}}{\text{மேற்பரப்பின் பரப்பளவு}}$

$= \frac{400M}{2x2x4}$

$= 250\ 000pa\ (Nm^{-2})$

2.பலகையின் மீது கதிரையை வைத்தல்

3. விசை செயற்படும் பரப்பளவை அதிகரிப்பதன் காரணமாக அமுக்கம் குறையும்

C 1.F=ma

F=1000x10

நீரின் நிறை 1000N

2. ஆழம் கூட அமுக்கம் கூடும்

ஒரே மட்டத்தில் அமுக்கம் எல்லா புள்ளிகளிலும் சமனாகும். திரவ அமுக்கம் எல்லா திசைகளிலும் தொழிற்படும்

3.P=hdg

=1x1000x10

P=10000 Pa or 10000 $Nm^{-2}$

D. 1. மீள்தன்மை கொண்டது

2. மீள்தன்மை அழுத்தச் சக்தி

3.20 $ms^{-1}$

4.Ek= 1/2 $mv^2$

=1/2x 10/1000x 20x 20


=2J

**கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்)**
**மாதிரி வினாத்தாளிற்கான விடைகள் / மேல் மாகாணம்**
**தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி - 1**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 1 | 21. | 2 | 31. | 2 |
| 02. | 2 | 12. | 3 | 22. | 3 | 32. | 1 |
| 03. | 2 | 13. | 2 | 23. | 2 | 33. | 2 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 4 | 34. | 2 |
| 05. | 4 | 15. | 4 | 25. | 2 | 35. | 3 |
| 06. | 3 | 16. | 2 | 26. | 3 | 36. | 4 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 2 | 37. | 1 |
| 08. | 2 | 18. | 4 | 28. | 1 | 38. | 2 |
| 09. | 3 | 19. | 2 | 29. | 4 | 39. | 3 |
| 10. | 4 | 20. | 1 | 30. | 2 | 40. | 4 |

# எமது வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்க இராணுவத்தினர் தடை

## வடக்கு கல்வியமைச்சர் குருகுலராஜா



(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களாகிய எமது வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்க விடாமல் இராணுவத்தினர் தடுக்கின்றதாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா குற்றஞ் சாட்டியுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவையினால் நல்லூர் செயலக மண்டபத்தில் நடைபெற்ற கோவில் நகரம் இறுவெட்டு வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் பல பிரதேசங்களில் வரலாற்று சின்னங்கள் இராணுவத்தினரால் தகர்க்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வலி. வடக்கு பிரதேசத்தில் ஆலயம் ஒன்று அண்மையில் இடிக்கப்பட்டு விட்டது. எமது பண்டைய வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்க முடியாமல் இருக்கின்றது.

அரசு எம்மைத் தாக்குவதற்கு பல சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. பாதுகாப்புப் படை என்ற போர்வையில் எமது நிலங்களை இராணுவத்தினர் அபகரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்குச் சேவை செய்வதா அல்லது மாகாண சபைக்குச் சேவை செய்வதா அல்லது இராணுவத்தினரிடம் விழுவதா அல்லது ஆளுநரிடம் பறப்பதா என தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இராணுவத்தினரை வெளியேற்ற நாம் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். எங்களுக்கு எதிரானவர்கள் பல சூழ்ச்சிகளை செய்ய நினைக்கிறார்கள். அது தொடர்பாக நாம் கவனமாக இருக்க வேண்டும்.

மாவீரர்கள் தினத்தில் உயிர் நீத்தவர்களுக்கு விளக்கேற்றுவதற்கு பல தடைகள் விதிக்கப்பட்ட போதிலும் சில வீடுகளில் விளக்கேற்றப்பட்டதுடன் வடமாகாண சபை உறுப்பினர்களாகிய நாம் மரங்களையும் நாட்டியிருந்தோம்.

சிங்கள மக்களுக்காக போராடி உயிர் நீத்த இராணுவத்தினருக்கு ஆனையிறவில் சிலை அமைக்கப்பட்டு வருகின்றது. அந்த சிலையை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.

சிங்கள மக்களை காப்பாற்றுவதற்காக உயிர்நீத்த இராணுவத்தினருக்கு சிலை வைக்கப்படுமாயின் ஏன் தமிழ்மக்களுக்காக உயிர் நீத்தவர்களுக்கு ஒரு சுட்டி ஏற்றக் கூடாது.

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று பொங்கல் பானைக்குள் அரிசி போடுவதற்கு முன்னர் ஒரு சுட்டி விளக்கை கொளுத்தி அஞ்சலி செலுத்தி விட்டு பானையில் அரிசிபோடவேண்டும். அதன் போது பாதுகாப்பு படையினர் எம்மைச் சுட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி இறுவெட்டில் சங்கிலிய மன்னன் ஆட்சிக்குட்பட்ட காலத்தில் இருந்த நல்லூர் கந்தசுவாமி ஆலயம் மற்றும் அதனுடன் சார்ந்த ஆலயங்களின் ஆவணப் படங்களும் ஒவ்வொரு ஆலயங்களின் வரலாற்றுப் பதிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (அ-4)

# புலிகளை மீளக் கட்டியெழுப்ப முயற்சி;
# தமிழ் அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை

தமிழ் அரசியல்வாதிகள் 17 பேருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கத்தில் புலம்பெயர் நாடுகளில் உள்ள புலிகளுடன் இணைந்து இரசியமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக குற்றம் சுமத்திய வர்களுக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

சிரேஷ்ட படை அதிகாரிகள், புலனாய்வு சேவைகளின் அதிகாரிகள் பலரின் தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலின் போது, தமிழ் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் தொடர்பிலான ஆபத்து பற்றி அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் புதிய சட்ட திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

எனினும் விடுதலைப் புலிகளுக்கு உயிரூட்ட முயற்சிக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதிராக அமுலிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியிருப்பதாக அரசாங்கத்தின் உயர் மட்ட வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

புலம்பெயர் நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு சொந்தமான பெருந்தொகைப் பணம் சுவிஸ் வங்கியொன்றில் இருப்பதாகவும் அந்த பணத்தை பயன்படுத்தி புலிகள் அமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் புலனாய்வுப் பிரிவினருக்கு தெரியவந்துள்ளதாக சிங்கள வார இதழ் ஒன்று கூறியுள்ளது.

புலிகளுக்கு உயிரூட்ட முயற்சித்து வரும் தமிழ் அரசியல்வாதிகள் கடந்த காலங்களில் கனடா, சுவிட்சர்லாந்து, பிரித்தானியா, நோர்வே போன்ற நாடுகளுக்கு சென்று அந்நாடுகளில் உள்ள புலிகளின் பிரதிநிதிகளுடன் இரகசியமான பேச்சுக்களை நடத்தியிருப்பதாக தெரியவந்துள்ளது எனவும் இந்த வார இதழ் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நயவஞ்சக நரி



ஒரு காட்டில் நரி ஒன்று இருந்தது. ஒரு முறை அதற்கு நிறைய உணவு ஒரே வேளையில் சாப்பிட வேண்டுமென்று விரும்பிற்று. அதற்கான தருணம் எப்போது வாய்க்கப் போகிறதோ என்று காத்துக் கொண்டிருந்தது.

மரத்தின் நடுவிலுள்ள பொந்து ஒன்றில் அது மிகவும் நல்லவனைப் போல வசிக்க ஆரம்பித்தது. மனதுக்குள் இந்த மரத்தின் கூடு கட்டி வரும் பறவைகள் குஞ்சு பொரித்தால் குஞ்சுகளை அப்படியே சாப்பிட்டு விடலாமே என்றெண்ணிற்று நரி.

அதன் எண்ணம் வீண் போகவில்லை. இரண்டு கழுகுகள் கணவன், மனைவியாக ஒரு நாள் அம்மரத்தடிக்கு வந்தன. மரப் பொந்தில் மிகவும் சாது மாதிரி படுத்துக் கிடக்கும் நரியைப் பார்த்தன.

"நரியாரே! நீ இம்மரப் பொந்தில் எவ்வளவு நாளாக இருக்கிறீர்?" என்று கேட்டது ஆண் கழுகு.

"கழுகாரா... வாங்க... கூட யாரு? மன்னியா?" என்று கேட்டது.

"ஆமாம்!" "நான் கேட்டதற்கு நீர் இன்னமும் பதில் சொல்லவில்லையே!"" என்று கேட்டது.

"ஆமாம்...! இம்மரப் பொந்தில் பல வருஷங்களாக இருக்கிறேன்...! ஏன் கேட்கிறீர்?" என்று கேட்டது நரி.

"என் மனைவிக்கு பிரசவ காலம் நெருங்குகிறது. இம்மரத்தில் கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரிக்கலாமா என்று ஒரு ஆசை!" என்றது ஆண் கழுகு.

"ரொம்ப ராசியான மரம் இது... முன்பு கூட ஒரு பருந்து இங்கு கூடு கட்டி, குஞ்சு பொரித்து, சுகமாக வாழ்ந்தது!" என்றது நரி.

"ஆபத்து ஏதாவது உண்டாகுமா?"" என்று கவலையோடு கேட்டது பெண் கழுகு.

"நான் வயதானவன் இந்த பொந்தே கதி என்று கிடக்கிறேன. நீங்கள் பயப்படவே வேண்டாம். நாம் நல்ல நண்பர்களாக இருப்போம்!" என்றது நரி.

பிறகு மரத்தை அண்ணாந்து பார்த்து மூன்று கிளைகள் பிரியும் ஒரு இடத்தை சுட்டிக் காட்டி, "அங்குகூடு கட்டிக் கொள்ளுங்கள். மிகவும் வசதியாக இருக்கும்!" என்றது.

ஆண் கழுகும, பெண் கழுகும் அங்கு சென்று கூடு கட்ட ஆரம்பித்தன. ஆண் கழுகு வெளியில் இரை தேடிச் செல்லும் பொழுது, "என் மனைவி மட்டும் கூட்டிலிருக்கிறாள். அவளால் பறக்க முடியவில்லை... இன்றோ, நாளையோ முட்டை இடப்போகிறாள்... கொஞ்சம் பார்த்துக் கொள்ளும் நரியாரே!" என்றது.

"கவலைப்படாமல் போய் வாரும் நண்பரே! நான் இங்கிருக்கும் வரை எந்த ஆபத்தும் அண்டாது!" என்றது நரி.

நமக்கு நல்ல நண்பன் கிடைத்தான் என்றெண்ணி இரை தேட பறந்து சென்றது ஆண் கழுகு. பெண் கழுகு முடடையிட்டு



குஞ்சு பொரித்து அவை ஓரளவு பெரிதானதும், எல்லாவற்றையும் சாப்பிட்டு விடவேண்டுமென்று நரி எண்ணிக்கொண்டிருக்கும் பொழுது, மரத்தடியில் புதிதாக வந்த பன்றியும், அதன் கொழு கொழு குட்டிகளும் அதன் பார்வையில்பட்டது.

பன்றிக் குட்டிகளை சாப்பிட்டு பல நாள் பசியாறலாம் போலிருக்கிறதே என்றெண்ணிற்று நரி. மேலே கழுகு குஞ்சுகள், கீழே பன்றிக் குட்டிகள்... நன்று...நன்று...

"நரியாரே இந்த மரத்தடியில் நானும் என்குட்டிகளும்தங்கலாமா?" என்று கேட்டது அம்மா பன்றி.

"நன்றாக தங்கலாம்!" என்றது நரி.

"எனக்கும், என் குட்டிக்கும் ஏதாவது ஆபத்து வருமா நரியாரே?" என்று கவலையோடு கேட்டது அம்மா பன்றி.

"நான் இருக்கும் இடத்துக்கு வந்துவிட்டாய் பன்றியே... கவலையேபடாதே...! நான் வயதானவன். இந்த பொந்தே கதி என்று கிடப்பவன்...! எதிரிகள் எவரையும் மரத்தருகில் அண்டவே விடமாட்டேன்...! நானிருக்க பயமேன்?" என்றது நரி.

பன்றி தன் குட்டிகளுடன் மரத்தடியில் தங்கிக் கொண்டது. நாளடைவில் மரத்தின் மேலுள்ள கூட்டில் பெண் கழுகு முட்டையிட்டு குஞ்சு பொரித்தது. நான்கைந்து குஞ்சுகள் இருக்கும். கத்தியபடி இருந்தன. மரத்தடியில் பன்றிக் குட்டிகளும் "கர், கர்" என்று உறுமியபடி உலாவிக் கொண்டிருந்தன.

வந்ததற்கு இப்போது பன்றிக் குட்டிகள் மிகவும் பருத்திருந்தன. அம்மா பன்றியும் தான். அவைகளை எப்படி சாப்பிடலாம் என்று யோசித்த நரி, ஆண் கழுகையும், பெண் கழுகையும் அழைத்தது.


"இதோ பாருங்கள்...! மரத்தடியில் இருக்கிறதே பன்றி அது சுத்த மோசம்... உங்கள் குஞ்சுகளை எப்பொழுது சாப்பிடலாமென்று தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது!" என்றது.

இரண்டு கழுகுகளும் இரை தேடக் கூட வெளியில் செல்லாமல், கூட்டிலுள்ள குஞ்சுகளை காவல் காக்கத் தொடங்கின. வெளியே எங்கேயும் போக பயந்தன.

மேலே ஒருமுறை பார்த்துவிட்டு குட்டிகளுடன் மேய்ந்து கொண்டிருந்த பன்றியிடம் வந்தது நரி.

"பன்றியே...! நீ உன் குட்டிகளை மிகவும் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ள வேண்டும். மேலே இருக்கிற இரண்டு கழுகுகளும் மகா பொல்லாத கழுகுகள். அவை நீ இல்லாத சமயத்தில் உன் குட்டிகளைக் கொத்திக் கொன்று சாப்பிட்டுவிட நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றன!" என்றது நரி.

பன்றி ஒரேயடியாக பயந்து போய்விட்டது. குட்டிகளை எல்லாம் தன் காலின் கீழ் அழைத்துக் கொண்டது. மரத்தடியிலேயே இருக்க வேண்டும். குட்டிகளை தனியாக விட்டுவிட்டு போய் விடக்கூடாது.



கழுகுகள் சாப்பிடவா என் குட்டிகளை கண்போல வளர்க்கிறேன் என்றெண்ணியது பன்றி. அதன் பிரகாரமே இருக்கவும் ஆரம்பித்தது அம்மாப் பன்றி.

ஆண், பெண் கழுகுகளும், அம்மா பன்றியும், பன்றிக் குட்டிகளும் இரை தேடாததால் வாடி இளைத்து, சோர்ந்து, துவண்டு ஒருநாள் எல்லாமே இறந்து போயின.

நரி விரும்பியதுபோல் நிறைய சாப்பிட கழுகுகளும், பன்றிகளும் அதன் தந்திரத்தால் கிடைத்துவிட்டன.

யார் யாரிடம் நட்பு கொள்ள வேண்டுமென்று யோசித்து நட்புக் கொள்ளாததால் கழுகுகளுக்கும், பன்றிகளுக்கும் நேர்ந்த பரிதாபமான முடிவைப் பார்த்தீர்களா, நல்லவர்களோடு மட்டுமே நட்புகொள்ள வேண்டும்.

# 12.2013 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1793-நியூயோர்க் நகரின் முதலாவது நாளிதழ் தி அமெரிக்கன் மினேர்வா வெளியிடப்பட்டது.
- 1856-ஈரானிய நகரம் புஷேஹர் பிரித்தானிய ஆக்கிரமிப்புப் படைகளிடம் வீழ்ந்தது.
- 1905-பிரான்சில் அரசையும் கிறிஸ்தவ தேவாலயங்களையும் பிரிக்கும் சட்டமூலம் கொண்டு வரப்பட்டது.
- 1917-பிரித்தானியர் பாலஸ்தீனத்தின் ஜெருசலேம் நகரைக் கைப்பற்றினர்.
- 1922-போலந்தின் முதலாவது அதிபராக கபிரியேல் நரூட்டோவிச் தெரிவு செய்யப்பட்டார்.
- 1937-ஜப்பானியப் படைகள் சீன நகரான நான்ஜிங்கைத் தாக்கின.
- 1940-இரண்டாம் உலகப்போர்: பிரித்தானிய, மற்றும் இந்தியப் படைகள் இத்தாலியப் படையினரை எகிப்தில் தாக்கினர்.
- 1941-இரண்டாம் உலகப்போர்:-சீனக் குடியரசு, கியூபா, குவாத்தமாலா, பிலிப்பீன்ஸ் ஆகியன ஜேர்மன் மற்றும் ஜப்பான் மீது போரை அறிவித்தன.
- 1946-இந்திய சட்டசபை ராஜேந்திர பிரசாத் தலைமையில் அமைக்கப்பட்டது.
- 1953-மின்சாரப் பொது நிறுவனம் தனது நிறுவனத்தில் பணியாற்றிய கம்யூனிஸ்ட்கள் அனைவரையும் பணிநீக்கம் செய்தது.
- 1961-பிரித்தானியாவிடம் இருந்து தங்கனீக்கா விடுதலை பெற்றது.
- 1979-பெரியம்மை நோய் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. மனித உயிர் கொல்லி நோயொன்று முற்றாக அழிக்கப்பட்டது இதுவே முதலாவதாகும்.
- 1986-இந்தியைத் திணிக்கும் அரசியல் சட்ட நகலை எரித்ததற்காக தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி உள்ளிட்ட 19 தி.மு.க சட்டப்பேரவை உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.
- 1990-லெக் வலேசா போலந்தின் முதலாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியானார்.
- 1992-வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் இளவரசி டயானா இருவரினதும் விவாகரத்து அறிவிக்கப்பட்டது.
- 1995-உலகின் முதலாவது 24 மணி முழு நேர தமிழ் வானொலி ஒலிபரப்பு கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் என்னும் பெயரில் கனடாவின் டொராண்டோ நகரில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது.

**பிறப்புக்கள்**

- 1946-சோனியா காந்தி, இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர்

**இறப்புக்கள்**

- 2006-சு.வில்வரத்தினம் (சு.வி.) ஈழத்துக் கவிஞர் (பி.1950)

**சிறப்பு நாள்**

ஐ.நா. சபை- அனைத்துலக ஊழல் எதிர்ப்பு தினம் 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி... நன்றி... நன்றி...



ஆன்மீகம் 62

**கேள்வி:-** நன்றி மறப்பது நன்றன்று என்று வள்ளுவர் சொல்கிறார். அதற்காக, ரொம்ப **தேங்க்ஸ்- மிக்க நன்றி** என்று சொல்லிக் கொண்டே இருப்பது தான் நன்றியை வெளிப்படுத்தும் விதமா?

சத்குரு:- இன்று நான் அந்த கடிதத்தைப் பெற்றேன். அது ஒரு நன்றிக் கடிதம். ஒருவர், தன் நன்றியை எனக்கு வெளிப்படுத்தி இருந்தார். தினசரி எனக்கு இது போன்ற நன்றிக் கடிதங்கள் வந்த வாறு உள்ளன.

நன்றியை வெளிப்படுத்துதல் என்பது பழக்கதோஷமே! **நன்றி, நன்றி, நன்றி** என்று பதறுபவர்களிடமிருந்து எல்லாம் நன்றி பிரவாகமாக பொழிகிறது என்று நினைத்துக்கொள்ள வேண்டாம்.

**நன்றி, என்னை மன்னித்து விடு, நான் உன்னைக் காதலிக்கிறேன்,** இவையெல்லாம் வெறும் பழக்க தோஷங்கள் என்று சொல்லலாம்!

ஆனால், ஒரு கணம் நன்றியுணர்வோடு இருத்தல் என்பது ஒரு அளப்பரிய சாத்தியம். அந்த ஒருகணம் உங்கள் வாழ்வையே மாற்றியமைக்கக்கூடிய வல்லமை பெற்றது.

ஆனால், நன்றி, நன்றி, நன்றி என நீங்கள் ஓராயிரம் முறை உச்சரித்தாலும்கூட, அது உங்களுக்கு எதையும் வழங்கப்போவதில்லை.

ஒரே வார்த்தையை திரும்பத் திரும்பச் சொல்வதால் உங்கள் குரல்வளம் வேண்டுமானால் குறைந்து போகலாம்.

நன்றியுணர்வு என்பது ஒரு குணம் அல்ல.

இன்றோ மேற்கத்திய நாடுகளில் இது ஒரு வழக்கமாகிவிட்டது. தொட்டதற்கு, விட்டதற்கு எல்லாம் நன்றி, நன்றி என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் நம் பாரதத்தில் அவ்வாறு இல்லை. மேற்கத்திய கலாச்சாரத்தில் உங்கள் தாய் உங்களுக்கு ஏதோ ஒன்றை வழங்கினால் அதற்கு நீங்கள் நன்றி கூறுவீர்கள். ஆனால், இங்கோ என் தாய் எனக்கு செய்யும் ஒரு செலுக்கு நான் நன்றி கூறினால் அவர் அதை ஒரு அவமரியாதையாகவே பார்ப்பார்.

## உங்கள் ஒவ்வொரு மூச்சும் நன்றியுணர்வோடு துடிக்க வேண்டும்



எனவே, நன்றியுணர்வு என்பது ஒரு தத்துவம் அல்ல. போதனை அல்ல. அது நீங்கள் வாழும் முறையாவே ஆகிவிட வேண்டும். உங்கள் ஒவ்வொரு மூச்சும் நன்றியுணர்வோடு துடிக்க வேண்டும். இதனை நீங்கள் ஒரு தத்துவமாக மாற்றும் போது மெல்ல மெல்ல அது அசிங்கமானதாகிவிடும். உங்கள் உள்ளிருந்து பொழிய வேண்டிய நன்றியுணர்வு கொச்சையாக வெளிப்படும். எனவே, நீங்களே நன்றியுணர்வாக மாறுங்கள். அது உங்களிலிருந்து பிரவாகமாக பொழியட்டும்!

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# முள்ளிவாய்க்கால் முற்றமும் முக்காடு நீங்கிய தமிழின வெறுப்பும்



பெ.மணியரசன்

**எ**ப்பொழுதோ நாம் வீட்டில் தமிழ் பேசுகிறோம். கடிதப் போக்குவரத்து நிர்வாகம் மக்களிடம் பேச்சு இவைகளைத் தமிழில் நடத்துகிறோம். சமயத்தை சமயநூலகளை இலக்கியத்தைத் தமிழில் கொண்டு இருக்கிறோமே! இதற்குமேலும் தமிழுக்கு என்ன வேண்டும்.?

பகுத்தறிவாளரான பெரியார் தமிழின் மீது கொண்டுள்ள அடங்கா வெறுப்பின் காரணமாக மூடநம்பிக்கை மொழியில் தமிழை "சனியன்" என்று சாடுகிறார். "தமிழைப் பழித்தவரைத் தாய் தடுத்தாலும் விடேன்"- என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடலை அருள் கூர்ந்து இந்த இடத்தில் மறந்து விடுங்கள்.

பெரியாரின் தமிழ் அழிப்புத் திட்டங்கள் பற்பல இருக்கின்றன.

"எனது இந்தி எதிர்ப்பு என்பது இந்தி கூடாது என்பதற்கோ, தமிழ் வேண்டும் என்பதற்கோ அல்ல என்பதைத் தோழர்கள் உணர வேண்டும். மற்றெதற்கு என்றால் ஆங்கிலமே பொது மொழியாக அரசாங்க மொழியாக தமிழ்நாட்டு மொழியாக தமிழன் வீட்டு மொழியாக ஆகவேண்டும் என்பதறகாகத்தான்.

"நாம் இவ்வாறு கூறுவது தமிழன் உலக மனிதனாக விஞ்ஞான உருவாக ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் மக்களை விஞ்ஞானத்தில் தோற்கடிக்கத் தக்கவனாக ஆகவேண்டும் என்பதற்காகவேயாகும். நாம் இன்று கிணற்றுத் தவளைகளாக இருக்கிறோம். நமக்குக் கம்பனுக்கு மேல் புலவன் இல்லை. வள்ளுவனுக்கு மேல் தீர்க்கதரிசி இல்லை. இக்கருத்தில் நாம் உலக மனிதனாக ஆக முடியாது என்பது எனது பலமான கருத்து. ஆகையால் தமிழர் தோழர்களே உங்கள் வீட்டில் மனைவியுடன் குழந்தைகளுடன் வேலைக்காரிகளுடன் ஆங்கிலத்திலேயே பேசுங்கள். பேசப் பழகுங்கள். பேச முயலுங்கள். தமிழ்ப் பைத்தியத்தை விட்டொழியுங்கள். என்னை வையாதீர்கள் மனிதனாக வாழ முயலுங்கள்.

பார்ப்பனியத்தின் பாதுகாவலர் என்று பெரியாரால் வர்ணிக்கப்பட்ட இராஜாஜி மற்றும் ஆர்.எஸ்.எஸ்.காரரர் என்று இரா. உமாவால் அடையாளம் காட்டப்பட்ட ஜெயமோகன், பார்ப்பனிய நஞ்சையே குருதி ஓட்டமாகக் கொண்டுள்ள சோ ஆகியோரின் தமிழ் எதிர்ப்பு ஆங்கில ஆதரவுக் கருத்துகளும் பெரியாரின் தமிழ் எதிர்ப்பு ஆங்கிலத் திணிப்புக் கருத்துகளும் ஒரு நேர் கோட்டில் சந்திக்கின்றனவே அது எப்படி? பெரியார் புறப்பட்ட இடம்வேறு. இரு தரப்பாரின் உள் நோக்கங்களும் வேறு வேறாக இருக்கலாம். ஆனால், இரு தரப்பாரும் தமிழ் மக்களை கால வளர்ச்சிக்கேற்ப மேம்படுத்துவதற்காகவே ஆங்கிலத் திணிப்பைச் சொல்வதாகக் கூறிக் கொள்கிறார்கள்.

நஞ்சை நஞ்சென்று தெரிந்து நமக்குக் குடிக்கக் கொடுத்தாலும் நஞ்சைப் பால் என்று நம்பி நமக்குக் குடிக்கக் கொடுத்தாலும் -அதை நாம் குடித்தால் விளைவு ஒன்று தானே! பெரியாரின் நோக்கம் வேறு, பார்ப்பனர்கள் நோக்கம் வேறு என்று கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது. நோக்கம் வேறாக இருக்கட்டும், விளைவு ஒன்றுதானே!

தமிழ் மொழி அழிப்புதான் விளைவு. தமிழ் ஒழிந்தால் தமிழர்கள் பார்ப்பனர்களுக்கும் ஆரியத்திற்கும் அடிமை ஆவார்கள். இந்த விளைவு ஒன்றுதானே!

மற்றபடி மேற்படி மேற்கோளில் உள்ள பெரியாரின் கருத்துகள் பலவும் வரலாற்றுப் பிழையானவை சமூக அறிவியலுக்குப் பொருந்தாதவை. திருவள்ளுவருக்குப் பிறகு புதுக் காலத்துக்கேற்ற புலவர் தமிழில் இல்லை என்கிறார் அதுவும் 1969 -இல்! ஏன் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இல்லையா? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆங்கில மொழியில் திருவள்ளுவர்போல் ஒரு புலவர் தோன்றியதுண்டா? திருவள்ளுவர் காலத்தில் ஆங்கில மொழியே தோன்றவில்லையே! ஆங்கிலமொழி பேசும் மக்களுக்குத் திருக்குறளின் அரிய கருத்துகள் தேவை என்று கருதித்தான் அதை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தார் ஆங்கிலேயரான ஜி.யு. போப்! இதர பல ஐரோப்பியர்களும் ஐரோப்பிய மொழிகளில் திருக்குறளைப் பெயர்த்தெழுதினார். கம்பர் காலத்தில் அவருடைய இலக்கியச் செழுமைக்கு ஈடு கொடுக்கும் அளவிற்கு வேறு எந்த மொழியில் இலக்கியம் இருந் தது? கம்பராமாயணத்தை எரிக்க வேண்டும் என்ற முகாமைச் சேர்ந்த கருணாநிதிகூட இப்பொழுது கம்பர் விழாவில் கலந்து கொள்வதற்குக் காரணம் கம்பனின் கவிய்முதுதானே.

பெரியார் குறிப்பிடுவது போல் ரசியாகாரனும், ஜப்பான்காரனும் விஞ்ஞான மனிதர்கள் ஆனதற்குக் காரணம் என்ன? அவரவர் தாய் மொழியில் கற்றதுதான்! தமிழைவிட ரசிய மொழியும் ஜப்பானிய மொழியும் வளமானவை அல்லவே! தமிழை விஞ்ஞான மொழியாக்குவது எளிதாயிற்றே! ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் தமிழர்களும் தமிழும் அயல் இனத்தார்க்கு அடிமைப் படுத்தப்பட்டு, அயல் மொழிகளின் ஆதிக்கத்தின் கீழ் ஒடுக்கப்பட்டுக் கிடப்பதால் உலகின் முதற்செம மொழியான தமிழை நாம் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லாமற் போய்விட்டது.

தமிழ் மொழி அழிப்பிற்கு 1969 இல் கூட வேலைத்திட்டம் வகுத்த பெரியாரின் படத்தை, தமிழ் வளர்க்கப் பாடுபட்ட மறைந்த தமிழறிஞர்கள் வரிசையில் எப்படி வைக்க முடியும்?

வர்ண சாதி ஒழிப்பு, பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு, சமத்துவக் கருத்துகள், மூடநம்பிக்கை ஒழிப்பு போன்ற வற்றில் பெரியாரின் பங்களிப்பைத் தமிழர்கள் ஏற்றுப் போற்ற வேண்டும். அதே வேளை மொழி, தேசிய இனம், இனம் ஆகியவை குறித்த அவரது தவறான கருத்துகளை தமிழர்கள் ஏற்கக் கூடாது என்பதே தமிழ்த் தேசப்பொதுவுடைமைக் க்ட்சியின் நிலைபாடு!

பெரியார் அவ்வப்போது தமிழ்நாடு விடுதலை முழக்கத்தை முன் வைத்துள்ளார். 1973 செப்டம்பர் 17 விடுதலை மலருக்கு அவர் கடைசியாக எழுதிய பிறந்தநாள் செய்திக் கட்டுரையில் தமிழ்நாடு விடுதலைப் போராட்டத்தை மட்டும் முதன்மைப்படுத்தி - போராட்டத்திற்கு அழைப்புவிடுத்திருந்தார். ஆனால், அவர் 1973 டிசம்பர் 24இல் காலமாகிவிட்டார். ஆசிரியர் கி.வீரமணி அவர்களோ, சுப.வீ அவர்களோ, உமா போன்றவர்களோ தமிழ்நாடு விடுதலையை வலியுறுத்தி மேடையில் பேசுவதில்லை. அதற்காகக் கட்டுரைகள் எழுதுவதில்லை. ஏன்? பிறகென்ன பெரியாரியவாதிகள் அவர்கள்? முன்னாள் பொடாச் சிறையாளியான சுப.வீ இந்நாளில் பொழுதுபோக்கு அரசியல்வாதி ஆகிவிட்டார்! பகுத்தறிவு ஆதீன கர்த்தரான ஆசிரியர் வீரமணி அவர்களின் "புரட்சி" பற்றியும் தற்சார்பு செயல்பாடுகள் பற்றியும் கேட்கவே வேண்டாம்!

தமிழினத்தை வீழ்த்த - தமிழ்த் தேசிய வளர்ச்சியைத் தடுக்க பெரியாரை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள் அவர்கள்!

பெரியாரியவாதிகளாக அவர்கள் இருக்கட்டும்! அதற்காகத் தமிழின வெறுப்பாளர்களாக இருக்க வேண்டாம்! -முற்றும்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல் கேள்விகளுக்கு அபிவிருத்தி பற்றிக் கூறலாமா?

## மார்ச் மாதத்தில் இலங்கைக்கு ஆபத்து– கிரியெல்ல

**தென்னாபிரிக்காவில் யுத்தம் முடிந்த பின்னர் நெல்சன் மண்டேலா உயிரிழப்புக்களுக்காக மக்களிடம் மன்னிப்பு கோரினார். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? உயிரிழப்புக்காக பாற்சோறு உண்டு வெற்றிவிழா கொண்டாடினீர்கள் என ஐ.தே.கட்சி எம்.பி.லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் மூமை இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சர் மற்றும் குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி மேற் கண்டவாறு தெரிவித்தார்.சபையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அடுத்த மார்ச் மாதம் மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்களுக்கு அரசு எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றது என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

சிறுபான்மை இனத்தவர்களையும் விமர்சிக்கின்றீர்கள். வெளிநாடுகளையும் விமர்சிக்கின்றீர்கள் .ஏன் தேர்தலுக்காக. ஆபிரிக்க நாடுகளில் 19இல் 7 நாடுகளே மாநாட்டுக்கு வந்தன. அரசின் முயற்சி வெற்றி பெறவில்லை.

அமெரிக்கா இலங்கைக்கு எதிராக செயற்படுகின்றது என கூறுகின்றீர்கள். கியூபா அமெரிக்காவிற்கு எதிராக ஐ.நா.வில் பிரேரணை கொண்டு வருகிறது. இதன் போது கியூபாவுக்கு 108 வாக்குகள் ஆதரவாக கிடைத்தது. அமெரிக்காவிற்கு 2 வாக்குகளே கிடைத்தன.

எனவே ஐ.நா.வை அமெரிக்கா ஆட்டுவிக்கின்றதென்ற உங்கள் கருத்தை ஏற்க முடியும். இலங்கைக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் உள்ளன.

இதனை கவனத்தில் கொள்ளவில்லை. சூடானுக்கும் கிழக்கு திமோருக்கும் எதிராக ஐ.நா.வில் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டன. இறுதியில் அந்நாடுகள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டன.

இந்தியா எமக்கு ஒத்துழைப்பு வழங்கும். எமக்கு எதிராக பிரேரணைகள் முன் வைக்கப்படமாட்டாது என்கிறீர்கள். ஆனால் அனைத்தும் இடம்பெற்றன.

பிரித்தானியாவின் பிரதமர் டேவிட் கமரூனின் கருத்தை இலகுவாக எண்ண வேண்டாம். எமக்கெதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டால் சர்வதேச விசாரணைக்கு முகம் கொடுக்க நேரிடும்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் அலுவலகத்தில் 20 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் தொழில் புரிகின்றனர்.

நெல்சன் மண்டேலா யுத்தம் முடிந்தவுடன் மன்னிப்பு கேட்டார். சிறையிலிருந்து மண்டேலா விடுதலையாகி ஜனாதிபதி பதவியேற்ற போது சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

ஆனால் யுத்தத்திற்கு பின்னர் நீங்கள் என்ன செய்தீர்கள்? பாற்சோறு உட்கொண்டு வெற்றி விழா கொண்டாடினீர்கள். உயிரிழப்புக்களுக்காக மன்னிப்பு கோராது விழா கொண்டாடினீர்கள்.

மனித உரிமை மீறல் கேள்விகளுக்கு அதிவேக பாதை நிர்மாணித்துள்ளோம். விமான நிலையம்,துறைமுகம் நிர்மாணித்துள்ளோம் என சர்வதேச விசாரணைகளின் போது கூற முடியாது.

அடுத்த வருடம் மார்ச் மாதம் நாட்டுககு பாரிய நெருக்கடியான மாதமாகும். சர்வதேச மனித உரிமைகள் தொடர்பாக பேசும் போது துரோகிகளாக முத்திரை குத்துகிறீர்கள்.

சனல் 4 இலங்கைக்கு வரச்சொல்லி எங்கும் போகவில்லை. யுத்தகாலத்தில் சனல் 4 ஊடகம் இலங்கைக்கு வரவில்லை.யுத்தத்தை பதிவு செய்ய அரச ஊடகங்களே நேரடியாக அங்கு சென்றன. தனியார் ஊடகங்கள் செல்லவில்லை. அப்படியானால் அரச ஊடகங்களே சாட்சியங்களை வெளிநாடுகளுக்கு வழங்கின என்றார்.

(அ-2)

## மரபணு சோதனை தொடர்பான அறிக்கையை விரைவில் பெறலாம்

### நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

அடையாளம் காணப்படாத சடலம், நுட்பமான முறையில் செய்யப்படும் கொலைகளை கூட கண்டறியக் கூடிய மரபணு பரிசோதனை தொடர்பான அறிக்கையை, மக்கள் துரிதமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நீதியமைச்சு, சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதம் நேற்று முன்தினம் நடைபெற்றது.இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மரபணுப் பரிசோதனை அறிக்கைகளை இலங்கை மக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இலகுவாகவும் உடனடியாகவும பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட மரபணுப் பரிசோதனை ஆய்வுக் கூட்டத்தில் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை சாட்சியாளர்களை பாதுகாக்கும் சட்டமூலத்திற்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளதாகவும் அடுத்த வருட ஆரம்பத்தில் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இறுதி பணிகளுக்காக சட்டமூலம் சட்டவரைவாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் பாதுகாப்பு மற்றும் சிறுவர் காப்பகங்கள் தொடர்பான புதிய சட்டமும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

நீதிபதிகளுக்காக பதவி உயர்வுகளின் போது அவர்களின் செயற்திறன்களை மதிப்பீடு செய்ய நீதிச் சேவைகள் ஆணைக்குழுவை ஒரு கருவியாக பயன்படுத்தும் முறையும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது என்றார். (அ-2)

## மாவீரர் தின பதாகை ஏந்திய மாணவர்கள் மீது விசாரணை

மாவீரர் தின பதாகையினை ஏந்திச் சென்ற மாணவர்கள் தொடர்பான விசாரணை இன்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மாவீரர் தினம் சம்பந்தப்பட்ட பதாகையினை களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமுக்கு முன்பாக ஏந்திக் கொண்டு சென்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பட்டியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் பயிலும் மாணவர்கள் இருவருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு இன்று திங்கட்கிழமை களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கடந்த மாதம் கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரும் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதை அடுத்து இன்று வரை விளககமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

கடந்த வாரம் சிரேஷ்ட சட்டத்தரணி பேரின்பம் பிறேம்நாத் சமர்ப்பித்த மனுவின் பேரில் இவர்கள் இருவரும் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி ஆர்.எப்.றியாழினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். (அ-2)



நாயன்மார்கட்டைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர் துரையப்பா மகாதேவனுக்கு சபையின் முதலமைச்சர் அல்ஹாக் ரஜீப் ர.மஜீத் திருகோணமலை சென்மேரியஸ் கல்லூரியில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் சாமஸ்ரீ தேசமானிய விருது வழங்கி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

## நாம் மண்டேலாவின் வழியில் பயணிப்பதை தடுக்க முடியாது

### மனோ கணேசன் தெரிவிப்பு

நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை மூன்று கட்டங்களை கொண்டது என்பதை இந்நாட்டு அரசியல் அதிகார தலைவர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

அவர் வழியில் நாம் பயணிப்பதை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

தென்னாபிரிக்கவின் முதலாம் கறுப்பின ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் மறைவையொட்டி மனோ கணேசன் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நெல்சன் மண்டேலாவின் வாழ்வை சாத்வீக போராளி ,ஆயுத போராளி ,தேசிய தலைவன் என்ற மூன்று கட்டங்களாகவே நாம் பார்த்து புரிந்து கொள்ள வேண்டும்.

முதலாவது அவர் இனவாத அடக்கு முறைக்கு எதிரான ஒரு சாத்வீக போராளி. இரண்டாவது சாத்வீக சமர் இராணுவ அடக்கு முறையால் நசுக்கப்பட போது ஆயுதம் தூக்க நிர்ப்பந்திக்கபட்ட ஒரு ஆயுத போராளி.

மூன்றாவது உலகத்தின் துணையுடன் வெற்றி பெற்று ஆட்சியதிகாரத்தை பெற்றதன் பின், சமரில் தோல்வியடைந்த வெள்ளையர் தரப்பையும் அரவணைத்து உண்மையான நல்லெண்ண தேசிய ஐக்கியத்தை உருவாக்கிய மனிதாபிமானமிக்க மகத்தான ஒரு தேசிய தலைவன்.

இந்த மூன்று கட்டங்களும் சேர்ந்ததுதான மண்டேலா சிந்தனை. இந்த சிந்தனைதான் இந்நாட்டு தலைவர்களுக்கு வழி காட்ட வேண்டும். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியத்தில் காவியம் படைத்த மேதை வால்ட்டிஸ்னி

"வித்தகக் கலைஞன் கைபட்டு விட்டு விட்டால் விறகுக் கட்டை கூட வீணையாகிவிடுகிறது...''

-கவிஞர் மு. மேத்தா -

இருக்கவே போதிய இட வசதி யில்லாத அந்தக்கட்டடத்தில் ஒரு சுண்டெலி அங்குமிங்கும் ஓடி உபத்திரப்படுத்திக்கொண்டிருந்தது.

சித்திரம் வரைய போதிய இடமில்லை. இந்த நிலையில் இதன் அட்டகாசம் வேறு.

அந்தப் பழைய கட்டடத்துக்குள் அங்குமிங்கும் பாய்ந்தோடிய சுண் டெலியை மானிடம் மறவாத கதாப்பாத்திரமாகப் படைத்து விட்டான் அந்த ஓவிய மாமேதை வால்ட்டிஸ்னி!

அவன் படைத்த அந்த பாத்திரமே மிக்கிமவுஸ்.

இறவாத அந்தக் கதாப்பாத்திரம் புகழையும் கோடிக்கணக்கான பணத்தையும் வாரித்தந்தது வால்ட்டிஸ்னிக்கு.


கேலிச்சித்திரங்கள் மூலம் (Cartoon) விலங்குகளை விளையாட வைத்து வேடிக்கை காட்டிய வியப்பூட்டும் விந்தை மனிதர் அவர்.

சிறுவர் முதல் பெரியவர் வரை பார்த்து ரசித்து பரவசம் அடையச் செய்தவர் அவர்.

1928 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி அவர் கற்பனைக்கு வடிவம் கொடுத்த மிக்கி மவுஸ் கார்ட்டூன் நட்சத்திரம் (Cartoon Star)உருவானது!

கொடுத்த "மிக்கி மவுஸ்!''

ஆரம்பத்தில் சித்திரத்தை சிறிது காலம் விட்டு விட்டு அம்புலன்ஸ் வண்டிச் சாரதியாக தொழில் புரிந்த டிஸ்னி



இது தொடர்பான புத்தகம் 1930 இல் வெளியாகியுள்ளது. சரியாக வரையத் தெரியாது என்று கேலி செய்யப்பட்டு திருப்பி அனுப்ப ப்பட்ட கேலிச்சித்திரக்காரர் டிஸ்னியை திரும்பிப் பார்க்க வைத்தது. அ வருக்கு உபத்திரம் தூரிகையைத் தூக்கி எறிந்து விடவில்லை.

மீண்டும் இதனைக் கையில் தூக்கினார். ஓவியத்தை ஓயவிடாது மீண்டும் மீண்டும் சலிக்காது, சளைக்காது முயற்சியில் ஈடுபட்டார்.

1938இல் அவர் தயாரித்த முதல் கார்ட்டூன் படமான வெண் பனியும் ஏழு குள்ளர்களும் என்ற படத்திற்கு ஆயிரக்கணக்கான ஓவியங்களையும் புகைப்படங்களையும் அவர் தயாரிக்க வேண்டியிருந்தது.


அவரது விடாமுயற்சிக்கு பலன் கிட்டாமல் போய்விடவில்லை. இந்தப் படத்திற்கு டிஸ்னிக்கு பரிசு கிடைத்தது!

இன்று டிஸ்னியின் சிறந்த கார்ட்டூன் படங்களாக டொனால்ட் டக், சின்டெர்லா, ஆபிரிக்க சிங்கம், பாலைவனத்தின் ஜீவராசிகள் என்பன போற்றிப் புகழ்ந்து பேசப் படுகின்றன. ஓவியத்தில் டிஸ்னி ஒரு மறுமலர்ச்சியாளன் என்று கூறி னால் அது மிகையாகாது.

வால்ட்டிஸ்னி திரைப்படத் தொழி லில் புது மெருகூட்டியவர். திரைப்பட உலகில் அவர் புகுத்திய புதுமையை உலகம் என்றும் மறக்காது. ஹொலி வூட் படங்களை விட வசூலில் பெரும் வரவேற்பையும் டிஸ்னியின் கார்ட்டூன் படங்கள் பெற்றன.

1932 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக பத்து வருடங்கள் ஒஸ்கார் விருதைப் பெற்ற மகத்தான பெருமை டிஸ்னியின் படங்களுக்கு உண்டு

தனிமனித முயற்சிக்கு டிஸ்னி ஓர் நல்ல எடுத்துக் காட்டாகும். எல்லோரும் இன் புற்றிருக்க வேண்டும் என்ற பரந்த சிந்தனையுடைய டிஸ்னி கலிபோர்னியாவில் டிஸ்னி லாண்ட் என்ற பூங்காவை உருவாக்கி பின்னர் புளோரிடாவில் சுமார் 28 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் விஸ்தரித்தார்.



து.கணேசலிங்கம்

பரந்து விரிந்து பார்ப்பவர்களை பல விதத்திலும் மெருகூட்டியது, பரவசப்படுத்தியது இந்த அபூர்வ பூங்கா.

1955 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17இல் இந்த அபூர்வ பூங்கா அவரது கற்பனையால் உருவாக் கப்பட்டது. இருக்கவே போதிய இடமின்றித் தவித்த டிஸ்னி இப்படி ஒரு அற்புத பூங்காவை இத்தனை ஏக்கரில் மக்களை மகிழ்விப்பத ற்காக உருவாக்கியது ஓர் அபூர்வ சாதனையே!

இந்த உலகில் மனிதனது கற்பனை இருந்து கொண்டிருக்கும் வரை டிஸ்னி லாண்ட் பூரணமடையாது, என்பது அவரது ஆழ்ந்த கருத்து.

ஆம், ஓவிய மேதை வால்ட் டிஸ்னியின் அபூர்வ சாதனைகள் என்றெல்லாம் வளர்ந்து நிலைந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை!

---

## கலாபூஷணம் விருது பெறுவோர் விபரம்

இவ்வாண்டின் கலாபூஷணம் விருதுபெறும் 70 பேரின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன. விருது பெறுவோர் விபரம் வரு மாறு,

**இலக்கியம்**

சி.செகராசசிங்கம் (வதிரி), செ. குமாரசாமி (நாவற்குழி மேற்கு), திருமதி.வல்லிபுரம் பத்தினிப் பிள்ளை (துன்னாலை மத்தி), வி.செல்வரத்தினம் (அராலி மத்தி), வ.சிவநேசன் (உடுவில்), க.நடராசா (கல்லடி), ஆ.தங்கராசா (ஆரையம் பதி-03),நா.கணேசலிங்கநாதன் (வட்டு வடக்கு), சி.நடராஜா துரை ராஜா (திருகோணமலை), க.நல்ல தம்பி (துணவி, வலி.மேற்கு), ஐ. சண்முகலிங்கம் (சுரணவாய் தெற்கு), மா.திருநாவுக்கரசு (மட்டக்களப்பு), பொ. ஏகாம்பரம் (கல்முனை 02), மு.மாசிலாமணி (தெமேதரை),க. எதிர்வீரசிங்கம் (அல்வாய் தெற்கு), சி.நவரத்தினம் (திருகோணமலை), தே.சேவியர் (திருகோணமலை), மு.சம்பந்தர் (குண்டகசாலை), செ. விஜயகுமார் (இராகல்), திருமதி. ச.கத் தரின் வயலற் ஆறுமுகம் (திருகோண மலை), க.லோகநாதன் குருக்கள் (அக்கரைப்பற்று), நா.தர்மராஜா (திருநாவற்குளம்).

**கிராமியக்கலை**

இ.முருகுப்பிள்ளை (முள்ளிய வளை)

**நாட்டுக்கூத்து**

மு.செல்லத்துரை (புளியம் பொக்கணை), இ.யேசுதாசன் (மாதகல்), சீ. பாலசுப்பிரமணிய சிவம் (வட்டு மேற்கு), வ.யோகானந்த சிவம் (வட்டு மேற்கு), கு.பொன்னம் பலம் (கொக்கட்டிச் சோலை).

**இசைத்துறை**

ச.லியோ (கரம்பன் கிழக்கு), ஐயம்பெருமாள் (உடப்பு),திருமதி ச. வத்சலாதேவி (மட்டக்களப்பு)

**இசைத்துறை-தவில்**

இ.பாலகிருஷ்ணன் (4 ஆம் கட்டை , இணுவில்)

**இசைத்துறை-நாடகம்**

சு.அருமைநாயகம் (மாமூலை முள்ளியவளை)

**இசைத்துறை -நாதஸ்வரம்**

அ.பாலச்சந்திரன் (அளவெட்டி வடக்கு)

**இசைத்துறை-வயலின்**

கி.பத்மநாதன் (புதுவீதி)

**இசைத்துறை-மிருதங்கம்**

பொ.பாலசுப்பிரமணியம் (முள் ளியவளை)

**மேடை நாடகம்**

வே.சிற்றம்பலம் (நவாலி தெற்கு),சி.சிவநேசன் (அல்வாய் வடமேற்கு), இ.பாலசுப்பிரமணியம் (மாதனை), க.கணேசானந்தம் (நொச்சிமுனை), வெ.முத்துச்சாமி (வல்வெட்டித்துறை), ச.உருத்தி ரேஸ்வரன் (புலோலி வடக்கு).

**இலக்கியம், நாடகம்**

மு.மாசிலாமணி (தூவடி வடக்கு).

**சிற்பக்கலை**

செ.விசுவலிங்கம் (நீர்வேலி வடக்கு), சு.நாகலிங்கம் (மட்டக்கள ப்பு.), க.கதிர்வேலு (உரும்பிராய் கிழக்கு), செ.சண்முகநாதன் (மாவி ட்டபுரம்),

**நாடகம்,யோகாசனம்**

ச.தியாகராசா (வலிகாமம் தெற்கு)

**புராணபடனம், சமய சொற்பொழிவு**

செ.தேவராசா (வைரவ புளி யங்குளம்)

**ஊடகத்துறை**

சோ.நடேசர்மா (ஆட்டுப்பட்டித் தெரு கொழும்பு-13), க.ஜோன் ராஜன் (ஆலையடி வேம்பு)

**இசைநாடகம்**

ச.பஞ்சாட்சரம் (அரியாலை)

**நாடகம்**

கி.பஞ்சரெத்தினம் தேவநாய கம் (தெஹிவளை), ந.இராமநாதன் (உடையார் கட்டு),

**புராணபடனம்**

த.மகேந்திரா (அம்பாறை)

**இலக்கிய ஊடகத்துறை**

சி.பண்டாரம் பிரேமநாதன் (கேகாலை), பொ.புஸ்பராஜ் (கொழு ம்பு-15)

**ஓவியம்**

சு.இரத்தினகோபால் (நாச்சிமார் கோவிலடி)

**சிற்பக்கலை, ஓவியம்**

ம.அன்ரன் யோசப் (18/b, கோவிலடி வீதி), பொ.கனகரத்தினம் (கூமாங்குளம்)

**இலக்கியம் மெல்லிசை**

பே.கனகரத்தினம் (உப்புவெளி)

**நாடகம் ஒப்பனை**

சி.ஐயாத்துரை (அளவெட்டி கிழக்கு)

**பல்துறை**

க.சபாரத்தினம் (ஆரையம்பதி 2)

**இலக்கியத்துறை சமயசொற்பொழிவாளர்**

சு.கனகரத்தினம் (ஜிந்துப்பிட்டி வீதி)

**சமய இலக்கியம்**

ஆ.கனகரத்தினம் (சுழிபுரம் கிழக்கு)

**பக்தி இலக்கியம்**

இ.சரவணபவன் (அராலி மத்தி

**பரதநாட்டியம்**

திருமதி சி.தர்மகுலதேவி (வெள்ள வத்தை)

**நாடகத்துறை**

சி.கந்தையா (கொழும்பு 13)

**நாடகம்- சினிமா**

வ.ஏழுமலைப்பிள்ளை (மலையாளபுரம் தெற்கு)

---

## வடக்கு முதலமைச்சரின் புதுடில்லி விஜயம் எப்போது?

### பதிலை எதிர்பார்க்க வேண்டாம் என்கிறது இந்தியா

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் புதுடில்லி பயணம் எப்போது என்ற கேள்விக் கான பதிலை முன்கூட்டியே எதிர் பார்க்க கூடாது என்று இந்தியா தெரி வித்துள்ளது.

புதுடில்லியில் நேற்று முன்தி னம் வாராந்த செய்தியாளர் சந்திப் பில் பங்கேற்ற இந்திய வெளி விவ கார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீனிடம் மாலைதீவு ஜனா திபதி மற்றும் விக்னேஸ்வரனின் இந்தியப் பயணம் குறித்து இன்ன மும் முடிவு செய்யப் படவில்லையா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த இந்திய வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீன் கூறுகையில்,

சரியான நாட்கள் தொடர்பாக மாலைதீவு அரசுடன் கலந்துரையாடி வருகிறோம். பயண நாள் தொடர்பாக குறுகிய காலம் முன்னதாகவே அறிவிப்பது வழக்கம். இதற்கு முன்னரும் அவ்வாறு தான் செய்திருக்கிறோம்.

எனவே இந்தக் கேள்விக்கு முன் கூட்டியே பதில் எதிர்பார்க்கக் கூடாது. எனினும் அடுத்த வாரத்தில் இவர்களின் பயணத்திற்கு வாய்ப் பில்லை என்றும் அவர் தெரிவித் துள்ளார். (அ-2)

## சர்வதேச திரைவிழாவிற்கு ஜனாதிபதிக்கு அழைப்பு

(கொழும்பு)

புது டில்லி சர்வதேச திரைப்பட விழாவில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஸ்ரீ சித்தார்த்த கௌதம் என்ற திரைப்படம் விருதுக்காக தெரிவு செய் யப்பட்டுள்ளது.

புதுடில்லியில் சர்வதேச திரைப்பட விழாவின் அங்குரார்ப்பண வைபவத்தின் ஆரம்ப தின விழாவை அங்குரார்ப்பணம் செய்து வைக்க இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. (அ-2)

## திருவாசக விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் திருவாசக விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மண்டபத்தில் நடைபெறவுள் ளது.


இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி அ.மணிக்கராஜ சர்மா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி.சாந்தி நாவுக்கரசன்,சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில் நந்தனன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் திருவாசக விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பிரதேச ,மாவட்ட மட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் , சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்படவுள்ளன. (அ-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ப.சிதம்பரத்துக்கு ஒரு பகிரங்க மடல்

## -தமிழருவி மணியன்-



மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அவர்களுக்கு... வணக்கம். வளர்கநலம்.. இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமையும் இந்திய அரசின் நிலையும் என்ற தலைப்பில் சென்னையில் சிந்தனையாளர்கள் பங்கேற்ற அரியதோர் கருத்தரங்கில் நீங்கள் ஆற்றிய உரையில் வழங்கிய அபூர்வமான விளக்கங்களை நான் அறிய நேர்ந்தது.

இனப்படுகொலையை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இது குறித்து விரிவான தெளிவான, நேர்மையான, உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும் விசாரணை நடத்தி, குற்றவாளிகளைத் தண்டிக்கும்வரை இந்திய அரசு ஓயாது. இலங்கைத் தமிழர்களை நாங்கள் கைவிடமாட்டோம் என்று ராஜீவ் காந்தியின் பெயரால் சூளுரைக்கிறோம் என்று நீங்கள் சங்குநாதம் செய்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி.

ஈழ நிலத்தில் இலங்கை அரசு இனப்படுகொலையை நடத்தியது என்று முதன்முதலாக நீங்கள் ஒப்புக் கொண்டதற்கு நன்றி. உங்கள் வாக்குமூலம் மத்திய அரசின் வாக்குமூலம் என்று நாங்கள் ஏற்கக்கூடுமா? மாநிலங்களவையில் இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் திரு.ராசா இனப்படுகொலை என்று பேசியதை அவைக்குறிப்பிலிருந்து உங்கள் அரசு அகற்றியது ஏன்? இன்றுவரை மத்திய அரசு ஈழத் தமிழர் அழிவை இனப்படுகொலை என்று ஒருநாளும் குறிப்பிட்டதில்லையே. உங்களுக்குத் தெரிந்த இந்த உண்மை, நீங்கள் முக்கிய அங்கம் வகிக்கும் மன்மோகன் அரசுக்கு மட்டும் ஏன் தெரியாதுபோனது?

இரண்டாம் உலகப் போரில் யூத இனத்தைப் படுகொலை செய்த ஹிட்லரின் நாஜிப் படையின் இரக்கமற்ற நடவடிக்கைகளால் அதிர்ந்துபோன சர்வதேச சமுதாயம், இனியொருமுறை இதுபோன்ற அரக்க மனத்துடன் எந்த அரசும் செயற்பட அனுமதிக்கலாகாது என்று தீர்க்கமான முடிவுடன்... ஐக்கிய நாடுகளின் பொதுக்குழுவில் டிசம்பர் 09,1948 அன்று இனப்படுகொலையைத் தடுக்கவும், மீறுவோரைத் தண்டிக்கவும் ஓர் அமைப்பை உருவாக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி, ஜனவரி, 12,1951 அன்று நடைமுறைப்படுத்தியது. அதுதான் Genecide convention என்பதை அறிவார்ந்த நீங்கள் நிச்சயம் அறிவீர்கள். ஓர் அரசு இழைக்கும் கொடுமைகளிலேயே கடுமையானதும், மன்னிக்க முடியாததும் இனப்படுகொலை என்பதில் இரு கருத்து இருக்கவே இயலாது.

இனப்படுகொலையைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்று நீங்கள் மனித குல நாகரிகத்தின் உச்சத்தில் நின்று உரத்த குரலில் அறிவித்துவிட்டீர்கள். ஆனால், இனப்படுகொலை இலங்கை அரக்கர்களால் முள்ளிவாய்க்காலில் அரங்கேறியபோது நீங்களும், உங்கள் மத்திய அரசும் வெறும் மௌனப் பார்வையாளர்களாக மட்டும் இருக்கவில்லை. அந்த மாபாதகச் செயலுக்குப் பக்கபலமாகவும் இருந்தீர்கள் என்பதை உலகம் நன்கறியும். ஈழத் தமிழர் அழிவுக்கு நாள் குறித்த இலங்கை அரசுக்கு இணக்கமாக நடந்துகொண்ட நீங்கள், போரை நிறுத்த எவ்வளவோ முயன்றதாகச் சொல்கிறீர்கள். கேழ்வரகில் நெய்யென்றால் கேட்பவர்களுக்கா புத்தியில்லை?

குற்றவாளிகளைத் தண்டிக்கும் வரை இந்திய அரசு ஓயாது என்கிறீர்களே... குற்றவாளிகள் ராஜபக்ச சகோதரர்களைத் தவிர வேறு யார்? ஒரே நாளில் 40 ஆயிரம் தமிழர்களை முள்ளிவாய்க்காலில கொன்று குவித்த ராஜபக்சவை உங்கள் அரசுதானே குடியரசு மாளிகையில் ரத்தினக்கம்பளம் விரித்து வரவேற்று விருதோம்பி மகிழ்ந்தது? கொமன்வெல்த் விளையாட்டு அரங்கில்அவருக்குத்தனி மரியாதை தந்து பரவசப்பட்டவர் நம் பாரதப் பிரதமர்தானே! புத்தகயாவிலும், திருப்பதியிலும் அவர் புனிதயாத்திரை நடத்துவதற்கு அனுமதியும், பாதுகாப்பும் அளித்தது யார்? நீங்கள் அறிவாளி என்பதில் எங்களுக்கு எள்ளளவும் ஐயமில்லை. அதற்காக நாங்கள் எதையும் நம்பும் முட்டாள்கள் என்று நீங்கள் முடிவெடுத்துப் பேசுவதில் நியாயமில்லை.

இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம், வடக்கு- கிழக்கு மாகாண இணைப்பு, தமிழர்களின் வாழ்வுரிமைக்கு உத்தரவாதம் பெற்றுத்தரும் 13ஆவது திருத்தத்தை இலங்கை அரசு நிறைவேற்றும்வரை இந்தியா ஓயாது என்றும் நீங்கள் சுருதி பேதம் சிறிதும் இல்லாது சொல்லி இருப்பதைப் படித்தபோது சிரிப்பை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை சிதம்பரம் அவர்களே!

ராஜீவ் காந்தி- ஜெயவர்த்தன ஒப்பந்தம் 1987 இல் உருவானது. அது, இடையில் அரசியலமைப்புச் சட்டத்தில் 13 ஆவது திருத்தமாக நவம்பர் 14,1987 அன்று அங்கீகரிக்கப்பட்டது. இடையில் 26 ஆண்டுகள் ஓடிவிட்டன. நீங்களும் இந்திய அரசும் இன்றுவரை இடையறாமல் ஈழத் தமிழருக்கான அரசியல் தீர்வை 13 ஆவது திருத்தம் மூலம் பெற்றுத் தருவதற்கு இரவுபகல் பாராமல் முயன்றுகொண்டிருக்கிறீர்கள். ஆனால், அந்த அரசியல் தீர்வோ இந்திய அரசின் இயலாமையால் தொடுவானம்போல் பிடிபடாமல் விலகி நின்று வேடிக்கை காட்டுகிறது. ஏன் இந்த நிலை என்று எவரேனும் கேட்டால், விடுதலைப் புலிகள் தடையாக இருந்தனர் என்று தயங்காமல் பழி தூற்றுவீர்கள்.

விடுதலைப் புலிகள் இந்திய அரசின் ஆதரவோடு இலங்கை இராணுவத்தால் மே 18,2009 அன்று முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதாக இலங்கை அரசு ஆரவாரத்துடன் அறிவித்து நான்கரை ஆண்டுகள் நடந்துவிட்ட பின்னரும் 13 ஆவது திருத்தம் ஏன் நடைமுறைக்கு வரவில்லை நிதியமைச்சரே?

போர் நடந்த நேரத்தில்,13 ஆவது திருத்தம் வழங்கும் உரிமைகளோடு கூடுதலாகவும் சில உரிமைகள் ஈழத் தமிழருக்கு வழங்கப்படும் என்று வாக்குறுதி வழங்கிய இலங்கை அரசின் வாய் மலர்ந்த அரசியல் தீர்வுதான் 13 பிளஸ் என்பதை அரசியல் விழிப்புணர்வுள்ள ஒருவராவது மறக்க முடியுமா? இன்று அதே அரசு, தமிழ்மக்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பது பற்றிப் பேச நான் என்ன முட்டாளா? என்று ஆணவத்துடன் பத்திரிகையாளர்களிடம் பதிவு செய்ததையும் 13 மைனஸ் என்று புதிய பல்லவி பாடுவதையும் மன்மோகன் அரசு ஏன் மனதில் கொள்ளவில்லை.?

ஈழத் தமிழருக்குரிய உரிமைகள் அனைத்தையும் அள்ளி வழங்கும் அதிசய அட்சய பாத்திரம் 13 ஆவது திருத்தம் என்பதுபோன்ற பொய்யான மாயத் தோற்றத்தை நீங்களும், காங்கிரஸ் அறிவு ஜீவிகளும் இன்னும் எவ்வளவு காலம் உருவாக்கி இந்த இனத்தை ஏமாற்றப்போகிறீர்கள்? இந்திய மாநிலங்களுக்குரிய உரிமைகள் ஈழ மண்ணில் வடக்கிலும் கிழக்கிலும் சென்று சேர இந்த 13 ஆவது திருத்தம் எந்த வகையில் உதவக்கூடும்? இலங்கை அரசின் கண்ணசைவுக்கு ஏற்ப காரியமாற்றும் ஆளுநரே உண்மையான நிர்வாக அதிகாரம் உள்ளவர். அவருக்கு உதவுவதும் பரிந்துரைப்பதும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையின் பணி. நிதி மேலாண்மை ஆளுநர் வசம். ஆளுநர் விருப்பத்துக்கு இசைய மறுக்கும் மாகாணசபை கலைக்கப்படும். அந்த அதிகாரம் இலங்கை அரசின் கையில்.... 13 ஆவது திருத்தம் சொல்லும் செய்தி இதுதானே!

சட்டம், ஒழுங்கு, காவற்றுறை, அரசுநிலம் என்று எதன் மீதும் முற்றுரிமை மாகாண அவைக்கு அறவே இல்லை. தேசிய நலன் என்ற போர்வையில் இலங்கை நாடாளுமன்றம் தமிழர் நலனுக்கு எதிராக எந்தச் சட்டத்தையும் இயற்ற முடியும். இதுதானே நீங்கள் முயன்று உருவாக்கிய 13 ஆவது திருத்தத்தின் அம்சங்கள்! வடக்கும் கிழக்கும் இணைந்து ஒரே மாகாணமாக மாறும். சிங்களத்துடன் தமிழ், இலங்கையின் ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்படும். ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் என்ற இரண்டு அம்சங்கள் மட்டும்தான் ராஜீவ்-ஜெயவர்த்தன ஒப்பந்தத்தில் உருப்படியானவை.

ஆனால், அந்த இரண்டும் சிங்கள பௌத்த பேரினவாத கூட்டத்தால் குழிதோண்டிப் புதைக்கப்பட்டபோது காந்தியின் குரங்குகளாக (இது தவறான சொற்பிரயோகம் இல்லை) நீங்கள் அனைவரும காட்சி தந்தது ஏன்? விளக்குவீர்களா? எந்த உரிமையும் தமிழருக்குத் தருவதற்கு வழிவகுக்காத இந்த 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி ஈழத் தமிழரின் அரசியல் அதிகாரம் பழுதுபடாமல் பாதுகாக்கப்படும் வரை இந்திய அரசும் நீங்களும் ஓயப்போவதே இல்லை. நல்ல நாடகம்.

நீங்கள் ஒரு கற்றறிவாளர், புகழ்பெற்ற வழக்கறிஞர். சர்வதேச சட்டங்களைக் கரைத்துக் குடித்தவர். இந்த ஏதுமறியாப் பாமரனுக்கு நீங்கள்தான் தெளிவான பதிலைத் தரக்கூடும். இரண்டு இறையாண்மை மிக்க நாடுகள் பலமுறை கூடிப் பேசி, விவாதித்து.... இறுதியில் ஓர் ஒப்பந்தத்தில் கையெப்பமிட்டால், அந்த ஒப்பந்தம் இரு நாடுகளையும் சம அளவில் கட்டுப்படுத்துவதுதானே நியாயம்? பின்னாளில் அரசுப் பொறுப்பில் அமரும் அரசியல்வாதிகளின் விருப்பு வெறுப்புக்கேற்ப ஒரு நாடு தன்னிச்சையாக அந்த ஒப்பந்தத்தைக் குப்பைக் கூடையில் வீசியெறிந்தால், அந்த இழிசெயலை இன்னொரு நாடு பார்த்தும் பாராமல் நடந்துகொண்டால் இரண்டு அரசுகளின் இறையாண்மை என்னாவது? இறையாண்மை பற்றி அதிகமாகப் பேசிக்கொண்டிருக்கும் நீங்கள்தான் இந்த அறிவிலிக்கு விளக்கவுரை வழங்க வேண்டும்.

இலங்கை அரசு, இப்போது 13 ஆவது திருத்தத்தை நிராகரித்தாலோ, நீர்த்துப்போகச் செய்தாலோ, தார்மீக அடிப்படையில் அது ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கும் தகுதியை இழந்துவிடாதா? அதனுடைய தவறைத் தட்டிக் கேட்கும் பொறுப்பு இந்தியாவுக்கு இல்லையா? நீங்கள்தான் எனக்கு தெளிவுரை தரவேண்டும். காரணம், காங்கிரஸில் உள்ள அறிவுஜீவிகளின் ஆதூரசம் நீங்கள் ஒருவர்தான் என்று பழைய காங்கிரஸ்காரனாகிய நான் பூரணமாக அறிவேன்.

இலங்கை இறையாண்மை பெற்ற தனி நாடு. அங்கு சிறுபான்மையினர் தனிநாடு கேட்க முடியாது. இதில் உணர்ச்சிப்பூர்வமாக முடிவெடுக்க முடியாது. அறிவுப்பூர்வமாக அரசியல் முடிவெடுக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கிய நீங்கள், இந்தியாவில் காஷ்மீர், நாகலாந்து, மணிப்பூர் மாநிலங்களின் பிரிவினை கோரிக்கையை நினைவூட்டியிருக்கிறீர்கள். இந்திரா காந்தி வங்கதேசத்தைப் பிரித்துக் கொடுக்கப் படை நடத்தியபோது பாகிஸ்தான் இறையாண்மை பறிபோவதை ஏன் சிந்திக்கவில்லை? ஈழத் தமிழரின் பசியாற்ற ராஜீவ் காந்தி வான்வழியாக விமானங்களை அனுப்பி உணவுப் பொருட்களை வீசியபோது இலங்கை இறையாண்மை மீறப்படுவதை ஏன் பொருட்படுத்தவில்லை? அப்போதெல்லாம் காஷ்மீரிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் பிரிவினைக்குரல் எழவில்லையா?

ஒரு இறையாண்மை உள்ள நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தருவது எளிதல்ல என்று புத்தஞானம் போதிக்கிறீர்கள். அல்பேனியர்களுக்கும் செர்பியர்களுக்கும் ஒத்துவராத நிலையில் நடந்த இனப்போரில் 11 ஆயிரம் பேர் பலியானதும் பத்து லட்சம் அல்பேனியர்கள் துரத்தியடிக்கப்பட்டதும், செர்பியர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட அல்பேனியர்கள் சர்வதேச சமுதாயத்தின் அங்கீகாரத்துடன் கொசோவா தனி நாடு கண்ட சரித்திரம் உங்களுக்குத் தெரியாதா? யுகோஸ்லேவியா இன அடிப்படையில் சிதறுண்டதைச் சிந்தியுங்கள்.

ஆப்பிரிக்காவில் எரித்ரியா, தெற்கு சூடான், இந்தோனேசியாவின் பிடியிலிருந்துவிடுபட்ட திமோர் ஆகியவற்றில் மக்கள் வாக்கெடுப்பு மூலம் தனி நாடு கண்ட வரலாற்றுப் பக்கங்களை உங்கள் பணிகளுக்கிடையில் கொஞ்சம் பிரித்துப் படியுங்கள். நீங்கள் மிகவும் சீரியஸான மனிதர் என்று இதுவரை நினைத்திருந்தேன். வடிவேலுவைவிட நகைச்சுவை உங்களுக்கு நன்றாக வருவதை இப்போதுதான் அறிந்தேன். சர்வதேச அரங்கில் மன்மோகன் அரசு கடந்த நான்கரை ஆண்டுகள் மேற்கொண்ட கடும் முயற்சியினால்தான், கனடா போன்ற நாடுகள் கொழும்புக்கு எதிராகப் பேசிவருகின்றன என்று எப்படி உங்களால் இவ்வளவு நகைச்சுவையாக பேச முடிகிறது? கொஞ்சம் போனால், பிரிட்டன் பிரதமர் டேவிட் கெமரூன் மன்மோகனிடம் நடத்திய ஆலோசனைப்படியே யாழ்ப்பாணம் போனதாகவும், கொமன்வெல்த் மாநாட்டில் இலங்கைக்கு எதிராகப் பேசியதாகவும் கதை சொல்ல முனைவீர்களோ?

சிதம்பரம் அவர்களே... சமத்துவம் இல்லாத இடத்தில் சமதர்மம் இருக்காது. சமதர்மம் நிலவாத சூழலில் சுதந்திரக் காற்றை யாரும் சுவாசிக்க இயலாது. சிங்கள பௌத்த பேரினவாத அரசும், இனவாத அமைப்புக்களும் ஒருநாளும் ஈழத் தமிழருக்கு எந்த உரிமையும் வழங்கப் போவது இல்லை. இலங்கையைப்போன்ற போக்கிரி அரசை நட்பு நாடு என்று நீங்களும் உங்கள் அரசும் பாராட்டலாம். ஆனால், உலக நாடுகள் நீண்ட நாள் வேடிக்கை பார்க்காது. ஒருநாள் அவை வெகுண்டு எழும். அப்போது ஈழ மக்கள் வாக்கெடுப்பு மூலம் நிச்சயம் தனித் தமிழ் ஈழம் மலரும்.

குற்றவாளிகளைத் தண்டிக்கும் வரை இந்தியா ஓயாது என்றீர்கள். அடுத்தநாளே அந்தக் குற்றவாளிகளின் கடற்படையை வலுப்படுத்தி எங்கள் மீனவர்களை மேலும் கொன்று குவிக்க வழிவகுக்கிறீர்கள். உங்கள் வார்த்தைகளுக்கு நம்பகத்தன்மை இல்லை என்பதை நீங்களே இதற்கு முன்னர் நிரூபித்திருக்கிறீர்கள். தமிழ் மாநில காங்கிரசில் இருந்து விலகி, ஜனநாயகப் பேரவை நாயகராக நீங்கள் வலம் வந்தபோது ஒரு வார இதழில் நமக்கே உரிமையாம் என்று ஒரு கட்டுரைத் தொடரை வடித்துத் தந்தது உங்கள் நினைவில் நிழலாடுவது உண்டா? இந்தியாவின் தேர்தல் விதிகளை மாற்றுவதை ஆதரிப்பவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். முதலில் மாற்றப்பட வேண்டிய விதி எது தெரியுமா? யாரும் 10 ஆண்டுகளுக்கு மேல் பிரதமராகவோ, முதலமைச்சராகவோ இருக்க முடியாது என்றொரு விதியை இயற்ற வேண்டும். அதேபோல் யாரும் மூன்று பதவிக் காலங்களுக்கு மேல் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராக இருப்பதற்கும் தடை விதித்து சட்டம் இயற்ற வேண்டும். பழையன கழிவதற்கும், புதியன புகுவதற்கும் இதுவே சிறந்த வழி என்று அதில் ஊருக்கு உபதேசம் செய்தீர்களே... அதன்படி நீங்கள் நின்றீர்களா? தேர்தல் விதியையே மாற்றி எழுதிய மகத்தான மனிதரல்லவா நீங்கள்! இந்த கூட்ட அமைப்பாளரும் நான்தான். அழைப்பாளரும் நான்தான். பேச்சாளரும் நான்தான் என்று எவ்வளவு வெளிப்படையாக உங்கள் இதய வலியை இறக்கிவிட்டீர்கள்! முதலில் பல்குழுக்களாகப் பாழ்பட்டுக் கிடக்கும் தமிழநாடு காங்கிரசை ஒன்றாக்கப் பாருங்கள். அதற்குப் பிறகு இலங்கையின் வடக்கையும் கிழக்கையும் ஒன்றாக்க ஓயாது போராடலாம்!

-விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை போர்க்குற்றம் தொடர்பில் இந்தியா பாராளுமன்றில் விவாதம்

## அனுமதி கோருகிறார் கருணாநிதி



(சென்னை)

இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் முயற்சியில் தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி இறங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் மேற்கொண்ட யுத்தத்தின் போது யுத்த குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

193 ஆம் சட்டத்தின் அடிப்படையில் பாராளுமன்றில் இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த கருணாநிதி முயற்சி எடுத்து வருகின்றார்.

இந்திய பாராளுமன்றில் விவாதம் நடத்துவதற்கு அனுமதியளிக்குமாறு கருணாநிதி கோரியுள்ளார். மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த அனுமதியளிக்கப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்றக் குழுத் தலைவர் ரீ.கே. பாலு. இந்தக் கோரிக்கை தொடர்பில் சபாநாயகருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் நம்பகமானதும், வெளிப்படையானதுமான சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியமானது என இந்திய பாராளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகம் கோரியுள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பில் இந்திய பாராளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்படும் வரையில் ஓயப் போவதில்லை என பாலு தெரிவித்துள்ளார்.

(அ-2)

# சேது சமுத்திர திட்டத்தில் இந்தியாவுடன் பொறிமுறை உருவாக்க இலங்கை விருப்பம்

**சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் தொடர்பாக மதிப்பீடு செய்வதற்கும் தொடர்ந்தும் இதனை செயற்படுத்துவதற்கும் இந்தியா-இலங்கை கூட்டுப் பொறி முறை ஒன்றை உருவாக்குவதற்கு இலங்கை விருப்பம் தெரிவித்துள்ளது.**

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த வல்லுநர் குழுவால் தயாரித்த அறிக்கையில் சில தவறுகள் காணப்படுவதால் அதனை இந்தியாவிடம் வழங்கி இது தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்வதுடன், இதனை அமுல்படுத்துவதற்கு இந்தியாவுடன் இணைந்து பொறிமுறை ஒன்றை உருவாக்கி இத்திட்டத்தைக் கண்காணித்து கால்வாய் கட்டுகின்ற நடவடிக்கையை தொடர விரும்புவதாகவும் கடந்த நவம்பர் மாதம் 25 ஆம் திகதி இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்திட்டம் தொடர்பில் இந்தியாவானது "மிகவும் சொற்பமான தகவல்களையே பகிர்ந்துள்ளது" என இந்த ஆணைக்குழுவைத்தலைமை தாங்கும் இலங்கை கல்வி அமைச்சின் செயலர் அரியரட்ண ஹேவாஜ் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் வல்லுநரான பேராசிரியர் சாந்த கென்னாயக்கே ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை இந்தியாவிடம் மீண்டும் மீண்டும் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை மதிப்பீடு செய்து கண் காணிப்பதற்கு கூட்டுப் பொறி முறை ஒன்றைத்தயாரிப்பதற்கு முன்வருமாறு கோரிக்கை விடுத்த போதிலும் இது தொடர்பில் இந்தியா எவ்வித சாதக மான பதிலையும் முன்வைக்கவில்லை என இந்த ஆணைக் குழு மேலும் தெரிவித்துள்ளது.

இந்தக் கால்வாயை வெட்டுதல் மற்றும் தொடர்ச்சியாக இதனைத் திறந்து வைத்தல் போன்றன இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில் இந்தக் கால்வாயானது அனைத்துலக கடல் எல்லையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திலேயே அமைந்துள்ளதாகவும் இத்திட்டம் தொடர்பாக ஆராயும் இலங்கையின் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.


இத்திட்டம் முழுவதையும் இந்திய சூழல் பாதிப்பு கற்கைகள் மூலம் மதிப்பீடு செய்யப்படவில்லை எனவும் இதன்மூலம் இந்தியச்சூழலுக்கு எவ்வாறான பாதிப்பு ஏற்படும் என அடையாளங் காணபடவில்லை எனவும் இதேபோன்று இலங்கைத் தரப்பின் பாதிப்பு தொடர்பாக முற்றுமுழுதாக ஆராயப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கால்வாயைத் தொடர்ந்தும் தோண்டுவதால் பாக்குநீரிணை மற்றும் மன்னார் வளைகுடா போன்றவற்றில் வாழும் கடல் உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்படும் எனவும் அனைத்துலக கடல் எல்லைகளுக்கு இரு பக்கத்திலும் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

வல்லுநர்கள் தயாரித்த அறிக்கையில் இந்தக் கால்வாய் தோண்டுவதால் ஏற்படுகின்ற இழப்புகளுக்கு எந்தத் தரப்பு நட்டஈட்டை வழங்கும் எனக் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் இந்தக் கால்வாயைத் தோண்டுவதற்கான அளவீடு தொடர்பில் தெளிவின்மை காணப்படுகிறது.

இத்திட்டத்தை மேற்கொள்ளும் போது ஏற்படும் எண்ணெய்க்கசிவுகள், கழிவு நீர் வெளியேற்றம், தேங்கும் நீரின் அளவு போன்றன தொடர்பில் போதியளவில் கவனம் செலுத்தப்படவில்லை. 1973 இல் உருவாக்கப்பட்ட கப்பல்களிலிருந்து ஏற்படும் மாசடைவைக் கட்டுப்படுத்துகின்ற அனைத்துலக உடன்பாட்டின் பிரகாரம், எண்ணெய்க் கசிவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையை இலங்கை எடுக்கவேண்டும் என இந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கு எதிராக இந்திய உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதால் இத்திட்டத்தை தற்போது இடைநிறுத்த வேண்டியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதே. (அ-2)



நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாடசாலையின் பழைய மாணவனும் ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான மு.சிற்றம்பலம் மாணவருக்கு பரிசில் வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

# சவுதியில் பணியாற்றிய இலங்கை பணிப் பெண்ணுக்கு துன்புறுத்தல்

சவுதி அரேபிய, ரியாத் நகரில் இலங்கைப் பணிப் பெண் ஒருவர் 5 வருடங்களாக சம்பளம் வழங்கப்படாது 9 வருடங்களாக இலங்கைக்கு அனுப்பாது பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. இச்சம்பவத்தில் 43 வயதான குணவதி என்பவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

இவர் பணி புரிவதற்காக சென்ற வீட்டின் உரிமையாளர் மற்றும் அவரது 6 பிள்ளைகளால் இப்பெண் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

பணியாளர்களது கடவுச் சீட்டு புதுப்பிக்கும் நடவடிக்கைளை சவுதியிலுள்ள இலங்கை தூதுவராலயம் மேற்கொள்வது வழமை. இவ்வாறான சந்தர்ப்பத்தின்போதே குணவதியின் துன்பங்கள் தெரியவந்துள்ளதாக தூதுவராலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடவுச்சீட்டு புதுப்பிப்பதற்காக குணவதி செல்லாது அவரது வீட்டு உரிமையாளரே சென்றுள்ளார்.

இதன்போது தூதரக அதிகாரிகள், கடவுச்சீட்டை புதுப்பிக்க முடியாது எனவும் கடவுச் சீட்டின் உரிமையாளர்கள் வரும் பட்சத்திலேயே புதுப்பிக்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் குணவதக்கு தொழில் பெற்றுக் கொடுத்த முகவர் நிலையத்தை தூதுவராலயம் தொடர்பு கொண்டு இவ்விடயம் குறித்து கேள்வி எழுப்பியுள்ளது.

இதன்போது, குறித்த பெண்ணிற்கு சம்பளம் கொடுக்காமை, வீட்டிற்கு செல்ல அனுமதிக்காமை, துன்புறுத்தப்படுகின்றமை போன்ற தகவல்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்பின்னதாக தூதரக அதிகாரிகள் சவுதி அரேபிய ஊடகம் ஒன்றின் மூலமாக இந்த சம்பவம் குறித்த தகவலை வெளிப்படுத்தியுள்ளனர்.

சவுதி அரேபியாவிற்கு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்லும் இலங்கை பணிப் பெண்கள் இவ்வாறு பல துன்பங்களுக்கு உட்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பிரிட்டன் எதிர்க்கட்சியுடன் தமிழர் பேரவை சந்திப்பு

பிரித்தானிய எதிர்க்கட்சி தலைவர் எட் மிலிபெண்ட் தமிழர் பேரவை உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நாவில் நடைபெற இருக்கும் மனித உரிமைகள் மகாநாடு மற்றும் இலங்கையில் நடைபெற்று முடிந்த பொதுநலவாய மகாநாடு தொடர்பாகவும், தொடர்ச்சியாக இலங்கை அரசினால் தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் இனப் படுகொலை தொடர்பாகவும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இச் சந்திப்பில் எட் மிலிபாண்ட் கூறுகையில்,

தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட போர்க்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு மார்ச் மாதம் வரை உலக நாடுகள் பொறுமை காக்ககூடாது எனவும், போர்க்குற்றம் புரிந்த இலங்கை ஜனாதிபதியின் தலைமையில் பொதுநலவாய மகாநாடு நடைபெற்றது மிகவும் கவலைக்குரியதுஎன்றும்தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார.

மேலும், இலங்கையில் தமிழ் மக்கள் மீது தடத்தப்பட்ட போர்க்குற்றத்திற்கு சர்வதேச விசாரணை வரும் வரை தொடர்ந்து தமது கட்சி குரல் கொடுக்கும் என்றும் கூறினார்.

சம காலத்தில் பிரித்தானிய பேரவையின் உறுப்பினர்கள் ரோதார்ஹம் தொழில் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாரா செம்பியனையும் சந்தித்து தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீது இலங்கை அரசினால் மேற் கொள்ளப்படும் இனப்படு கொலை பற்றி கலந்துரையாடினார்கள். இவரும் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார்.

மேலும், இலங்கை புலனாய்வு பிரிவினர்' தொடர்ச்சியாக கடுமையான விசாரணைகளுக்கு உட்படுத்தி வருதல் மற்றும் வெள்ளை வான் கடத்தல் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தமிழ் மக்களுக்குத் தனது உறுதியான ஆதரவைத் தெரிவித்துக் கொண்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சுஜாதாசிங் அமெரிக்கா பயணம்



(வோஷிங்டன்)

ஐ.நா. சபையில் உரையாற்றுவதற காக கடந்த செப்டெம்பர் மாதம் அமெரிக்கா சென்ற பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி ஒபாமாவை வெள்ளை மாளிகையில் சந்தித்து பேசினார்.

இந்த பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்ட கொள்கை முடிவு களை நிறைவேற்றுவது குறித்தும், அடுத்த கட்ட பேச்சுவார்த்தை நடத்தும் விதமாகவும், இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் சுஜாதாசிங் 4 நாட்கள் அரசுமுறை பயணமாக வோஷிங்டன் பயணித்துள்ளார்.

அங்கு அவர் இருநாட்டு உறவுகளை மேம்படுத்தும் விதமாகவும், பிராந்திய ஒத்துழைப்பு குறித்தும் அமெரிக்க உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இந்த பயணத்தின் போது, ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் நாடுகளுக்கான அமெரிக்க சிறப்பு தூதர்களையும் சுஜாதாசிங் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

மேலும் அமெரிக்க எரிசக்தி துணைச்செயலாளர் டேனியல் போன்மேனுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அவர், அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனின் அதிகாரிகள் மற்றும் வர்த்தகத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிகிறது. (2)

## தீவிரவாதிகளின் கார்க்குண்டு தாக்குதலில் எட்டு பேர் பலி!



கொலம்பியாவில் தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் பொலிஸ் நிலையம் இடிந்து தரை மட்டமானது. அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்த இராணுவ அதிகாரிகள் உட்பட 8 பேர் பலியாகினர்.

இச் சம்பவம் இன்ஷா நகரின் மையச் சந்தைப் பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடத்தில் நேற்றுமுன் தினம் தீவிரவாதிகள் குண்டு நிரப்பியகாரை நிறுத்தி வெடிக்கச் செய்தனர்.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது,

கொலம்பியாவில் 'பார்க்' என்ற தீவிரவாத அமைப்பு கடந்த 50 ஆண்டுகளாக அரசுக்கு எதிரான வன்முறை செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

இதனால் இராணுவத்துக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்து வரும் உள்நாட்டு போரில் சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

எனவே, இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர தீவிரவாதிகளுடன் அரசு சமரச பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இந் நிலையில் நேற்று முன்தினம் கவுகா மாகாணத்தில் இன்ஷா நகரில் தீவிரவாதிகள் கார் குண்டு தாக்குதல் நடத்தினார்கள்.

அதில் அங்கிருந்த பொலிஸ் நிலையம் மற்றும் கடைகள், இடிந்து தரை மட்டமாகின. இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. அலறியடித்தபடி மக்கள் அங்குமிங்கும் ஓடினர்.

இத் தாக்குதலில் 8 பேர் பலியாகினர். அவர்களில் 5 இராணுவ அதிகாரிகள், ஒரு பொலிஸார் மற்றும் 2 பொதுமக்களும் அடங்குவர். இச் சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (அ-2)

## பாகிஸ்தான் அதிகாரிகள் தற்காலிக பணிநீக்கம்

காஷ்மீர் பிரச்சினையால் இந்தியா- பாகிஸ்தான் இடையே போர் மூளும் என்று தவறான தகவலை கொடுதத 3 பாகிஸ்தான் அதிகாரிகள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர சட்டப்பேரவையில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்ஷெரீப் சமீபத்தில் உரை நிகழ்த்தினார்.

அப்போது காஷ்மீருக்காக இந்தியா- பாகிஸ்தான் இடையே 4ஆவது போர்மூளும் என்று நவாஸ் பேசியதாக செய்தி வெளியானது.

இதற்கு எனது வாழ்நாளில் இந்தியாவை பாகிஸ்தான் போரில் வெல்ல வாய்ப்பில்லை என்று பிரதமர் மன்மோகன்சிங் கடுமையான வார்த்தைகளால் பதிலடி கொடுத்தா.

ஆனால் இந்தக் கருத்தை நவாஸ் கூறவில்லையென மறுத்துள்ளார். இந்நிலையில் நவாஸின் பேச்சை பத்திரிகைகளுக்கு தவறாகத் திரித்து செய்தி அனுப்பிய செய்தித்துறை அதிகாரிகள் 3 பேரை பாகிஸ்தான் அரசு நேற்று முன்தினம் தற்காலிக பணிநீக்கம் செய்தது.

மேலும் இதுபோன்ற செய்தி எப்படி வெளியானது என்பது பற்றி விசாரணை நடத்தும்படி செய்தித் துறை அமைச்சகத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (2)

## இலங்கை தமிழ் மக்களின் விவகாரத்தில் மத்திய, மாநில அரசுகள் இரண்டை வேடம்



மானூர் ஆற்றுப்பாலம் அருகே நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளுக்கு பயிற்சி முகாம் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

இந்நிகழ்வில் நாம் தமிழர் கட்சித் தலைவரும் இயக்கு நருமான சீமான், தமிழர் தேசிய பேரவைத் தலைவர் பழ.நெடுமா றன் உள்ளிட்ட பல்வேறு முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர்.

முகாமில் பங்கேற்று பழ. நெடுமாறன் உரையாற்றுகையில்,

இலங்கை விவகாரத்தில் தமிழக அரசு சட்டப்பேரவையில் இலங்கை தமழர்களுக்கு ஆதரவாக பொதுநல வாயமாநாடு உள்ளிட்ட பல்வேறு

(பழனி)

**இலங்கை விவகாரத்தில் மத்திய,மாநில அரசுகள் இரட்டைவேடம் போடுவதாக தமிழர் தேசிய பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.**

பிரச்சினைகளுக்கு தீர்மானம் நிறைவேற்றுகிறது. ஆனால், இலங்கைத் தமிழர்கள் நினைவாக அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்துக்கு எதிராகச் செயற்படுகிறது.


மத்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இருப்பதாகத் தெரிவித்து விட்டு, இலங்கை அரசுக்கு ஆயுதங்கள் வழங்குதல், இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு தமிழகத்தில் பயிற்சி வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

தமிழக மீனவர்கள் மீது மத்திய அரசு அக்கறை காட்டவில்லை. இதன் காரணமாகவே, இலங்கை கடற்படை தொடர்ந்து தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துகிறது.

இலங்கை தமிழர் விவகாரத்தில் மத்திய அரசும், மாநில அரசும் இரட்டைவேடம் போடுவது இதன் மூலம் தெரிகிறது. மத்திய அரசுக்குப் பாடம் புகட்டும் வகையில், நடைபெறவுள்ள தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்காமல் அவர்களை தமிழக மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்றார். (2)

## பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம்

### சுதர்சன நாச்சியப்பன் கூறுகின்றார்



மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க இரு நாட்டு மீனவர்களும் மீன்பிடி நாட்களை பேச்சுவார்த்தை மூலம் நிர்ணயம் செய்யலாமென மத்திய வர்த்தக மற்றும் தொழிற்றுறை இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்தெரிவித்துள்ளார்.

கரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

தமிழக மீனவர் பிரச்சினை சில குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே உள்ளது.

இது குறித்து விசாரிக்கப்பட வேண்டும். 4 ஆயிரம் விசைப்படகுகள் மீன்பிடிக்கும்போது சிலபடகுகள் மட்டுமே பிரச்சினையில் சிக்கிகொள்வது பற்றி விசாரிக்க வேண்டும்.

மீன்பிடி நாட்களை இரு நாட்டு மீனவர்களும் பேச்சுவார்த்தை மூலம் நிர்ணயிக்கலாம். டிசெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள 3ஆவது கட்ட பேச்சுவார்த்தையில் இது பற்றி ஆலோசனை நடத்தப்படும் என அவர் கூறினார். (2)

## தெலுங்கானா மசோதாவை சட்டப் பேரவையில் தோற்கடிப்போம்

### கிரண்குமார்ரெட்டி சவால்

(ஐதராபாத்)

தெலுங்கானா மாநிலம் அமைப்பதற கான மசோதாவை, ஆந்திர சட்டப் பேரவையில் உறுதியாக தோற்கடிப் போம் என்று, மாநில முதல்வர் கிரண் குமார்ரெட்டி அறிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலத்தை இரண்டாகப் பிரத்து, பத்து மாவட்டங்களை கொண்ட தெலுங்கானா மாநிலம் அமைப்பது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இரு மாநிலங்களுக்கும் ஐதராபாத் பொது தலைநகராக இருக்கும் என்றும், பத்து ஆண்டுகளுக்குள் ஆந்திர மாநிலத்துக்கு புதிய தலைநகரம் அமைப்பது என்றும் முடிவாகியுளளது.

இம்முடிவுக்கு, தெலுங்கானா மாவட்ட பகுதிகளில் ஓரளவு ஆதரவு இருந்தாலும், ராயலசீமா, கடலோர ஆந்திர மாவட்டங்களில் கடும் எதிர்ப்பு நிலவுகிறது. வை.எஸ் ஆர். காங்கிரஸ், தெலுங்கு தேசம் உள்ளிட்ட கட்சியினரும், தெலுங்கானா அமைக்கும் முடிவை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காங்கிரஸ் சார்பில் மத்திய அமைச்சராக பதவி வகிக்கும் நடிகர் சிரஞ்சீவியும், தன் பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

இதற்கிடையே, பிரச்சினையில் திடீர் திருப்பமாக, தெலுங்கானா மாநிலம் அமைக்கும் மத்திய அரசின் முடிவுக்கு, ஆந்திர மாநில முதல்வர் பகிரங்க எதிர்ப்பு தெரிவித்துள்ளார். மத்திய அரசின் திட்டத்தை தோற்கடிககப் போவதாகவும் அவர் கூறியுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுளளது.

தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்கான மசோதா, ஆந்திர சட்டப் பேரவையில் கொண்டு வரப்பட்டால், அதை நிச்சயமாக தோற்கடிப்போம். பாராளுமன்றில் அந்த மசோதா எப்படி நிறைவேறப்போகிறது என்பதையும் பார்த்து விடுவோம். செய்ததவறை உணர்ந்து, ஆந்திர மாநிலத்தை இரண்டாகப் பிரிக்கும் முடிவை காங்கிரஸ் கட்சி மீளப்பெற வேண்டும்.

காங்கிரஸ் கட்சி தான் உட்கார்ந்திருக்கும் மரக்கிளையை வெட்டிக் கொண்டிருக்கிறது. காலம் காலமாக தனக்கு ஆதரவு அளித்த மாநிலத்தை காஙகிரஸ் கட்சி அழிக்கப் பார்க்கிறது. காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு அளித்தது தான் ஆந்திர மக்கள் செய்த தவறா? மாநில பிரிவினையை எதிர்த்து நான்கு மாதங்களாக ஆந்திராவில் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

இதை கண்டு கொள்ளாமல், டில்லியில் இருக்கும் காங்கிரஸ் கட்சி தலைவர்கள், கண்களையும், காதுகளையும், வாயையும் மூடிக் கொண்டு விட்டார்கள்.பிரதமர் மன்மோகன், காங்கிரஸ் தலை வர் சோனியா ஆகியோர் தெலுங்கானா மாநிலம் அமைக்க தீவிர முயற்சி எடுத்து வரும் நிலையில், அக்கட்சியின் சார்பில் மாநில முதல்வராக இருப்பவரே இவ்வாறு பேசியிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுளளது. (2)



தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் மறைவிற்கு, இரங்கல் தெரிவிக்கும் பொருட்டு, மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில், இடது சாரி கட்சியினர் பேரணி நடத்தியதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் இன்றைய ஆட்சியாளர் போன்று பிரபாகரன் மக்களை பழிவாங்கவில்லை

## ஜனநாயகக் கட்சியின் தலைவர் பொன்சேகா

**இந்தநாட்டின் தலைவர் தேசத்தின் பெருமைமிக்க தந்தை என தன்னை கூறிக்கொண்டாலும் அவரது கிராமமான மெதமுலன கிராமத்தின் பிள்ளைகளும் இன்று பட்டினியால் வாடுகின்றனர் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**



காலி பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிசயமான அபிவிருத்தி என்ற புனைக் கதைகளை கூறி மக்களின் பணத்தை கொள்ளையிட்டு வருகின்றனர். நாட்டின் தலைவர் நாட்டை அழித்து வருகிறார். தரகு பணம் பெறுகின்றார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனை உலகில் உள்ள மிகவும் ஆபத்தான பயங்கரவாதி என்று கூறினாலும் அவர், நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்களை போல் மக்களை இப்படி பழி தீர்க்கவில்லை.

நாட்டின் பிள்ளைகளையும் அழித்து விடக் கூடிய தலைவரே நாட்டின் தலைவராக இருக்கின்றார்.

குடும்ப உறவினர்களை தன்னுடன் இணைத்து கொண்டு, பாலியல் குற்றவாளிகளை தண்டனையில் இருந்து காப்பாற்றி ஆட்சியாளர்கள் சகல குற்றங்களையும் செய்து வருகின்றனர். நாட்டை அழிக்க வேண்டாம் என்று இவர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.


நாட்டு மக்கள் மூன்று வேளையும் சாப்பிட்டு வாழ சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். நாட்டு மக்கள் தொகையில் 98 வீத மானவர்கள் திருப்தியாக உண்டு வாழ முடியாது வாழ்ந்து வருகின்றனர்.

நாட்டில் கொத்தமல்லி, சீனி முதல் சகல உணவுப் பொருட்களுக்கும் வரி அறவிடப் படுகிறது. இவற்றை பயன்படுத்தி ஆட்சியாளர்கள் சுகபோகமாக வாழ்ந்து வருகின்றனர்.

நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும். இதனை செய்யாமல் நாட்டை முன்னேற்றமடைய செய்ய முடியாது என்றார். (அ-2)

# கணேசபுரம் பகுதியில் வளரும் பார்த்தீனியம்

## கட்டுப்படுத்த கோரிக்கை



(சிவநகர்)

கிளிநொச்சி கணேசபுரம் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக செல்லும் வாய்க்கால் கரைகளில் பார்த்தீனியச் செடிகள் பரவலாக காணப்படுகின்ற போதும் அவற்றை அழிப்பதற்கு எவரும் முன்வரவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடமாகாண விவசாய அமைச்சினால் பார்த்தீனிய ஒழிப்பு மாதம் பிரகடனப்படுத்தப் பட்டு பார்த்தீனிய அழிப்பு நடவடிக்கைகள் வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த கணேசபுரத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பார்த்தீனியப்பரம்பல் அதிகமாக உள்ள போதிலும் அதற்கான அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளைவாய்க்கால் கரைகளில் இவை பரம்பி காணப்படுவதால் தொடர்ந்து இக்களை பல இடங்களில் பரம்பலடையக் கூடிய நிலைமை காணப்படுவதாகவும் இதனால் வயலில் செய்கை பண்ணப்படும் பயிர்கள் பாதிப்படையும் நிலை உருவாகும் நிலை தோன்றியுள்ளதாகவும் விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

எனவே வடமாகாண பார்த்தீனிய ஒழிப்பு மாதத்திலாவது இக்களைகளை அழிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-5-254)

# வெளிநாடுகளின் யோசனைகளை உடனடியாக தடுக்க முடியும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப் படும் யோசனையை உடனடியாக தடுத்து நிறுத்த முடியும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்வைக்கப்படவுள்ள யோசனைகளில சகல யோசனைகளையும் ஏற்றுக்கொண்டால், அதனை உடனடியாக தடுத்து விட முடியும். இதுதான் மாற்று நடவடிக்கை.


எனினும் வெளிநாடுகள் முன்வைக்கும் சகல யோசனைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது நாட்டுக்கும் பொருந்தாது.

இதனால் யோசனைகளில் இணங்க கூடிய விடயங்களும் இருக்கின்றன. இணங்க முடியாத விடயங்களும் இருக்கின்றன.

சில விடயங்கள் தொடர்பில் யோசனைகளை கொண்டு வந்தாலும் இணங்க முடியாத யோசனைகளும் அதில் இருக்கும்.

இதனால் நாட்டு மக்களின் சுதந்திரம், இறையாண்மை, அபிமானம் மற்றும் ஆத்ம கௌரவத்தை பணயம் வைத்து மேற்படி யோசனைகளுக்கு இணங்க முடியாது என்றார். (அ-2)

# இராணுவ வீரருக்கு ஆனையிறவில் தூபி



(ஆனையிறவு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான மோதலில் உயிரிழந்த இராணுவவீரர் ஒருவருக்கு ஆனையிறவு பகுதியில் உருவச்சிலையொன்று இராணுத்தினரால் நிர்மாணிக்கப்படுகின்றது.

1991ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளால் ஆனையிறவு படைத்தளத்தை தகர்ப்பதற்கான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது இந்த தளத்தை அழிக்கும் நோக்கில் வெடி மருந்து நிரப்பப்பட்ட டாங்கி ஒன்று புலிகளால் அனுப்பப்பட்டது.

குறித்த அந்த டாங்கியை காமினி குணவர்த்தன என்ற இராணுவச்சிப்பாய் தட்டுவன் கொட்டி பகுதியில் தடுத்து நிறுத்தி உயிரிழந்துள்ளார்.

இந்த இராணுவவீரரின் ஞாபகார்த்தமாக டாங்கி தடுத்து நிறுத்தப்பட்ட இடத்தில் அவரது உருவச்சிலை அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்பகுதியில் இராணுவத்தினரால் ஏற்கனவே அமைக்கப்பட்ட நினைவுத் தூபியொன்றும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தங்கள் தரப்பில் உயிரிழந்தவர்களை அவர்கள் எமது மண்ணில் தூபி கட்டி நினைவு கூர முடிகின்றபோது ஏன் எம்மக்களை நினைவு கூர அனுமதிக்கவில்லை என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கேள்வியெழுப்பியுள்ளது. (அ-4)







மனித உரிமைகள் தினம் எதிர்வரும் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் மனித உரிமைகளை வலியுறுத்தி நேற்று முன்தினம் ஊர்வலமொன்று இடம்பெற்றது. இளைஞர் கழகங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இவ் ஊர்வலம் வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்னால் ஆரம்பித்து இளைஞர் சேவைகள் மன்றத்தை சென்றடைந்தது. (படங்கள் :- குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்

## விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் I

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
2. இல 1 - 40 வரையான வினாக்களுக்கும் 1,2,3.4 என தரப்பட்டுள்ள விடைகளில் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

01. இலங்கையின் ஈரவலயப் பிரதேசங்களுக்கு அதிகளவு மழைவீழ்ச்சி கிடைக்கும் மாதங்கள்,
1.ஜனவரி, பெப்ரவரி 2.மார்ச், ஏப்பிரல் 3.மே, ஜூன் 4.நவம்பர், டிசெம்பர்

02. தன்னிறைவு (சுயதேவை) விவசாயத்தின் பிரதான இயல்பாக அமைவது,
1.இலாபநோக்கில் பயிர்செய்தல். 2.தானியப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல்.
3.அன்றாட தேவைக்கெனப் பயிர்செய்தல் 4.பேரளவிலான பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல்.

03. சிறுபோகம், பெரும்போகம் ஆகியவற்றில் நெற்செய்கை அறுவடை மேற்கொள்ளப்படுவது முறையே,
1.ஏப்ரல், செப்டெம்பர் மாதங்களிலாகும். 2.ஏப்ரல், டிசெம்பர் மாதங்களிலாகும்.
3.பெப்ரவரி, ஓகஸ்ட் மாதங்களிலாகும். 4.ஓகஸ்ட், பெப்ரவரி மாதங்களிலாகும்.


04. மண் சூழ்நிலைச் சிக்கல் உருவாவது,
1.களி, உக்கல் துணிக்கைகளுக்கிடையிலாகும். 2.களி, மணல் துணிக்கைகளுக்கிடையிலாகும்.
3.களி, அடையல் துணிக்கைகளுக்கிடையிலாகும். 4.களி, மண்வாழ் அங்கிகள் ஆகியவற்றுக்கிடையிலாகும்.

05. பிரதானமாக ஈரவலயப் பிரதேசத்தில் காணப்படும் அமிலத்தன்மை கொண்ட மண் எது?
1.செங்கபில மண் 2.செம்மஞ்சள் பொட்சோலிக் மண் 3.அலூவியல் மண் 4.கபில லோம் மண்

06. வேளை உணவுடன் காப்பு உணவுகளைச் சேர்ப்பதன் மூலம்
1.நோய்கள் அணுகாது தவிர்க்கலாம். 2.நோய் ஏற்பட்ட இழையங்களைப் புதுப்பிக்கலாம்.
3.உடலுக்குத் தேவையான சக்தி கிடைக்கும். 4.உடல் வளர்ச்சி ஏற்படும்

07. நாற்றுமேடைப் பராமரிப்பு பற்றிய கூற்றுக்கள் சில வருமாறு
A. மழைவீழ்ச்சி கிடைக்கும் இடங்களுக்கு தாழ்பாத்தி நாற்றுமேடையே சிறந்ததாகும்
B. தாழ்பாத்தி நாற்றுமேடையின் உச்ச அகலம் 90cm ஆகும்.
C. டபொக் நாற்றுமேடை நெற்செய்கையில் பயன்படுத்தப்படும் விசேட நாற்று மேடையாகும்.
இக்கூற்றுகளுள் சரியானவை
1.A,B மட்டும் 2.A,C மட்டும் 3.B,C மட்டும் 4.A,B,C ஆகிய மூன்றும்

08. சோளம், உழுந்து, தக்காளி ஆகிய பயிர்கள் அடங்கும் தாவரக் குடும்பங்களை முறையே கொண்ட தொகுதி யாது?
1.சொலனேசியே, பபேசியே, பொயேசியே. 2.பொயேசியோ, பபேசியே, சொலனேசியோ.
3.பொயேசியே, சொலனேசியே, பபேசியே. 4.பபேசியே, பொயேசியே, சொலனேசியே.




09. பின்வரும் ஒழுங்கமைப்பு பயன்படுத்தப்படுவது
1.தாவரங்களில் ஆவியுயிர்ப்பு வீதத்தைப் பரீட்சித்தலுக்காகும்
2.ஒட்டு வெற்றியளிக்கும் வரை பாதுகாத்தலுக்காகும்
3.தாவரத் தண்டுத் துண்டங்களை வேர்விடச் செய்தலுக்காகும்
4.தாவரங்களில் சுவாசம் நடைபெறும் எனக் காட்டுதலுக்காகும்

10. விதைத்தலை இலகுவாக்கவென மணலுடன் கலக்கப்படும் வித்து வகை யாது?
1.புகையிலை வித்து 2.தக்காளி வித்து
3.தேக்கு வித்து 4.சிறகவரைவித்து

11. தாவரங்களில் வெளிக்காட்டப்படும் நைதரசன் குறைபாட்டு அறிகுறி
1.இளம் இலைகள் மஞ்சள் நிறமடைதல். 2.இலை விளிம்புகள் கருகுதல்.
3.இலை நரம்புகளுக்கிடையில் மஞ்சள் நிறமாதல். 4.தாவரங்கள் குறளாதல்.

12. அன்னாசிப் பயிர்களுக்குப் பசளையிட மிகப் பொருத்தமான முறை எது?
1.வீசியிடல் 2.வரிசையிலிடல்
3.தாவரத்தைச் சுற்றி வளைய வடிவில் இடல் 4.இடையிடையே குழிகளில் இடல்

13. மண் பக்கப் பார்வையில் மேல்மண் எனப்படுவது
1.D வலயம் மட்டுமாகும். 2.A வலயம் மட்டுமாகும்.
3.D, A வலயங்கள் மட்டுமாகும். 4.A, B வலயங்கள் மட்டுமாகும்.

14. வீதிப் பயிர்ச்செய்கையில் வீதியின் இரு ஓரங்களிலும் நாட்டப் பொருத்தமான பல்லாண்டு அவரை பயிர் எது?
1.சணல் 2.ஆமணக்கு 3.கிளிசிரீடியா 4.வாழை

15. சேனைப் பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் பயிர்ச்செய்கைக் கோலம் எது?
1.கலப்புப் பயிர்ச்செய்கை 2.இடைப் பயிர்ச்செய்கை 3.அஞ்சற் பயிர்ச்செய்கை 4.தனிப் பயிர்ச்செய்கை

16. பால்மாவைப் பொதி செய்ய மிகவும் உகந்த பொதியிடு பதார்த்தம்
1.பொலி புறொப்பலீன் 2.அடரிடப்பட்ட அலுமீனியப் படலம்
3.பொலி எதிலீன் 4.செலோபேன்

17. முட்கள் கொண்ட களைகள் வளர்வதனால் பின்கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் அறுவடை ஆகியன சிரமமாகும். முட்கள் கொண்ட களைகளை மட்டும் கொண்ட கூட்டம் எது?
1.இக்கிரி, தொட்டால்வாடி, நெருஞ்சி 2.தொட்டால்வாடி, பாத்தினீயம், விடேலியா
3.விடேலியா, தொட்டால்வாடி, நெருஞ்சி 4.குப்பைமேனி, கோரை, தொட்டால்வாடி

18. நத்தைகள், சிற்றுண்ணிகள், முள்ளம்பன்றிகள் ஆகியவற்றால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களை முறையே கொண்டுள்ள தொகுதி யாது?
1.இலைகளை உண்ணுதல், நிலக்கீழ்ப் பகுதிகளை உண்ணுதல், சாற்றை உறிஞ்சிக்குடித்தல்
2.சாற்றை உறிஞ்சிக்குடித்தல், நிலக்கீழ்ப் பகுதிகளை உண்ணுதல், இலைகளை உண்ணுதல்
3.இலைகளை உண்ணுதல், சாற்றை உறிஞ்சிக்குடித்தல், நிலக்கீழ்ப் பகுதிகளை உண்ணுதல்
4.நிலக்கீழ்ப் பகுதிகளை உண்ணுதல், சாற்றை உறிஞ்சிக்குடித்தல், இலைகளை உண்ணுதல்

19. மாணவரொருவர் தனது களப்புத்தகத்தில் களைகள் பற்றி பின்வருமாறு விபரங்களை எழுதியிருந்தார்.
A. குப்பைமேனி - மேட்டு நிலத்தில் வளர்கின்ற அகன்ற இலைக் களையாகும்
B. கோரை - மேட்டு நிலத்தில் வளர்கின்ற கோரை வகைக் களையாகும்
C. நெற்சப்பி - சேற்று நிலத்தில் வளரும் புல் வகைக் களையாகும்
மேலே தரப்பட்ட கூற்றுகளுள் சரியானவை
1.A, B ஆகும் 2.A, C ஆகும் 3.B, C ஆகும் 4.A, B, C ஆகிய மூன்றும்

20. விவசாய ஆய்வு கூடத்தில் காணப்பட்ட பசளை வகைகள் இரண்டு பின்வரும் இயல்புகளைக் கொண்டிருந்தன.
மாதிரி A - இளம் சாம்பல் நிறமானது. கோளவடிவான குறுணல்
மாதிரி B - சிவப்பு மற்றும் கபில நிறம் கொண்டு விரைவில் நீரில் கரையக்கூடிய பளிங்குருவாகும்
A, B ஆகிய பசளை மாதிரிகள் முறையே
1.மியூரியேற்றுப் பொட்டாசு, யூரியா 2.யூரியா, சுப்பர் பொசுப்பேற்று
3.செறிந்த சுப்பர் பொசுப்பேற்று, யூரியா 4.செறிந்த சுப்பர் பொசுப்பேற்று, மியூரியேற்றுப் பொட்டாசு

21. மாணவரால் தயாரிக்கப்பட்ட குறிப்பிட்ட காட்சிப் பொருளொன்று பின்வரும் இயல்புகளை கொண்டிருந்தது.
- அது பயிர்ச்செய்கை மாதிரியுருவாகும்.
- ஊடகமாக போசணைக் கரைசல் இடப்பட்டிருந்தது.
- இலகுவில் எடுத்துச் செல்ல முடிகிறது.
- இலகுவான தொழில்நுட்பத்துடன் குறைந்த செலவுடனும் உருவாக்கப்பட்டிருந்தது.

இந்தக் காட்சிப் பொருளாக அமையக் கூடியது
1.கிடைப் பயிர்ச்செய்கை உறையாகும். 2.வேர் அமிழ்ந்த நிலையிலுள்ள பயிர்ச்செய்கைச் சாடியாகும்.
3.ஆழ் போசணைச் சுற்றோட்ட மாதிரியுருவாகும். 4.பசுமையில்லத்திலான பயிர்ச்செய்கையாகும்.

22. ஓரளவு சாய்வு கொண்ட நீர்த்தட்டுப்பாடான காற்று வீசும், ஒப்பமற்ற தரையைக் கொண்ட நிலத்திற்கு மிகப் பொருத்தமான நீர்ப்பாசன முறை
1.துளிமுறை நீர்ப்பாசனம் 2.தூவல் நீர்ப்பாசனம் 3.வரம்புசால் நீர்ப்பாசனம் 4.நிரல் நீர்ப்பாசனம்


23. விவசாயியொருவர், தனது காணியில் வட்டத்தட்டுக் கலப்பையைப் பயன்படுத்தி உழுத பின்னர் தட்டுப் பரம்படி (ஹரோ) கருவியைப் பயன்படுத்தி அதனை மட்டுப்படுத்தி வரிசைகளுக்கிடையில் களைகட்டல் மேற்கொண்டார். இவரால் மேற்கொள்ளப்பட்ட பண்படுத்தல் செயன்முறைகள் முறையே
1.இடைப்பண்படுத்தல், முதற்பண்படுத்தல், துணைப்பண்படுத்தல்
2.முதற்பண்படுத்தல், துணைப்பண்படுத்தல், இடைப்பண்படுத்தல்
3.இடைப்பண்படுத்தல், துணைப்பண்படுத்தல், முதற்பண்படுத்தல்
4.ஆரம்பப்பண்படுத்தல், முதற்பண்படுத்தல், இடைப்பண்படுத்தல்

24. பாடசாலைப் பண்ணையில் நிலப்பண்படுத்தல் தொடக்கம் அறுவடை வரை மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகள் அவற்றின் கால வரையறையுடன் குறிக்கப்பட்டிருப்பது
1.களப்புத்தகத்திலாகும் 2.பயிர்ச்செய்கை நாட்காட்டியிலாகும்
3.செயற்றிட்ட அறிக்கையிலாகும் 4.வரவு செலவுத் திட்டத்திலாகும்.

25. அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களைக் குறைப்பதற்குப் பயன்படுத்தும் அறுவடைக்கு முந்திய செயற்பாடுகள் ஆவன
1.பயிர்ச்செய்கைக்கு சீராக நீர்ப்பாசனம் செய்தல்.
2.பொருத்தமான முதிர்ச்சி நிலையில் அறுவடை செய்தல்.
3.அறுவடை செய்யப்பட்ட விளைச்சல்களைத் தரப்படுத்தல்
4.அறுவடைக்குப் பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்தல்

26. பசும்புல்லை வெட்டி அதன் பசியநிறம் அற்றுப் போகாதவாறு உலர்த்திப் பதப்படுத்தப்படும் ஐதுத் தீவனம்
1.மேய்ச்சல் புல் எனப்படும். 2.வெட்டுப்புல் எனப்படும். 3.உலர்புல் எனப்படும். 4.குழிகாப்புத்தீன் எனப்படும்.

27. பின்வரும் வரிப்படத்தில் காட்டப்பட்டிருப்பது



1.அடைகாக்கும் பொறியில் குஞ்சுகளை வளர்த்தல்.
2.கனகூழ முறையில் கோழிகளை வளர்த்தல்.
3.கலவடுக்கு (பற்றரி) துறையில் கோழிகளை வளர்த்தல்.
4.குஞ்சுவதியில் குஞ்சுகளை வளர்த்தல்

28. புறொயிலர்க் கோழிவளர்ப்பின் போது உச்சப் பயன் பெறும் பொருட்டு அவை வளர்க்கப்படும் நாட்களின் எண்ணிக்கை எவ்வளவாகும்?
1.21 - 30 நாட்கள் 2.75 - 80 நாட்கள் 3.35 - 42 நாட்கள் 4.82 - 90 நாட்கள்

29. பன்றி வளர்ப்பின் போது அதிகளவு குருதிச் சோகை நிலை ஏற்படும் வளர்ச்சி நிலை
1.கொழுக்கவைக்கும் பருவம் 2.சினைப்பட்ட பருவம்
3.பால்குடி மறக்கும் பருவம் 4.பன்றிக் குட்டிப் பருவம்

30. ஆடுகளிற்கான மனையை அமைப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய பிரதான விடயம்
1.கள்வர் தொல்லையிலிருந்து பாதுகாத்தல் 2.மிதமாக காற்றுவீசும் இடமாகவிருத்தல்
3.பண்ணையாளரின் வீட்டுக்கு சமீபமாகவிருத்தல் 4.மாட்டுத் தொழுவங்களிற்கு சேய்மையாகவிருத்தல்

31. தரமான கூட்டெருத் தயாரிப்புக்குத் தேவையான சிறப்பான நிலைமைகளாவன
1.ஈரலிப்பு, வெப்பநிலை, காற்றுள்ளநிலை, நடுநிலையான pH பெறுமானம்
2.ஈரலிப்பு, அமிலத்தன்மை, வெப்பநிலை, காற்றுள்ளநிலை pH
3.வெப்பநிலை, காரத்தன்மை, காற்றுள்ளநிலை, ஈரலிப்பு
4.நடுநிலையான pH வெப்பநிலை, ஈரலிப்பு, காற்றின்றிய நிலை

32. நெற்செய்கையைப் பாதிக்கும் எரிவந்த நோயின் நோய்க்காரணி,
1.பற்றீரியாவாகும் 2.பங்கசுவாகும் 3.வைரசுவாகும் 4.நெமற்றோட்டாகும்

33. சான்றுப்படுத்தப்பட்ட விதைநெல்லில் காணப்பட வேண்டிய தூய்மையான வித்துக்களின் சதவீதம் எவ்வளவாகும்?
1.75% 2.85% 3.98% 4.100%

34. அரும்பொட்டு முறையில் ஒட்டுதலை மேற்கொண்டு மூன்று வாரங்களின் பின் ஒட்டு மேற்கொண்ட இடத்திற்கு 1cm மேலாக ஒட்டுக்கட்டை வெட்டி அகற்றப்படுவது
1.ஒட்டுப்பொருத்து உலர்வதைத் தடுப்பதற்காகும் 2.ஒட்டு அரும்பின் வளர்ச்சியைத் தூண்டுவதற்காகும்
3.ஒட்டுப்பொருத்து நன்கு இறுகுவதற்காகும் 4.ஒட்டு அரும்பில் நல்லியல்புகள் ஏற்படுவதற்காகும்

35. பூக்கள் தோன்றுவதற்கு குறும் பகற்காலம் தேவைப்படும் பயிர்,
1.தென்னையாகும் 2.மிளகாயாகும் 3.பாகலாகும் 4.பொடிவீ A - 8 ஆகும்

36. கத்தரிச் செய்கைக்கு நைதரசன் தேவையை ஈடுசெய்வதற்கு ஹெக்டயருக்கு 200 kg யூரியா சிபாரிசு செய்யப்படின் அத்தேவையை ஈடுசெய்ய வேண்டிய அமோனியம் சல்பேற்றின் அளவு எத்தனை கிலோகிராம்
1.100 2.200 3.300 4.400

37. வட்டத்தட்டுக் கலப்பை எனப்படுவது
1.விலங்கு வலு மூலம் செயற்படுத்தப்படும் முதற் பண்படுத்தல் உபகரணமாகும்.
2.விலங்கு வலு மூலம் செயற்படுத்தப்படும் துணை பண்படுத்தல் உபகரணமாகும்.
3.இயந்திரங்களின் மூலம் செயற்படுத்தப்படும் துணை பண்படுத்தல் உபகரணமாகும்.
4.இயந்திரங்களின் மூலம் செயற்படுத்தப்படும் முதற் பண்படுத்தல் உபகரணமாகும்.

38. விவசாயி ஒருவர் தமது பயிர்ச் செய்கையில் ஏற்பட்ட பீடைகளைக் கட்டுப்படுத்த பூச்சிநாசினி பிரயோகிக்கும் போது பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டார்.
A. பீடைநாசினிப் போத்தலின் சுட்டியை நன்கு வாசித்தல்
B. தனிமையில் பீடை நாசினியை விசுறுதல்
C. விசுறும்போது இடையிடையே வெற்றிலை மெல்லுதல்.
அவரால் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பற்ற செயற்பாடுகளாவன,
1.A மட்டும் 2.B மட்டும் 3.A, B ஆகியன மட்டும் 4.B,C ஆகியன மட்டும்

39. நுண்ணங்கித் தொற்றுதல் காரணமாக பழுதடைந்த முட்டையிலிருந்து வெளியேறும் வாயு,
1.நைதரசனீரொட்சைட்டாகும் 2.ஐதரசன்சல்பைட்டாகும் 3.மீதேனாகும் 4.காபனீரொட்சைட்டாகும்

40. உலக சுற்றாடல் தினம், தேசிய மரநடுகைத் தினம் ஆகியன முறையே,
1.யூன் 17, மே 22 2.யூன் 5, செப்ரெம்பர் 17 3.மே 22, மார்ச் 22 4.யூன்5, மே 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.
- *திருவள்ளுவர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பொய் உரைத்தே பிரிவினை வளர்த்தீர் போதும்...

உண்மைக்கு மெய்ப்பொருள் என ஒரு பெயர் உண்டு. மெய் என்பது எந்தக் காலத்திலும் அழிவில்லாதது. பொய்களால் மறைக்கப்பட்டாலும் பொய் அழிந்து போக உண்மை வெளிப்படும். எனினும் இந்த உண்மையை பலர் உணரத் தவறி விடுகின்றனர்.

இந்தத் தவறை சாமானியர்கள் செய்தால் பரவாயில்லை. துரதிர்ஷ்டவசமாக ஆட்சியில் இருப்பவர் தொடக்கம் ஆன்மிகம் சார்ந்தவர்கள்வரை விட்டுவிடுவதுதான் வேதனைக்குரியது.

ஒரு பொய்யை ஆயிரம் தடவை உச்சரித்தால் அது மெய்யாகிவிடும் என்பது அதிகார பலத்தில் இருப்பவர்கள் நினைத்துக் கொள்ளும் பிரமையே அன்றி அதில் எந்த உண்மையும் கிடையாது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த நாட்டில் நடந்த அத்தனை அநியாயங்களுக்கும் - அட்டூழியங்களுக்கும் - அழிவுகளுக்கும் உண்மையை மறைத்து பொய் உரைத்தமையே மூலகாரணமாகும்.

சிங்கள, தமிழ் இன விவகாரம் என்பது இங்கு இருந்தமை உண்மையாயினும் சிங்கள, தமிழ் உறவுகளும் ஓரளவு திருப்தியாக இருந்ததென்பதை மறந்து விட முடியாது.

ஆனால் இலங்கை அரசுகள் தமிழ் மக்கள் தொடர்பில் - அவர்களுக்கு நடந்த அநீதிகள் தொடர்பில் எப்போது பொய் உரைக்கத் தரப்பட்டனவோ அன்றிலிருந்துதான் தமிழ் மக்கள் இந்த நாட்டின் ஆட்சித் தலைமைக்கு சிங்களவர் பொருத்தமற்றவர் என்ற முடிவை இறுக்கமாக எடுத்துக் கொண்டனர். தங்களின் முடிபு நிறைவேறவேண்டுமாயின் அதற்கான ஒரே வழி பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று திடமாக நம்பினர்.

இனப்பிரச்சினைகளின் மத்தியில் ஆட்சித் தலைமைகள் உரைத்த பொய்கள் இலங்கை எமது நாடு என்று தமிழ் மக்கள் நினைக்க முடியாத அளவிற்கு அருவருப்பைக் கொடுத்தது.

நவாலி தேவாலயத்தில் நடந்த விமானக் குண்டுத் தாக்குதல், வடமராட்சியில் யுத்த விமானங்கள் நடத்திய கொடூரங்கள், வன்னிப் போரில் போர் விமானங்கள் நடத்திய பயங்கரங்கள் என அனைத்தும் உண்மை என அரசு தலைமைகள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்நிலையில்தான் தமிழ் - சிங்கள இன வக்கிரத்தை உச்சத்திற்கு கொண்டு சென்றன.

ஆக, என்று பொய் உரை நின்று உண்மை உரைக்கப்படுகிறதோ அன்றுதான் இந்நாட்டிற்கு விமோசனம்.

# காணிகளை வழங்குவதாகக் கூறி மக்களிடம் பணம் பெறும் கும்பல்

## எச்சரிக்கிறது கூட்டமைப்பு

யாழ்.குடாநாட்டில் வீட்டுத்திட்ட சங்கம் என்ற பெயரில் மக்களுக்கு காணிகளை வழங்குவதாக மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிலர் சாவகச்சேரி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான மோசடியாளர்களிடம் மிக அவதானமாக இருக்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மக்களை கேட்டுள்ளது.

சாவகச்சேரி-கைதடி பகுதியில் காணிகளை வழங்குவதாக தனியாருக்குச் சொந்தமான காணிகளுக்கான போலி ஆவணங்களை பெற்றிருக்கும் ஒரு கும்பல் மக்களிடம் 16 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் ரூபா வரையிலான பணத்தை பெற்றிருக்கின்றனர். அதனை உண்மையென நம்பிய யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்கள் சிலர், மோசடியாளர்கள் கேட்ட பணத்தை செலுத்தியுள்ளனர்.

இந்நிலையில் மேற்படி குழுவினர் கைதடியில் நேற்று முன்தினம் காணிகளை வழங்குவதாக கூறி மக்களிடம் பதிவுகளை மேற்கொண்டிருந்த நிலையில் தகவலறிந்த தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறித்த பகுதிக்கு சென்றுள்ளார்.

சம்பவம் குறித்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

வீட்டுத்திட்ட சங்கம் என்ற பெயரில் காணி இல்லாத மக்களுக்கு காணிகளை வழங்கப் போவதாக கூறி ஒவ்வொருவரிடமிருந்தும் 16 ஆயிரம் தொடக்கம் 20ஆயிரம் ரூபா பணத்தை பெற்றிருக்கின்றார்கள். நாம் அங்கே சென்றபோது அவர்கள் 92 பேரின் பெயர்களை பதிவு செய்திருந்தார்கள்.

பதிவு நடவடிக்கையில் ஒருவர் மட்டும் ஈடுபட்டிருந்தார். நாம் அவரிடம் கேட்டோம்; காணிகளை மக்களுக்கு வழங்குவதற்கு உங்களுக்கு யார் அனுமதி கொடுத்தது? மக்களுக்கு வழங்கும் காணிகள் யாருடையவை என, ஆனால் இந்தக் கேள்விகளுக்கு அவரிடம் சரியான பதில இல்லை. ஆனால் அங்கு பதிவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர், இருவருக்கு தொலைபேசி அழைப்பை எடுத்தார்.

ஒருவர் கொழும்பில் இருப்பதாகவும் மற்றவர் யாழ்ப்பாணத்தில் இருப்பதாகவும் கூறினார். ஆனால் அவர்களால் தங்களை சரியாக அடையாளப்படுத்த முடியாத நிலையில் அங்கே பொலிஸார் வரவழைக்கப்பட்டு அவர்கள் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டார்கள்.

இதற்கு முன்னதாக நாம் இந்த விடயம் தொடர்பில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தமக்கு அவ்வாறு எதுவும் தெரியாது. தமக்கும் அவர்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என கூறினார். பின்னர் தேசிய வீடமைப்பு அதிகாரசபையுடன் தொடர்பு கொண்டபோது அவர்களும் தமக்கு இதில் தொடர்பில்லை என கூறிவிட்டார்கள்.

எனவே மிக மோசடியான முறையில் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக ஒரு கும்பல் குடாநாட்டிற்குள் முகாமிட்டிருக்கின்றது. அங்கே காணி பெற வந்திருந்த பெண், தன்னிடம் மிச்சமாக இருந்த சில நகைகளை அடகு வைத்தும், விற்றுமே காணிக்கான பணத்தினை அவர்களிடம் வழங்கியதாக அவர் கூறினார்.

இவ்வாறு பல மக்கள் தங்கள் இயலாமைக்கும் மத்தியில் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு ஏதிலிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை ஏமாற்றும் இத்தகைய மோசடி பேர்வழிகளை நாம் அடையாளம் காணவேண்டும். மக்கள் இவர்கள் விடயத்தில் மிக விழிப்பாக இருக்கவேண்டும்.

மேலும் தமிழ்தேசிய கூட்டமைப்பு இத்தகைய மோசடி பேர்வழிகளை கட்டுப்படுத்துவது மற்றும் சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசும் எனவும் அவர் தெரிவித்தார். (எ-4)

# கட்சி அலுவலகம் மூடப்பட்டமை திடீர் நடவடிக்கை அல்ல!

## ஈ.பி.டி.பி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிலிருந்து தமது அலுவலகம் நீங்கப்பட்டதையும் யாழ். குடாநாடு தழுவிய ரீதியில் உள்ள தமது அலுவலகங்களில் சிலவற்றை எதிர்காலத்தில் அகற்றுவதற்கு திட்டமிட்டிருப்பதையும் திடீர் நடவடிக்கையாகவோ, அவசரப்பட்ட நடவடிக்கையாகவோ தாம் முன்னெடுக்கவில்லை என ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் சி. தவராசா தெரிவித்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட ஊடக அறிக்கை வருமாறு,

நீண்டகாலமாகவே எமது அலுவலகங்களை ஒழுங்கமைப்பது மற்றும் கட்சியின் கட்டமைப்பை மீள் ஒழுங்கு செய்வது என்ற எமது ஆய்வுகளும் ஆதரவாளர்களின் அபிப்பிராயங்களும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

இடையில் தேர்தல்கள் வந்ததாலும், குறிப்பிட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டிருந்த அரசியல் செயற்பாடுகளை பூர்த்தி செய்யவேண்டிய தேவை இருந்ததாலும் எமது சீரமைப்புச் செயற்பாடுகள் காலதாமதம் அடைந்திருந்தன.

தற்போது மாறியிருக்கும் அரசியற் சூழலையும் நீண்ட காலமாக திட்டமிடப்பட்ட கட்சியின் செயற்பாடுகளின் மறுசீரமைப்பதற்கான தேவையையும் கவனத்தில் கொண்டு அலுவலகங்களை ஒழுங்கு செய்வதையும் உள்ளக நிர்வாகக் கட்டமைப்பில் தேவையான மாற்றங்களைச் செய்வதையும் கட்சி செயல்படுத்தும். அதன் ஒரு நடவடிக்கையாகவே நெடுந்தீவு அலுவலகம் மூடப்பட்டதும், தீவகத்தில் உள்ள சில அலுவலகங்களையும் அகற்றிக் கொள்வதற்கான திட்டமுமாகும்.

எமது கட்சியின் திட்டங்களும் நடவடிக்கைகளும் எமது மக்களுக்கான நலன்களில் இருந்தும் எமது அரசியல் கொள்கைகளுக்கு வலுச் சேர்க்கும் விதமாகவே இருக்கும். எமது நிலைப்பாட்டை ஆதரவாளர்கள் புரிந்து கொண்டுள்ளனர் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி நம்புகின்றது.

கட்சியின் திட்டங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் பூரண ஒத்துழைப்பை வழங்கிச் செயற்படுமாறும் தோழமையோடு கேட்டுக்கொள்கின்றோம் என அதில் கூறப்பட்டுள்ளது. (எ-1)

## ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி




**இந்துநெறிக்காப்போம்**
**இந்துவாக வாழ்வோம்**

இந்துக்களே உங்களுடைய தார்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை ஆயிரக்கணக்கில் எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப் பித்து எமது சமயத்தினையும் சமய விழுமியங்களையும் எம் மக்களையும் காத்திட அர்ப்ப ணிப்புடன் ஐந்தெழுத்து மந்திரம் முதலீடு செய்யுமாறு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் அறிவித்துள்ளது.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## தற்காலத்திற்கேற்ற உடற்பயிற்சி




நினைவுக்கு எட்டாத காலம் முதற்கொண்டே பருவ நிலை வாழ்க்கை முறை, இன்னும் இதர பழக்கவழக்கம் ஆகியவற்றைக் கொண்டு பல்வேறு நாடுகளில் பலவகையான உடற்பயிற்சிகள் உருவாகியுள்ளன. முன்பு வாழ்க்கை முறை மெதுவாக ஊரும் (நகரும்) நிலையில் இருந்ததால் அதற்குத் தக்கவாறு உடற்பயிற்சிகள் உருவாக்கப்பட்டன. அந்தக் காலம் இப்போது மாறிவிட்டது. விரைவு, அழுத்தம் பரபரப்பு உள்ள சூழ்நிலையில் நாம் வாழ்கிறோம். நமது தேவைகளும் வேறு விதமாகி விட்டன. ஆகவே, முந்தைய உடற்பயிற்சிகள் இந்தக் கால சூழ்நிலைகளுக்கு ஏற்றவையாகா.

இது சம்பந்தமாக பல ஆண்டுகள் நான் சிந்தித்து வந்தேன். பல விதமான ஆசனங்களையும் உடற்பயிற்சிகளையும் ஆராய்ந்து பார்த்தேன். இப் பயிற்சிகளை நானே செய்து பார்த்து அதன் விளைவுகளை எனது உடல் மூலம் தெரிந்து கொண்டேன். இந்திய மருத்துவத்துறையில் எனக்கு இருந்த அறிவு இந்த ஆய்வுக்கு உதவியது. இறுதியாக ஆடவருக்கும், பெண்டிருக்கும், குழந்தைகளுக்கும் பல்வேறு வாழ்க்கையில் இருப்பவர்களுக்கும் பல்வேறு கால நிலைக்கும் ஏற்றவாறு சில பயிற்சிகளை ஒழுங்குபடுத்தியுள்ளேன். இந்த பயிற்சிகளை ஒழுங்காகச் செய்வதால் உடலுக்குள் பிராணவாயு பரவி என்டோக்கிரின் சுரப்பிகள் இயக்கத்தை ஒழுங்குபடுத்தி இரத்தத்தைச் சுத்தப்படுத்தி அதன் ஓட்டத்தை ஒழுங்குபடுத்துகிறது.

நோய் வராதபடி தடுப்பு நிலையை அதிகப்படுத்துகிறது. ஆரோக்கியமான உடம்பும் நீடித்த ஆயுளும் உண்டாகுகின்றன. அதன் மூலம் ஆன்மீகத் தோட்டத்தில் வெற்றி பெற்று நாம் இந்த மண்ணுலகுக்கு எதன் பொருட்டு வந்தோமோ அதைத் தெளிவாகத் தெரிந்து கொள்கிறோம். இந்தப் பயிற்சிகளை ஒழுங்காகச் செய்வார்கள் நிச்சயம் நன்மை அடைவார்கள். எளிய முறைக் குண்டலினி யோகப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்தப் பயிற்சிகள் செய்து பழகுவதன் மூலம் பெரும் அளவில் நன்மை அடையலாம். இந்தப் பயிற்சிகள் அதற்கு அதிக அளவு உதவியாய் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி; சென்ஸ்ரார், வானவில் வெற்றி



அராலிமாவத்தை விளையாட்டுக்கழகம் உதைபந்தாட்ட லீக்கின் விளையாட்டுக்கழகம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் துணவி சென்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் வானவில் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றுள்ளன.

இப்போட்டிகள் அண்மையில் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன. அராலி வானவில் விளையாட்டுக்கழகத்துக்கும் கலைவாணி விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்ற நிலையில் சமநிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து வானவில் விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

துணவி சென்ஸ்ரார் அணிக்கும் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் சென்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

# தலைவர் வெற்றிக் கிண்ணம்; குருநகர் பாடுமீன் வெற்றி




யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் இரு அணிகளும் ஆட்டநேர முடிவில் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக இரு அணிகளுக்கும் 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணி 4:3 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

## பொதுக்கூட்டம்



யாழ்ப்பாண காற்பந்தாட்ட லீக்கின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி அரியாலையில் அமைந்துள்ள யாழ். காற்பந்து பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

உதைபந்தாட்ட லீக் தலைவர் ஆர்.தர்மராசா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு இலங்கை காற்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ரஞ்சித் றொட்சிக்கோ மற்றும் செயலாளர் உப்பலி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்திற்கு யாழ்.லீக்கில் அங்கம் வகிக்கும் அனைத்து காற்பந்தாட்ட அணிகளின் தலைவர்கள், செயலாளர்களைக் கலந்து கொள்ளுமாறு அமைப்பாளர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



சர்வதேச மோட்டார் பந்தய கூட்டமைப்பின் வருடாந்த விருது வழங்கும் விழா, பிரான்ஸ் தலைநகர் பாரிசில் அண்மையில் இரவு நடைபெற்றது. இதில் 2013 ஆம் ஆண்டு பார்முலா 1 கார் பந்தய சீசனில் அபாரமாக செயற்பட்டு உலக சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்ட ரெட் புல் அணி வீரர் செபாஸ்டியன் வெட்டல் கௌரவிக்கப்பட்டார்.

# தெல்லிப்பழை கோட்ட காற்பந்து; யூனியன் கல்லூரி சம்பியன்

தெல்லிப்பழை கோட்டமட்ட காற்பந்தாட்ட தொடர் அண்மையில் அருணோதய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 18 வயதுப்பிரிவு இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிகள் மோதிக் கொண்டன.

இப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 1:0 என்ற கணக்கில் வெற்றிபெற்று தெல்லிப்பழை கோட்டமட்ட சம்பியனாக தெரிவாகியுள்ளது.

# 2016 ரியோ ஒலிம்பிக் அதிக பதக்கங்கள் வெல்ல முடியும் பிரித்தானியா நம்பிக்கை

2016ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக் போட்டிகளில் அதிக பதக்கங்களை வெல்ல முடியும் என பிரித்தானிய வீளையாட்டு சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.


2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பிரித்தானியா குறிப்பிடத்தக்க அளவு சோபிக்கவில்லை என்ற கருத்து நிலவுகிறது.

எனினும் இந்த பின்னடைவு, 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கை பாதிக்காது என்று, பிரித்தானியாவின் விளையாட்டுத்துறை சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

rio
APPLICANT CITY

## வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வாழ்வில் மறக்க முடியாதவர் நெல்சன் மண்டேலா
## சச்சின் டெண்டுல்கர்



தென் ஆப்ரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா மறைவுக்கு உலகம்முழுவதும் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

விளையாட்டுடன் தொடர்புடைய அவருக்கு விளையாட்டு ஆர்வலர்கள் அனுதாபத்தை தெரிவித்துள்ளனர்.

கிரிக்கெட் சகாப்தமான டெண்டுல்கரும், நெல்சன் மண்டேலா மறைவுக்கு இரங்கல் தெரிவித்து உள்ளார்.

டுவிட்டர் இணைய தளத்தில் அவர் கூறுகையில், நெல்சன் மண்டேலாவை சந்தித்த நாள் என் வாழ்க்கையில் மிகவும் மறக்க முடியாத ஒன்றாகும். உண்மையான தூண்டுதல் மனிதர் ஆவார் என்றும் அவர் எப்போதும் எனது மனதில் வாழ்வார் எனவும் கூறியுள்ளார்.

இதேபோல குத்துச் சண்டை ஜாம்பவான் முகமது அலி, காற்பந்து சகாப்தம் பீலே, கோலப் வீரர் டைகர் உட்ஸ், சர்வேதேச காற்பந்து சம்மேளன தலைவர் பிளாட்டர் ஆகியோர் மண்டேலா மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

தற்போது நடைபெற்று வரும் இந்தியா-தென்னாபிரிக்கா இடையேயான தொடரை அவருக்கு அர்ப்பணிப்பு செய்வதாக தென் ஆபிரிக்க கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

# சிட்னி தண்டர்ஸ் அணியில் மென்டிஸ்



பிக் பாஷ் லீக் இருபது-20 தொடரில் சிட்னி தண்டர்ஸ் அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மென்டிஸ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் 20ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள பிக் பாஷ் லீக தொடரில் சிட்னி தண்டர்ஸ் அணி சார்பாக அனைத்துப் போட்டிகளிலும் பங்குபற்றும் வாய்ப்பு அஜந்த மென்டிஸிற்குக் கிடைத்துள்ளது. சிட்னி தண்டர்ஸ் அணி சார்பாக விளையாடுவது குறித்து இலங்கையின் முன்னாள் உதவிப்பயிற்றுவிப்பாளர் சந்திக்க ஹத்துருசிங்க தன்னுடன் கலந்துரையாடிய போது, அந்த வாய்ப்பைத் தவற விட விரும்பவில்லை எனக் குறிப்பிட்ட அஜந்த மென்டிஸ், இது மிகச்சிறந்த சந்தர்ப்பமாகும் எனக் குறிப்பிட்டார்.

பிக் பாஷ் லீக் தொடரின் வெற்றியை தான் பார்த்துள்ளதாகவும், உலகிலுள்ள சிறந்த வீரர்களுடன் போட்டியிடுவதற்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்த அவர், மைக்கல ஹசி போன்ற வீரர்களுடன் விளையாடக் கிடைத்துள்ளமை மிகச்சிறப்பானது எனவும் குறிப்பிட்டார்.

அஜந்த மென்டிஸ் போன்ற சுழற்பந்து வீச்சாளர் தங்களது அணிக்குக் கிடைத்துள்ளமை சிறந்த பலத்தை வழங்குவதாகத் தெரிவித்த சிட்னி தண்டர்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளர் சந்திக்க ஹத்துருசிங்க, அஜந்த மென்டிஸ் அனைத்து வகையிலான

சிட்னி தண்டர்ஸ் அணி சார்பாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள இரண்டாவது இலங்கை வீரர் இவராவார். இதற்கு முன்னர் இலங்கையின் திலகரட்ண டில்ஷான இவ்வணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

# உலக கோப்பை காற்பந்து அட்டவணை

சர்வதேச காற்பந்து கூட்டமைப்பு நடத்தும் பிபா உலக கோப்பை காற்பந்து போட்டி, பிரேசில் நாட்டில் அடுத்த ஆண்டு ஜூன் 12 ஆம் திகதி தொடங்கி ஜூலை 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் மொத்தம் 32 அணிகள் 8 பிரிவுகளாக முதலில் லீக் ஆட்டங்களில் மோதவுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் இடம்பெறும் அணிகள் மற்றும் லீக் சுற்றுக்கான அட்டவணையை தீர்மானிப்பதற்கான குலுக்கல் பிரேசில் நாட்டின் கோஸ்டா டு சாபே நகரில் இரவு நடந்தது. ஜூன் 12 ஆம திகதி நடக்கும் தொடக்க போட்டியில் A பிரிவில் இடம்பெற்றுள்ள பிரேசில் - குரோஷியா அணிகள் மோதுகி ன்றன.

A பிரிவு பிரேசில் குரோஷியா மெக்சிகோ கேமரூன்
B பிரிவு ஸ்பெயின் நெதர்லாந்து சிலி அவுஸ்திரேலியா
C பிரிவு கொலம்பியா கிரீஸ் ஐவரிகோஸ்ட் ஜப்பான்
D பிரிவு உருகுவே கோஸ்டாரிகா இங்கிலாந்து இத்தாலி
E பிரிவு சுவிட்சர்லாந்து ஈக்வடார் பிரான்ஸ் ஹோண்டுராஸ்
F பிரிவு ஆர்ஜென்டினா போஸ்னியா-ஹெர்சகோவா ஈரான நைஜீரியா
G பிரிவு ஜேர்மனி போர்த்துக்கல் கானா அமெரிக்கா
H பிரிவு பெல்ஜியம் அல்ஜீரியா ரஷ்யா தென் கொரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான ஒருநாள் தொடர் தென்னாபிரிக்க அணி வசம்


இந்திய அணிக கெதிரான 2-வது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 134 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை அவ்வணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

தென்னா பிரிக்காவுக்கு சுற்றுப் பயணமமேற்கொண்டுள்ள இந்திய அணி அங்கு 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் 2-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி டர்பன் கிங்ஸ்மீட ஸ்ரேடியத்தில் நேற்று நடைபெற்றது. 49 ஓவர்களாக குறைக்கப் பட்டிருந்த இந்தபோட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப வீரர்கள் டி ஹொக்கும், அம்லாவும் இந்திய பந்து வீச்சாளர்களுக்கு சிம்ம சொர்ப்பனமாக விளங்கினர்.



12-வது ஒரு நாள் சதத்தைப் பூர்த்தி செய்த மகிழ்ச்சியில் அம்லா...



இந்திய வீரர்களை ஆட்டம் காண வைத்த ரிசொற்சோபேயின் ஒருகாட்சி...



குயின்ரன் டி ஹொக் 3-வது ஒருநாள் சதத்தைப் பூர்த்தி செய்தபோது...

டி ஹொக் 118 பந்துகளில் 106, அம்லா 117 பந்துகளில் 100 ஓட்டங்கள் குவித்து ஆட்டம் இழந்தனர். அடுத்து களம் இறங்கிய வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டம் இழக்க இறுதியில் தென்னாபிரிக்கா அணி 49 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 280 ஓட்டங்கள் குவித்தது.

இந்திய அணி தரப்பில் மொஹமட் சமி அதிகபட்சமாக 48 ரன்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதையடுத்து 281 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய தரப்பில் ரோகித் சர்மா, தவான் களம் இறங்கினார்கள்.

ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே தவான் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டம் இழந்தார். அடுத்து களம் இறங்கிய ஹோலியும் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டம் இழக்க இந்திய அணியின் ஆரம்பமே சறுக்கலாக அமைந்தது.

அடுத்து களம் இறங்கிய வீரர்கள், சர்மா (19), ரஹானே (8), தோனி (19), ரெய்னா (36) அஸ்வின் (15), ஜடேஜா (26), யாதவ் (1), சமி (8) என அனைவரும் தென்னாபிரிக்காவின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் ஆட்டம் இழக்க இந்திய அணி 35.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

தென்னாபிரிக்க அணியில் ரிசொற்சோபே அதிக பட்சமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஸ்ரெயின் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

போட்டியின் நாயகனாக தென்னாபிரிக்க அணி சார்பாக 106 ஓட்டங்கள் குவித்த குயின்ரன் டி ஹொக் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 3-வதும் இறுதியுமான ஒருநாள் போட்டி எதிர்வரும் 11-ம் திகதி சென்சூரியனில் ஆரம்பமாகிறது.

## சர்வதேச ...

போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான உள்ளக விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் வரை பிரித்தானிய அரசு காலக்கெடு விதித்துள்ளது. இலங்கையில் இடம்பெற்ற போர் முடிந்த காலம் தொட்டு போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்த நம்பத்தகுந்த குற்றசாட்டுகள் முன்வைக்கப்பட்ட போதிலும், அவை குறித்து இலங்கை அரசாங்கம் உரிய விசாரணைகளை மேற்கொள்ளத்தவறிவிட்டது. எனவே இலங்கை அரசாங்கத்துக்கு விதிக்கப்பட்ட காலக்கெடு குறைக்கப்பட வேண்டும் என்றும் டக்ளஸ் அலெக்ஸாண்டர் வலியுறுததினார்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணையாளர் கடந்த இரண்டு வருடங்களாக விடுத்து வரும் சர்வதேச விசாரணை தொடர்பிலான கோரிக்கைகளுக்கு பிரித்தானிய தொழிலாளர் கட்சி முழு ஆதரவு அளித்து வருவதை சுட்டிக்காட்டிய டக்ளஸ் அலெக்ஸாண்டர், அந்த செயல்முறை இப்போதே தொடங்கப்பட வேண்டும் எனவும், போர்க்குற்றங்கள் தொடர்பிலான உண்மை, நீதி, பொறுப்புக்கூறல் போன்ற விடயங்களைப் பிற்போடும் எந்த வித முயற்சிகளுக்கும் இடமளிக்கக்கூடாது என்றும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் நியமித்த விசாரணைக்குழுக்கள் அனைத்தும் எதனையும் சாதிப்பதில்லை அல்லது கண்டுபிடித்த விசயங்களைத் தெரிவிப்பதில்லை. மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் எப்போதும் மறுத்து வந்தது. இதை வைத்துப் பார்க்கும் போது சர்வதேச அடையாளம் கொண்டதாயினும் உள்நாட்டு அமைபுக்களால் முன்னெடுக்கப்படும் விசாரணை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

போர்க்குற்றம் தொடர்பில் பிரித்தானியா அண்மையில் வெளியிட்டுள்ள நிலைப்பாடுகுறித்து தமது கட்சி அழுத்தம் கொடுக்கும் என வாக்குறுதி அளித்தார். (எ-4)

## ஆயிரம்...

பகுதியின் பின்தங்கிய நிலை பற்றி பலவேறு உதாரணங்கள் ஊடாக ரவிகரனிடம் சுட்டிக்காட்டினர்.

அத்தோடு பசுமையை நோக்கி என்கிற திட்டம் பற்றியும் அதன் செயலற்ற நிலை குறித்தும் ரவிகரனிடம் எடுத்துக்கூறினர்.

நான் அப்பகுதியை முழுமையாக ஆய்வு செய்த போது சுமார் 1000 ஏக்கர் அளவிற்கு காடழிப்பு இடம்பெறுகிறது. ஒரு பக்கம் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு என்று நிலம் அபகரிக்கப்பட, இன்னொரு பக்கம் பயிர்ச் செய்கைகள என்கிற பெயரில் காடழிக்கப்பட்டு நுட்பமான முறையில் நிலம் அபகரிக்கப்படுகிறது என

(எ-6)

## இந்து சமுத்திரத்தில்...

இந்து சமுத்திரத்தில் இடம்பெறும் மிகப் பெரிய சட்டவிரோத நடவடிக்கையாக இது மாறிவிடும்.

அது மட்டுமல்ல; இந்தியாவின் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும். அண்மையில் எம்.பீ. சீமன்காட் ஒஹியோ என்ற கப்பல் கைது செய்யப்பட்டது.

அதில் நான்கு இனங்களை சேர்ந்த ஆயுதம் தாங்கிய 25 பேர் இருந்தனர். அவர்கள் துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் சட்டவிரோதமாக தூத்துக்குடிக்கு எடுத்துச் சென்றுக் கொண்டிருந்தனர்.

இந்த நபர்கள் வர்த்தக கப்பல்களை கடற்கொள்ளையர்களிடம் இது பாதுகாக்கும் நிறுவனம் என்று கூறப்படும் தனியார் நிறுவனத்தை சேர்ந்தவர்கள். இப்படியான சில நிறுவனங்கள் இந்து சமுத்திரத்தில் இயங்கி வருகின்றன.

சோமாலிய கடற்கொள்ளையர்களிடம் இருந்து வர்த்தக கப்பல்களை பாதுகாப்பதற்காக தெரிவித்து, இலங்கையின் காலிக்கு அப்பால் தொலைவில் உள்ள கடற்பரப்பில் மிதக்கும் ஆயுத களஞ்சியம் இயங்கி வருகிறது. இதனை நடத்தி வரும் முக்கிய நபர்களில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் ஒருவர்.

அவருக்கு சொந்தமான தனியார் பாதுகாப்பு நிறுவனம் இதன் பணிகளை மேற்கொண்டு வருகிறது. முன்னாள் கடற்படைத் தளபதி சோமரத்ன திஸாநாயக்கவும் இந்த நிறுவனத்தில்தான் சேவையாற்றி வருகிறார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவி வகிக்கும் அரச அதிகாரி ஒருவர் தனியார் நிறுவனங்களை நடத்த முடியாது என்ற போதும் பாதுகாப்புச் செயலாளர் சில தனியார் நிறுவனங்களை நடத்தி வருகிறார் என சிங்கள இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட மிதக்கும் ஆயுத களஞ்சியத்திற்கு பிரித்தானிய நிறுவனம் ஒன்றும் ஆயுதங்களை விற்பனை செய்துள்ளதாக அண்மையில் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் தெரியவந்தது. (எ-4)


## மரண அறிவித்தல்

### ஆவரங்கால் சிவன் கோவில் பிரதமகுரு
### சிவஸ்ரீ.வே.நடராஜக்குருக்கள்

ஆவரங்கால் சிவன்கோவிலடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ வேதக்குட்டிகுருக்கள் நடராஜக்குருக்கள் 8.12.2013 ஞாயிற்றுக்கிழமை இரவு 8.45 மணியளவில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் சிவஸ்ரீ வேதக்குட்டிகுருக்கள் புவனேஸ்வரி அம்மா தம்பதிகளின் ஜேஷ்ட புத்திரனும் அமரர் விஜயலட்சுமி அம்மா அவர்களின் அன்புக் கணவரும் நித்தியானந்தினி, சியாமளா, யோகானந்தேஸ்வரக்குருக்கள், சுபாஷினி, காயத்திரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுதாகரக்குருக்கள், ஸ்ரீதரசர்மா, வத்ஸலா, கிருஷ்ணகுமாரகுருக்கள், ஜனார்த்தனசர்மா ஆகியோரின் அன்பு மாமனாரும் கவுஷ்னா, ஹரிமேனன், கேதாரன், சங்கீர்த்தனன், சஞ்சுதன், சதாத்மிகா, சங்கோபிதன், ஹரிகோபிதன், விவிதகோபிகா, கிரிஷிகேசன், ரிஷிவர்மன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், காலஞ்சென்ற தியாகராஜசர்மா, சரண்யபுரீஸ்வர குருக்கள், பார்வதவர்த்தனி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோகிலராணி, பத்மாவதி, முத்துக்குமார சுவாமிக் குருக்கள் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 09.12.2013 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஆவரங்கால் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சிவன்கோவிலடி,
ஆவரங்கால்
0777110971

தகவல்:
சிவஸ்ரீ ந.யோகானந்தேஸ்வரக்குருக்கள்
(மகன்)

(4804)





## சிதம்பர தரிசனம் காண வாரீர்

ஈழத்து சிதம்பர தரிசம் காண வாரீர்
இறையருள் பெருக்கி இன்பமாய் வாழலாம்
நீள நினைந்து சௌந்தராம்பிகை சுந்தரேசனை வழிபட
நினைத்தவை யாவும் நிறைவேறும் வாரீர்
காலனை காலால் உதைத்தவனின் கோலத்தை
காரையெம்பதியில் கண்டாலே முத்திசேரும்
நாளும் நலம்பல பெருக்கிடும் எங்கள் சிவனை
நாமெல்லாம் தொழுதிட சிதம்பரம் செல்வோம் வாரீர்.

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்.

இன்று காரைநகர் ஈழத்துசிதம்பர மார்கழி திருவெம்பாவை ஆரம்பம்.

(சி-5719)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பக்...

அமைச்சின் வவுனியா அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த சில நாட்களாக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டாயக் கருத்தடை இடம் பெற்றதாக வெளிவந்த செய்திகளையடுத்து எமது அமைச்சினால் விசேட மகப்பேற்று மற்றும் பெண்ணோயியல் நிபுணர் அடங்கிய விசேட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் குழுவானது 01.11.2013 அன்று வேரவில், கிராஞ்சி மற்றும் வலைப்பாடு ஆகிய கிராமங்களில் தமது களஆய்வினை மேற்கொண்டது.

கள ஆய்வின்போது அவதானித்த விடயங்கள் வருமாறு,

தேசிய போசாக்கு மாதத்திற்கான வேலைத்திட்டத்தின்போது கிராஞ்சி, வேரவில மற்றும் வலைப்பாடு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய கிராஞ்சி, வேரவில் குடும்ப சுகாதார உத்தியோகத்தர் பிரிவுகளில் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளது ஊட்டம் குறித்த தரவானது மிகக் குறைவாகவே பதிவாகியிருந்தமையால் மேற்படி கிராமங்களை உள்ளடக்கியதான போசாக்கு ஊட்டம் குறித்த தரவுப்பதிவுகள் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் ஆலோசனையின் படி புரட்டாதி மாதம் 30 திகதியன்று மீளவும் மேற்கொள்ளப்பட்டது.

இக்கிராமங்களில் நிரந்தரமான குடும்ப நல உத்தியோகத்தர்கள் கடமையில் இல்லாதமையைக் கருத்திற்கொண்டு, மாவட்ட தாய்சேய் நல வைத்திய அதிகாரி மற்றும் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகளும் அவர்களது பிரிவுகளில் பணியாற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களுடன் இக்கிராமங்களுக்கு குறித்த தினத்தில் வருகைதந்திருந்தனர்.

அவ்வேளையில் போசாக்குத் தரவுப்பதிவிற்கு வருகைதந்திருந்த தாய்மார்களுக்கு சுகாதாரக் கல்வியும் வழங்கப்பட்டது. அப்போது யாராவது குடும்பத்திட்ட முறைகளைப் பாவிக்க விரும்பினால் அவர்களை வேரவில் பிரதேச வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று அதனை வழங்குவதாகக் கூறியுள்ளனர்.

இதற்கமைவ்வாக அங்கு சமூகமளித்திருந்த தாய்மார்களில் சிலர் இக்கருத்தடை முறையை பாவிப்பதற்கு விருப்பம் தெரிவித்து வேரவில் பிரதேச வைத்தியசாலைக்குச் சென்று மேற்படி கருத்தடை சிகிச்சையைப் பெற்றுள்ளனர்.

விசாரித்ததன் அடிப்படையில் குடும்பத்திட்ட முறையினைப் பெற்றுக்கொண்ட தாய்மார்களில் விசாரணைமேற்கொண்ட தினத்தில் சமுகமளித்திருந்த 27 தாய்மார்கள் தங்களின் சுயவிருப்பின்படியே இக்கருத்தடையை பெற்றுக்கொண்டதாகவும் தம்மை யாரும் வலோத்காரம் பண்ணியோ அல்லது பயமுறுத்தியோ அதனைப் பெறவில்லை என்றும் கூறியுள்ளார்கள்.

**குழுவின் சிபாரிசு**

இதேவேளை, நியமிக்கப்பட்ட குழுவினர் விசாரணையின் அடிப்படையில் பின்வரும் அவதானங்களை முன்வைத்துள்ளனர்.

*1. யாரையும் வற்புறுத்தியோ பயமுறுத்தியோ இக்கருத்தடை முறைமையை ஒருவருக்கும் வழங்கவில்லை என்பது தெளிவாகின்றது.*

*2. மேற்படி கருத்தடை சிகிச்சையானது அதிகமானவர்களுக்கு ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் மேற்கொண்டுள்ளதால் சமூகமட்டத்தில் விளம்பரப்படுத்தப்பட்டு தப்பபிப்பிராயம் ஏற்படக் காரணமாயுள்ளது.*

*3. குறித்த தினம் முறையான சுகாதாரக் கல்வி வழங்கப்பட்டபின்னர் தாய்மார் தமது சுயவிருப்பத்தின் பேரில் மேற்படி கருத்தடையை ஏற்றுக்கொண்டாலும் அவர்கள் நிதானமாகச் சிந்தித்து முடிவெடுப்பதற்குரிய கால அவகாசம் வழங்கப்படாமையே குற்ற உணர்வு மற்றும் சமூக நெருக்கீடு ஏற்படக் காரணமாகியுள்ளது.*

*4. எனவே கால அவகாசம் போதுமானதாக இருந்திருந்தால் இக்கருத்தடை முறையினை பெற்றுக்கொண்டவர்கள் சமூக மட்டத்திலும் வீட்டிலும் நன்றாகக் கலந்தாலோசித்து நேரான சிந்தனையுடன் செயற்பட்டிருப்பார்கள். மேலும் பத்திரிகைகள், இணையத்தளங்களில் பிரசுரமான தவறான கருத்துக்கள் ஏற்படாது தடுத்திருக்கலாம் என இக்குழு கருதியிருந்தது.*

மேற்படி குழுவினரது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சு பொறுப்புக்கூறுதல், அடிப்படைச் சுகாதார வசதிகள் மற்றும் மகளிர் இனப்பெருக்க சுகாதார உரிமை என்பவற்றை உறுதிப்படுத்துமுகமாக பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டு உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருகிறது.

சகல குடும்பத்திட்ட முறைகள் (நிரந்தர மற்றும் தற்காலிக) தொடர்பிலான பயனாளர் தகவல்கள் தமிழ்மொழியில் வழங்குதல்.

குடும்பத்திட்ட முறைகளை வழங்கும் போது பயனாளர்கள் தமது குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து முடிவுகளை மேற்கொள்ள போதிய கால அவகாசம் வழங்குதல்.

குடும்பத்திட்ட சேவைகளை வழங்கும் போது ஒருதடவையில் பெரும்தொகையினருக்குச் சேவை வழங்குவதை முற்றாகத் தவிர்த்தல்

நடைமுறையிலுள்ள குடும்பத்திட்ட முறைகள் தொடர்பான தமிழ்மொழிமூலத் தகவல்களை அனைத்து சுகாதார நிலையங்களிலும் பார்வைக்கு வைத்தல்.

குடும்பத் திட்ட சுகாதாரக் கல்வி வழங்குதல் தொடர்பில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு விசேட பயிற்சிவகுப்புகளைச் சுகாதாரக்கல்விப் பணியகம் மற்றும் குடும்ப சுகாதாரப் பணியகம் ஆகியவற்றின் ஊடாக வழங்குதல்

மகளிர் இனப்பெருக்க சுகாதார உரிமை தொடர்பிலான விசேட பயிற்சிகளைப் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல்.

இதேவேளை சுகாதார அமைச்சு பின்வரும் விடயங்களைத் தெளிவாக்க விரும்புகிறது

*1. ஒரு சிறிய கிராமப்பகுதிக்கு இவ்வாறு பெரும்தொகையான சுகாதார உத்தியோகத்தர்கள் ஒரே நாளில் சென்று குடும்பத்திட்ட முறைகளை அறிமுகப்படுத்தியமை முற்றாகத் தவிர்த்திருக்கவேண்டிய விடயமாக அமைச்சு கருதுகிறது.*

*2. இவ்வாறான சம்பவங்கள் எதிர்வரும் காலங்களில் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தும் விதமாக அமைச்சு திணைக்கள நடைமுறைகள் ஊடாகப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.*

*3. போருக்குப் பின்னரான இந்தக் காலப் பகுதியில் போரினால் உயிரிழப்புக்களைச் சந்தித்த எமது பிரதேசங்களில் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை ஊக்குவிப்பதற்கான அவசியமோ அவசரமோ தற்போது இல்லை என அமைச்சு கருதுகிறது.*

*4. இருந்தபோதும் குடும்பதிட்டமிடல் தொடர்பான ஆலோசனைகள் தேவையுடையோர் அவற்றை சுகாதார நிலையங்களில் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்யப்படல் வேண்டும்.*

*5. கிராஞ்சி, வேரவில் மற்றும் வலைப்பாடு ஆகிய கிராமங்களில் பயன்படுத்தப்பட்டது ஒரு தற்காலிக குடும்பத்திட்ட (கருத்தடைச்) சாதனம்.*

*6. இது இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் பாவனையில் உள்ள ஒரு குடும்பத்திட்ட சாதனம்.*

*7. இதனை ஆகக் கூடியது ஐந்து வருடங்கள் ஒருவர் பயன்படுத்தலாம்.*

*8. இதனை உடலில் பதித்துக்கொண்ட எந்தவொரு தாயாரும் அதனை மீள எடுத்துவிட விரும்பினால் தத்தமது கிராமங்களுக்குரிய மருத்துவ மாதுக்களுடன் தொடர்புகொள்வதன் மூலம் உடனடியாக அதனை மேற்கொள்ளமுடியும். இதற்காகக் கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை.*

(எ-4,250, 266)

# கென்ய...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட்டுள்ள நிலையிலேயே, இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

2007ஆம் ஆண்டில் இடம்பெற்ற மோசமான வன்முறைகள் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கென்ய ஜனாதிபதி உஹுறு கென்யாடா விசாரணைகளை எதிர்கொண்டுள்ளார்.

கொழும்பில் கடந்த மாதம் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டில் கென்ய ஜனாதிபதி உஹுறு கென்யாடா பங்கேற்றிருக்கவில்லை. கென்யா சுதந்திரம் பெற்ற பின்னர், பொதுநலவாய மாநாடு ஒன்றில் அதன் தலைவர் பங்கேற்காது விட்டமை இதுவே முதல்முறையாகும்.

இந்நிலையில், இலங்கை ஜனாதிபதி என்ற வகையில் மட்டுமல்லாது, பொது நலவாய அமைப்பின் தலைவர் என்ற வகையிலும் மகிந்த ராஜபக்ஷ கென்யாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கென்ய ஜனாதிபதி உஹுறு கென்யாடாவுக்கு எதிரான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைகளுக்கு எதிராக எந்த பொதுநலவாய அமைப்பு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கென்யா ஏற்கெனவே கவலை வெளியிட்டிருந்தது.

கென்ய ஜனாதிபதி உஹுறு கென்யாடாவுக்கு எதிரான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை மீதான போர்க்குற்ற சர்வதேச விசாரணையைக் கோரும் தீர்மானம் எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் கொண்டு வரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# கிணற்றினுள்...

விழுந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிணற்றிலிருந்து சடலத்தை அச்சுவேலி பொலிஸார் மீட்டுள்ளனர். (எ-4)

# மரண அறிவித்தல்

## ஜோண் திரவியம்

ஜோண் திரவியம் காலமானார். இவர் சென். பற்றிக்ஸ் வீதியில் வசித்தவரும் காலம்சென்ற ஜோண் செல்லமுத்துவின் அன்பு மகனும் காலம் சென்ற ஜோண் முத்துக்குட்டியின் அன்பு மருமகனும் ராசாத்தி அம்மாவின் அன்புக் கணவரும் ரெட்ணசிங்கம், செல்வசிங்கம், சுசிலா, மெக்கன்சி சறோ, பாஸ்கரன், யூஜினா ஆகியோரின் பாசமிகு தகப்பனும் சோதி, செல்லமணி, முத்துலிங்கம் விஜிதா, சாந்தமலர், பவளம், விஜயன் ஆகியோரின் மாமனாரும் வசந்தன், தர்ஷினி, கோசலா, மலரவன், வினோத், அச்சுதன், எடிசன சரிதா, சாதனா, சோபனா, சரணியா, சசி, இலங்கேஸ்வரி, சோபநிறோ, கேதீஸ், கிளின்ரன், கிளச்சன், போல், கீர்த்தனா, ராஜேஸ்வரி, காலஞ்சென்ற இலங்கேஸ்வரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.12.2013) மாலை 2 மணிக்கு புனித அந்தோனியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

கரவெட்டி கிளான்,
சாவகச்சேரி றோட்,
கரவெட்டி.

தகவல்
- ரெட்ணசிங்கம் -
(மகன்)

(C-5723)

PERSONAL CLASSES
தமிழ் / ஆங்கில மொழி மூலம்
G.C.E (A/L)
CHEMISTRY
தொடர்பு: 0773198263
(4803)

தரம் 6 முதல் 11 வரையான வகுப்பு மாணவர்களுக்கான கணித பாடத்துக்குரிய
பிரத்தியேக வகுப்புகளுக்கு
தொடர்பு:
0776544025
(C-5721)

விற்பனைக்கு
Computer Center க்கு தேவையான அனைத்துப் பொருட்களும் விற்பனைக்கு உண்டு.
Lecturer Hall Chairs, Computer Chair மற்றும் பல தளபாடங்கள். தொடர்பு:
0773631559
(C-5718)

Arts மாணவர் Campus செல்ல
யாழ். பிரபல ஆசிரியர்கள் (20 வருட Tution அனுபவம்)
தனி / குழு கற்பித்தலுக்கு
நகரில் / வீட்டுக்கு வந்து A சித்திக்கு கற்பிப்பர்.
(4700)
0772848223

வேலைவாய்ப்பு
அரச துறை, தனியார் துறை மற்றும் NGOகளில் தற்போது கோரப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு..
கோலாசிற்றி 021 320 2787
தொழில் வங்கி
224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்)
இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்
200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-5711)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org